# தமிழ் வையை

(சங்கநூற் காட்சிகள்)

★

கி. வா. ஜகந்நாதன்

★

அமுத நிலையம் லிமிடெட்.,

அமுதம்—61
உரிமை பதிவு
முதற் பதிப்பு, மார்ச்—1953

# முகவுரை

**த**மிழில் உள்ள பாக்கள் நான்கு வகைப்படும். வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்ற பெயருடையன அவை. இவற்றிற் பல வகையும், இவற்றிற்கு இனமான செய்யுட்களும் உண்டு. இவற்றை யன்றி வெண்பாவும் ஆசிரியப்பாவும் இணைந்து வந்த மருட்பா என்று ஒருவகைப் பா உண்டு. அது குறிப்பிட்ட சில பொருள்களைப் பாடுவதற்காக மட்டும் பயன்படுவது; ஆகையால் மிகவும் அருமையாகவே காணப்படும். மேலே சொன்ன நான்கு வகைப் பாக்களும் பழங் கால முதல் இன்றுவரை வழங்கி வருகின்றன.

ஆனால் பழங் காலத்தில் வழங்கி வந்த வேறு ஒருவகைப் பாடல் பிற்காலத்தில் வழக்கில் இல்லாமல் போய்விட்டது. முதற் சங்க காலத்தில் அவ்வகையான பாடல்கள் மிகுதியாக இருந்தனவாம். **பரிபாடல்** என்ற பெயருடைய அப்பாடலுக்குரிய இலக்கணம் **தொல்காப்பியத்தில்** இருக்கிறது. 'எத்துணையோ பரிபாடல் முதற் சங்க காலத்தில் இருந்தன' என்று **இறையனார் அகப்பொருள்** உரையாசிரியர் கூறுவர் (1, உரை.) இடைச் சங்க காலத்திலும் பல பரிபாடல்களைப் புலவர்கள் பாடியிருக்க வேண்டும். இடைச் சங்கத்துக்கு இலக்கணமாக வழங்கிய தொல்காப்பியத்தில் பரிபாடலுக்குரிய இலக்கணம் இருப்பதால், இலக்கியமும் இருந்தது என்று தெரிகிறது. கடைச் சங்க காலத்தில் தொகுக்கப்பெற்ற எட்டுத் தொகை நூல்களில் எழுபது பரிபாடல்கள் அடங்கிய தொகுதியும் ஒன்று. அதற்குப் **பரிபாடல்** என்பதே பெயர். கடைச் சங்க காலத்துக்கு அப்பால் பரிபாடலைப் பாடுபவர்களே இல்லை. இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றிய **பாப்பாவினம்** என்ற நூலில் மாத்திரம் ஐந்து பரிபாடல்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பாவுக்கும் பாவினத்துக்கும் உதாரணமாகச் செய்யுட்களைப் பாடி அமைத்த நூல் அது. ஆதலின் வழக்கற்றனவானாலும் மாதிரிக்காக ஐந்து பரிபாடல்களைப் பாடிச் சேர்த்திருக்கிறார், அதன் ஆசிரியர். அவற்றோடுள்ள குறிப்புகளில் பரிபாடலின்

இலக்கணமும், மேற்கோளாகச் சில அகத்தியச் சூத்திரங்களும் உள்ளன. பிற்காலத்து யாப்பிலக்கண நூல்களில் பரிபாடலுக்குரிய இலக்கணம் இல்லை.

பரிபாடல் என்பது வெண்பா முதலிய நால்வகைப் பாக்களின் அடிகளும் விரவி வரும் ஒருவகை இசைப்பாடல் 'கலியும் பரிபாடலும் போலும் இசைப் பாட்டாகிய செந்துறை மார்க்கத்தன' (**தொல்காப்பியம்**, செய்யுளியல், 242) என்று **பேராசிரியர்** எழுதுவர். தனக்கென்று வரையறையாக அடியிலக்கணம் இன்றி எல்லாப் பாடல்களின் அடிகளும் வந்து நெகிழ்வுடன் வருவதால் பரிபாடல் என்ற பெயர் உண்டாயிற்று. பரிதல் - தளர்தல்; நெகிழ்தல். 'பரிபாடல் என்பது பரிந்து வருவது; அது கலியுறுப்புப் போலாது நான்கு பாவானும் வந்து பல அடியும் வருமாறு நிற்குமென்று உணர்க' (**தொல்காப்பியம்**, செய்யுளியல், 118, உரை) என்பது **நச்சினார்க்கினியர்** கூறும் விளக்கம். இது பெரும்பாலும் காம இன்பம் குறித்து வரும். சிறுபான்மை இன்னது வேண்டும் என்ற பிரார்த்தனையை உடையதாகி வரும்.*

★

எட்டுத் தொகை நூல்களில் கலித்தொகை, பரிபாடல் என்ற இரண்டு நூல்களும் பாட்டால் பெயர் பெற்றவை. கலிப்பாக்களால் ஆனமையால் கலித்தொகை என்றும், பரிபாடலால் அமைந்தமையால் பரிபாடல் என்றும் அவ்விரண்டு நூல்களுக்கும் முறையே பெயர்கள் வந்தன. பரிபாடலில் எழுபது பாடல்கள் இருந்தன என்று உரையாசிரியர்கள் எழுதியிருக்கிறார்கள்.†

**திருமாற்கு இருநான்கு, செவ்வேட்கு முப்பத்**
**தொருபாட்டுக் காடுகாட்கு ஒன்று —மருவினிய**

* "காமம் கண்ணிய நிலைமைத் தாகும்" (தொல். செய்யுள் இயல், 121); 'என்பது காமப் பொருள் குறித்து வருமென்றவாறு. கண்ணிய என்றதனானே, முப்பொருளுமன்றிக் கடவுள் வாழ்த்தினும் மலைவிளையாட்டினும் புனல்விளையாட்டினும் பிறவுமெல்லாம் காமம் கண்ணியே வரும் என்பது' (பேராசிரியர்.)

† இறையனாரகப் பொருள், 1, உரை; தொல். செய். 149, பேர்.

வையைஇரு பத்தாறு, மாமதுரை நான்குஎன்ப,
செய்யபரி பாடல் திறம்

என்ற பழம் பாடலால் திருமாலைப் பற்றிய பாடல்கள் எட்டும், முருகனைப் பற்றியவை முப்பத்தொன்றும், துர்க்கையைப் பற்றியது ஒன்றும், வையையின் புகழ் பேசும் பாடல்கள் இருபத்தாறும், மதுரையைப் பற்றியவை நான்கும் இந்தத் தொகை நூலில் இருந்தன என்று தெரிய வருகிறது. இப்போது நமக்குக் கிடைக்கும் புத்தகத்தில் 22 பாடல்களும், பழைய உரையாசிரியர்கள் மேற்கோளாகக் காட்டும் இரண்டு பாடல்களுமாக 24 பாடல்களே எஞ்சியுள்ளன. இந்த இருபத்து நான்கில் திருமாலைப் பற்றியவை ஏழு; முருகனைப் பற்றியவை எட்டு; வையையைப் பற்றியவை ஒன்பது. இந்தத் தொகை நூலைத் தொகுத்த புலவர் இன்னாரென்பதும், தொகுக்கும்படி வேண்டியவர் இன்னாரென்பதும் தெரியவில்லை.

பரிபாடலைத் தேடி எடுத்துப் பரிசோதித்துப் பரிமேலழகர் உரையுடன் தாம் எழுதிய அருங் குறிப்புக்களையும் சேர்த்து 1918-ஆம் ஆண்டில் என்னுடைய ஆசிரியப்பிரானாகிய **மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள்** வெளியிட்டார்கள். அப்பால் 1935-ஆம் ஆண்டில் பொருட் சுருக்கத்தையும் சேர்த்து இரண்டாம் பதிப்பை வெளியிட்டார்கள். அந்தப் பதிப்பு நடைபெறும் பொழுது உடனிருந்து பணிபுரியும் பேறு எளியேனுக்குக் கிடைத்தது.

சங்க காலத்து மக்கள் கடவுளை வழிபட்ட முறை கடவுளைப் பற்றி அவர்கள் அறிந்த செய்திகள் முதலியவற்றைத் தெரிந்து கொள்ளத் தொகை நூல்களில் அங்கங்கே உள்ள சில அடிகள் உதவுகின்றன. கடவுள் வாழ்த்தாக அந்நூல்களில் உள்ள முழுப் பாடல்களிலிருந்தும் பல செய்திகள் தெரியவருகின்றன. பத்துப் பாட்டில் உள்ள திருமுருகாற்றுப்படை கடவுளைப் பற்றிய பெரிய பாட்டு.

பரிபாடல் ஒன்றில்தான் கடவுளைப் பற்றிய பல பாடல்களை ஒருங்கே காண முடிகிறது. திருமால், முருகன்

என்னும் இருவரைப் பற்றிய அற்புதமான பாடல்களைப் பரிபாடலில் காணலாம். திருப்பரங்குன்றம், திருமாலிருஞ் சோலை மலை, இருந்தையூர், மதுரை ஆகிய ஊர்களைப் பற்றிய வருணனைகளும் அவற்றில் வருகின்றன. இப்பொழுது கிடைக்கும் பாடல்களின் சிறப்பை உணரும்போது, கிடைக் காமற் போன பாடல்களில் இன்னும் என்ன என்ன அருமை யான செய்திகள் இருந்தனவோ என்று எண்ணி இரங்க நேர்கிறது.

பரிபாடலில் உள்ள ஒவ்வொரு பாடலுக்கும் உரிய துறையும் அதைப் பாடிய புலவரின் பெயரும் அப்பாடலுக்கு இசை வகுத்த புலவரின் பெயரும் இன்ன பண்ணிற் பாடு வதற்கு உரியது என்பதும் அவ்வப் பாடலின் பின்னே உள்ள குறிப்புக்களால் அறியலாம்.

★

இந்தப் புத்தகத்தில் இரண்டு பாடல்களுக்குரிய விளக் கத்தைக் காணலாம்.* திருமாலைப் பற்றிய நான்காம் பரி பாடலும், வையையைப் பற்றிய ஆறும் பரிபாடலும் இதில் உள்ளன. முதற் பாட்டு, புறப்பொருளில் கடவுள் வாழ்த்து என்னும் துறையைச் சார்ந்தது. அடுத்தது அகப்பொருளில் மருதத்திணையில் தலைவி வாயில் மறுத்தது என்னும் துறை யைச் சார்ந்தது. திருமாலைப் பற்றிய பாட்டு 73 அடிகளால் ஆகியது; வையையைப் பற்றியது 106 அடிகளை உடையது. ஆக இப் புத்தகத்தில் 179 அடிகளுக்குரிய விளக்கம் இருக் கிறது. இவ்விரண்டையும் முறையே பாடியவர்கள் கடுவன் இள எயினனார், ஆசிரியர் நல்லந்துவனார் என்போர். கடுவன் இள எயினனார் இந்தப் பாடலையன்றித் திருமாலைப் பாடிய மற்றொரு பாட்டும், முருகக் கடவுளைப் பாடிய பாட்டு ஒன்றும் பரிபாடலில் இருக்கின்றன. ஆசிரியர் நல்லந்துவனார் வையையைப் பற்றிப் பாடிய வேறு இரண்டு பாடல்களும், முருகக் கடவுளைப் பற்றிப் பாடிய பாடல் ஒன்றும் அத்தொகை நூலில் உள்ளன. கலித்தொகையில் உள்ள நெய்தற்கலியை இயற்றியதோடு, அந்த நூலைத் தொகுத்தவரும் இவரே.

* ''பாயிரும் பனிக்கடல்'' என்ற 5-ஆம் பரிபாடலின் விளக்கத்தை, ''பெரும் பெயர் முருகன்'' என்ற புத்தகத்தில் சேர்த்திருக்கிறேன்.

பரிபாடலில் கடவுள் வாழ்த்தாக வரும் செய்யுட்கள் உபநிடதங்களைப் போல நுட்பமான பொருள்களை உடையவை. வேதத்தில் உள்ள கருத்துக்கள் பலவற்றை அவற்றிலே கண்டு மகிழலாம். பரிமேலழகர் தம் உரையிடையே சில இடங்களில் வேதக் கருத்தை நினைப்பூட்டுகிறார்.

★

கடுவன் இள எயினனார் பாட்டில் திருமாலின் பெருமை பல வகையில் அமைந்திருக்கிறது. அவன் திருவவதாரங்களின் சிறப்பு, அவனுடைய திருவுருவ எழில், அவன் எங்கும் எப்பொருளிலும் கலந்து நிற்கும் நிலை, பல தெய்வங்களாகவும் நிற்கும் இயல்பு, அவனுடைய அடியார் தன்மை, அடியாருக்கு அப்பெருமான் எளியனாய் நிற்கும் திறம் முதலியவற்றைப் புலவர் விரித்துரைக்கிறார்.

திருமாலினுடைய திருமேனி நீல மணியைப் போலவும், அலையடங்கிய கடலைப் போலவும், சூல் கொண்ட முகிலைப் போலவும் ஒளிர்கின்றது. அவனுடைய திருமார்பில் திருமகளே மறுவாக எழுந்தருளியிருக்கிறாள். துழாய் நறுங் கண்ணியை அப்பெருமான் அணிந்திருக்கிறான். அவன் திருவிழிகள் தாமரையைப் போல உள்ளன; செங்கட் செல்வன் அவன். அவனுடைய திருவுந்தியிலிருந்து தாமரை தோன்றுகிறது. அவன் திருவிடையில் பொன்னாடை பளபளக்கிறது. அவன் திருக்கரத்தில் சக்கரப்படை விளங்குகிறது. அவனுடைய கொடி கருடன். அவனுடைய திருவடியே அடியார்களுக்குப் பற்றுக் கோடாதலால் அது அவனைக் காட்டிலும் சிறப்புடையதாகத் தோன்றுகிறது.

அவன் குணப் பெருங்கடல். அருள் நிரம்பியவன். அவனிடமிருந்து எல்லாப் பொருள்களும் தம் தம் இயல்புகளைப் பெற்றன. சூரியனுடைய வெப்பமும் ஒளியும், சந்திரனுடைய தண்மையும் மென்மையும், மழைக்குரிய சுரத்தலும் வண்மையும், பூமியின் காப்பும் பொறுமையும், காயாம்பூவின் மணமும் பொலிவும், நீரின் தோற்றமும் விரிவும், ஆகாயத்தின் உருவமும் ஒலியும், காற்றின் வருகையும் ஒடுக்கமும் எல்லாம் அவனிடமிருந்து வந்தவையே.

அவன் அறஞ் செய்வாருக்கு இன்பமும், மறம் புரிவாருக்குத் துன்பமும் அளித்தாலும் அவை இரண்டும் விருப்பு வெறுப்பால் அளிப்பன அல்ல. அவனுக்குப் பகைவரும் இல்லை; நண்பரும் இல்லை. அவனுக்கென்று வடிவும் இல்லை. ஆயினும் அடியார் நினைத்த வடிவிலே எழுந்தருளி வருவான். ஆலமரத்தினடி முதலிய இடங்களில் வெவ்வேறு பெயரோடு மக்கள் வணங்கும் தெய்வங்கள் பலவாக இருப்பவனும் அவனே.

அவனுடைய அடியார் புலப்பகையை வென்றவர்; உயிர்களிடத்தில் அன்புடையவர். அவனை அவர்கள் பலவாறு தொழுது ஏத்துகின்றனர். ஆயினும் அவனை முற்றப் புகழ்வது இயலாத காரியம். அடியார்கள் கும்பிடும் கைக்குள்ளே அடங்கி அவர்களுக்கு ஏவலாளனைப் போல இருந்து அவர்களைப் பாதுகாக்கும் பேரருள் படைத்தவன் அவன்.

இரணியனைக் கொன்று பிரகலாதனுக்கு அருள்புரியும் பொருட்டு நரசிங்க அவதாரம் எடுத்தான். உலகத்தை எடுக்கும் பொருட்டு வராகாவதாரம் செய்தான்.

இறைவனுடைய அடியாரை ஆர்வலர் (2, 70) என்று குறிக்கின்றார் புலவர். பிரகலாதனைப் பிருங்கலாதன் என்று சொல்கிறார். ஐம்பொறிகள் வாயிலாகச் செல்லும் அவாவை ஐந்திருள் என்பர். 'நாங்கள் உன்னைப் புகழ்வதைக் கண்டு நீ நகை செய்வாய். ஆயினும் நாங்கள் எங்கள் ஆர்வத்தால் துதிக்கப் புகுகின்றோம்' என்று பாட்டின் தொடக்கத்தில் சொல்கிறார். நரசிங்காவதாரத்தைப் பற்றிச் சொல்லும் போது, இறைவன் தோன்றிய தூண் பிளந்து அதன் துண்டுகள் கீழே விழும்பொழுதே இரணியனுடைய உடலைப் பிளந்த துண்டுகளும் உடன் விழுந்தன என்று பாடுகிறார். இரணிய சங்காரத்தின் வேகம் இதனால் புலப்படுகிறது.

கருடனைப் பற்றிச் சொல்கையில் அவன் பாம்பைப் பல வகையில் பயன்படுத்திக் கொள்வதை வருணிக்கிறார். பனை, கலப்பை, யானை என்னும் பிற கொடிகள் திருமாலுக்கு இருந்தாலும் கருடக் கொடியே மிகச் சிறந்ததென்கின்றார்.

**" நினக்கு, மாற்றோரும் இலர் கேளிரும் இலர் "**

என்ற அடி வேண்டுதல் வேண்டாமை இல்லாத இறைவனுடைய பொது நிலையைச் சொல்கிறது.

"நின்னிற் சிறந்த நின் தாளிணையவை"

என்பது அவனுடைய திருவடிப் பெருமையைப் புலப்படுத்தும் அழகான பகுதி. திருவடிச் சிறப்பைப் பலவகையில் பிற புலவர்கள் பாராட்டியதுண்டு. அவை யாவற்றையும்விட இது மிக்க பொருட்செறிவுள்ளதாக விளங்குகிறது.

இறைவனைப் பக்திக்கு அகப்படுபவன் என்று சொல்வர் அதனை இப்புலவர்,

"நின் ஆர்வலர்
தொழுத கை அமைதியின் அமர்ந்தோயும் நீயே"

என்று சுவைபடப் புலப்படுத்துகிறார்.

"இவ்வும் உவ்வும் அவ்வும் பிறவும்
ஏமம் ஆர்ந்த நிற்பிரிந்து
மேவல் சான்றன எல்லாம்"

என்னும் அடிகளும்,

"போற்றார் உயிரினும் போற்றுநர் உயிரினும்
மாற்று ஏம்ஆற்றல் இலையே"

என்பவையும்,

"மனக்கோள் நினக்கென வடிவு வேறு இலையே"

என்பதும்,

"அவ்வவை மேய வேறு வேறு பெயரோய்
எவ்வயினோயும் நீயே"

என்னும் அடிகளும் கடவுளின் பொது இயல்புகளை எடுத்துக்காட்டும் நுண்பொருளையுடைய பகுதிகள்.

★

**வை**யையைப் பற்றிப் பாடப் புகுந்த நல்லந்துவனார் முதலில் மழை பெய்வதைச் சொல்லி, அப்பால் மலையிலே

அருவிகளில் நீர் மிக வருவதையும் அது நிலத்திற் படர்ந்து ஆற்றிலே கலப்பதையும் சொல்கிறார். பிற்காலத்துக் காவியங்களில் முதலில் மழை பெய்தலையும் ஆறு பெருகுவதையும் அதனால் நாடு வளம் பெறுதலையும் புலவர் சொல்லும் மரபு இங்கே நினைவுக்கு வருகின்றது.

வையையில் வெள்ளம் வருகிறது. அதைக் கண்டு காவலர்கள் அதன் கரைகளைப் பாதுகாக்கும் பொருட்டுப் பறையறைகின்றனர். மதுரைமா நகரில் உள்ளவர்கள் நீர் விளையாட்டுக்காகப் புறப்படுகின்றனர். இப் பாட்டின் முதற் பகுதி வையையில் நடைபெறும் நீர் விளையாட்டை வருணிக்கிறது. ஆடவரும் மகளிரும் நீரில் விளையாடும் பொருட்டுக் கூட்டமாகப் போவதும், நீர் விளையாட்டு நிகழ்த்துவதும், அவர்கள் விளையாடுவதால் நீர் தன் இயல்பு மாறி வேறு மணத்தை வீசுவதும் பாட்டில் வருகின்றன.

பாட்டின் பிற்பகுதியில் காதற்பரத்தைக்கும் தலைவனுக்கும் இடையே நிகழும் வாக்குவாதத்தையும், அப்பால் அவள் ஊடல் தீர்ந்து அவனோடு மகிழ்வதையும், தலைவி எல்லாச் செய்திகளையும் விறலியிடம் கூறுவதையும் புலவர் சொல்கிறார்.

இந்தப் பாட்டிலிருந்து, அக் காலத்தில் மக்கள் இன்ப வாழ்வு பெற்று வாழ்ந்த வகையும் நாகரிக நலம் சிறந்து விளங்கிய சிறப்பும் வேறு செய்திகளும் தெரிய வருகின்றன.

ஆற்றில் வெள்ளம் வந்தால் அதற்குத் தூபதீபம் காட்டிப் பூசை செய்து நிவேதனம் செய்வது பழைய தமிழர் வழக்கம். இறைவன் எழுந்தருளியிருக்கும் தலத்தைச் சுட்டி ஆணையிடுவர். இந்தப் பாட்டில் தலைவன் திருப்பரங்குன்றத் தின்மேல் இரண்டு முறை ஆணையிடுகிறான்.

நீராடுவதற்கென்றே தனிப்பட்ட ஆடைகளையும் பிற அலங்காரங்களையும் ஆடவரும் மகளிரும் அக்காலத்தில் புனைந்தார்கள். இதை **ஈரணி** என்று புலவர் குறிப்பிடுகிறார். தோள்வளை, மணிமாலை முதலியவற்றை மக்கள் அணிந்தனர். ஆடவர் மார்பில் அணிந்த மாலையைத் தார் என்றும், மகளிர் அணிந்ததைக் கோதை யென்றும் சொல்வர். மார்பிலும் தோளிலும் தொய்யில் எழுதி, நகத்திலும்

கன்னத்திலும் செந்நிறம் ஊட்டி, மார்பில் சந்தனம் பூசி அழகு செய்து கொண்டனர் மகளிர்.

நீர் விளையாட்டு நிகழ்த்தும்போது நெட்டியாலான தெப்பத்தை மிதக்க விட்டு விளையாடினார்கள். நிறம் ஊட்டிய நெட்டியால் தேரைப் போலச் செய்து அதனை நீரில் விட்டு விளையாடினர். தாம் அணிந்த சாயமும் சந்தனமும் அழியவும், அணிகள் ஒன்றோடொன்று கலக்கவும் ஆடவரும் மகளிரும் நீராடி இன்புற்றனர். ஒருவர்மேல் ஒருவர் மண நீரையும், புனுகையும் வீசி விளையாடினர். இதற்காகத் துருத்திகளையும் கொம்பையும் கொண்டு போனார்கள். நீர் வீசு கருவியைச் சிவிறி என்று வழங்கினர்.

நீரில் விளையாடும் நகர மாந்தரோடு சேர்ந்து நீரில் இறங்கி விளையாடும் உரிமை சிலருக்கு இல்லாமல் இருந்தது. கரையிலிருந்தே பலர் நீர் விளையாட்டைக் கண்டு களித்தனர்.

திருப்பரங்குன்றத்தில் அருவி தாலாட்டவும் காற்றுப் பாராட்டவும் இரவிலே காதலர் தங்கி இன்புற்றனர். புலவர்கள் அருவியையும் ஆற்றையும் பாடினார்கள். வையை தமிழ்ப் பாடலாற் சிறப்படைந்தமையால் அதனைத் **தமிழ் வையை** என்று பாராட்டுகிறார் நல்லந்துவனார்.

'பல காலமாகக் குற்றமற்ற புலவர்கள் பாடிய பாட்டுப் பொய்யாகாமல் மழைநீர் வெள்ளமாக மலை அடிவாரத்தில் பரந்து ஓடியது' என்று புலவர்களுடைய திருவாக்கின் பெருமையை ஓரிடத்தில் நினைவூட்டுகிறார் ஆசிரியர்;

**" மாசில் பனுவற் புலவர் புகழ்புல**
**நாவிற் புனைந்த நன் கவிதை மாறாமை**
**மேவிப் பரந்து விரைந்து வினை நந்தத்**
**தாயிற்றே தண்ணம் புனல்."**

வையை யாறு அணையை உடைத்துக் கொண்டு பாய்ந்ததாம். அதற்கு உவமை கூற வருகிறார் புலவர். வெள்ளத்தைக் கண்ட காதலர்களுடைய ஆசை எப்படிக் கட்டுக்கு

அடங்காமல் மீறுமோ அப்படி அணையை உடைத்தது என்று இடத்திற்கு ஏற்றபடி உவமை கூறி விளக்குகிறார்;

" விருப்பொன்று பட்டவர் உளம் நிறை உடைத்தென
வரைச்சிறை உடைத்ததை வையை."

தலைவனிடம் ஊடல் கொண்ட காதற் பரத்தை அவன் இற்பரத்தையோடு நீராடினான் என்று சொல்லும்போது இப்படியே இடத்துக்கு ஏற்ற உவமை ஒன்று வருகிறது. 'ஓடுகின்ற ஆற்றில் செல்லும் தெப்பக் கட்டையைப் போல யார் யார் கைப்பற்றிக் கொள்ளும் ஆற்றல் உடையவர் களோ அவர்களுக்கெல்லாம் தெப்பமாக உதவும் மார்பை உடையாய் நீ' என்று காதற்பரத்தை சொல்கிறாள்;

" செல் யாற்றுத் தீம்புனலிற் செல்மரம் போல
வவ்வுவல்லார் புணை ஆகிய மார்பினை."

இப்படியே, 'வையையில் உடைந்த மடையை அடைத்து விட்ட பிறகும் பின்னும் வரும் ஊற்று நீரைப் போல, முன்பு அவர்கள் பட்ட துன்பம் போகும்படி அவர்களோடு நீராடிய பிறகும் மறுபடியும் அவர்கள் வருந்தும்படி நீ இங்கே ஏன் வந்தாய்?' என்று அவள் சொல்வதிலும் இத்தகைய உவமை அமைந்திருக்கிறது:

" வையை உடைந்த மடை அடைத்தக்கண்ணும்
பின்னும் மலிரும் பிசிர்போல இன்னும்
அனற்றினை துன்பு அவிய நீ அடைந்தக்கண்ணும்
பனித்துப் பனி வாரும் கண்ணவர் நெஞ்சம்
கனற்றுபு காத்தி வரவு."

தலைவி தலைவன் நிகழ்த்தியவற்றைச் சொல்லிவிட்டுக் கடைசியில் வேகமாகப் பேச்சை முடிக்கிறாள். அந்த வேகம் அவளுடைய பேச்சிலே ஒலிக்கிறது;

" களிப்பர், குளிப்பர், காமம் கொடிவிட
அளிப்ப, துனிப்ப, ஆங்காங்கு ஆடுப."

ஓரடியில் முதலெழுத்தையன்றி மற்ற எழுத்துக்கள் பல ஓரே மாதிரி வந்தால் பாட்டில் எதுகை நயம் நன்றாக

இருக்கும். இந்தப் பாட்டில் அப்படிச் சில பகுதிகள் இருக்கின்றன.

> " வரைச்சிறை உடைத்ததை வையை; வையைத்
> திரைச்சிறை உடைத்தன்று கரைச்சிறை
> அறைகெனும்
> உரைச்சிறைப் பறை எழ ஊர் ஒலித்தன்று"

என்னும் அடிகளிலும்,

> " போரணி அணியிற் புகர்முகம் சிறந்தென
> நீரணி அணியின் நிரை நிரை பிடி செல
> ஏரணி அணியின் இளையரும் இனியரும்
> ஈரணி அணியின் இகல்மிக நவின்று"

என்னும் பகுதியிலும்,

> " வரையழி வால் அருவிக் கால் தாலாட்டக்
> கரையழி வால் அருவிக் கால் பாராட்ட"

என்னும் இடத்திலும்,

> " கொய்ததும் வாயாளோ கொய் தழை கைபற்றிச்
> செய்ததும் வாயாளோ செப்பு"

என்பதிலும் அத் தகைய அமைப்பைக் காணலாம்.

★

பரிபாடலுக்குப் பரிமேலழகர் எழுதிய உரை, திருக்குறளுக்கு அவர் எழுதிய உரைபோன்ற சிறப்பை உடையதாக இல்லாவிட்டாலும், பொருளைத் தெரிந்து கொள்ளப் போதிய அளவில் அமைந்திருக்கிறது. அவ்வுரை இல்லையென்றால் இந்நூலின் பல பகுதிகளுக்குப் பொருளே விளங்க வழியில்லை. அவ்வுரையைப் பற்றி, "இந்த உரை, பலவிடத்துப் பொழிப்புரையாயும் சிலவிடத்துப் பதவுரையாயும் சிலவிடத்துக் கருத்துரையாயும் சிறிதும் புலப்படாத சொற்களின் பழைய வடிவங்களைப் புலப்படுத்தியும், உரிய இடங்களில் இலக்கணக் குறிப்புக்களைப் பெற்றும், சிலவிடத்து மிக அழகான பதசாரத்துடன் கூடியும், விளங்காத சிலவற்றைத்

தக்க தமிழ் நூல் மேற்கோள்களாலும் வேதம் உபநிடதம் முதலியவற்றின் கருத்துக்களாலும் விளக்கியும் மிக விரிவாக அமைந்துள்ளது'' என்று **மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள்** எழுதியிருக்கிறார்கள். இப் புத்தகத்தில் உள்ள இரண்டு பாடல்களின் விளக்கங்களும் பரிமேலழகர் உரையைப் பின்பற்றியே இருக்கும். சில இடங்களில் மாத்திரம் வேறுபட்டிருக்கும்.

ஓரிரண்டு இடங்களில் மூலத்தில் ஊகித்துக்கொண்ட பாடங்களை அமைத்திருக்கிறேன். அவை வருமாறு:—

வையையைப் பற்றிய பாட்டில் 15-ஆம் அடி, "கொடி **சேராத்** திருக்கோவை காழ்கொள" என்ற பாடத்தோடு இருப்பதை, "கொடி **சோரத்** திருக்கோவை காழ்கொள" என்று கொண்டிருக்கிறேன். "ஊருர்பு இடந்திரீஇ" (37) என்பதை உரைக்கு ஏற்ப, "ஊர்பூர்பு இடந்திரீஇ" என்று மாற்றிக்கொண்டேன். "வரையழி வாலருவி (?) வாதாலாட்ட" (52) என்று தெளிவின்றியிருந்த அடியை, "வரையழி வாலருவிக் கால்தாலாட்ட" என்று ஒருவாறு ஊகித்து அமைத்திருக்கிறேன். "இன்னிள வேனி லிதுவன்றோ வையை நின்......" (77) என்ற அடியிலுள்ள குறையை உரையின் உதவியைக் கொண்டு, "இன்னிள வேனி லிதுவன்றோ வையைநின் காமம்" என நிரப்பி அமைத்திருக்கிறேன். அவ்விடங்களில் இப்படித்தான் பாடம் இருக்க வேண்டும் என்று துணிவாகச் சொல்லும் தகுதி எனக்கில்லை. ஆயினும் பாட்டின் ஓட்டத்தோடு இந்த ஊகங்கள் பொருந்தி இழைகின்றன என்ற நினைவுமாத்திரம் உண்டு.

எட்டுத் தொகை நூல்களில் உள்ள பாடல்களில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து விளக்கம் எழுதி வெளியிடத் தொடங்கியபோது எட்டுப் புத்தகங்களும் நிறைவேற வேண்டுமே என்ற அச்சம் எனக்கு இருந்தது. எட்டு மாத காலத்தில் மாதம் ஒரு புத்தகமாக வெளியிட வேண்டும் என்ற திட்டத்தோடு இதைத் தொடங்கினேன். 'எண்ணிய எண்ணியாங்கு எய்தும் திண்மை' என்னிடம் இல்லாமையால், வரையறுத்த கால அளவு இரட்டிப்பாகி விட்டது. 1951-ஆம் ஆண்டு டிசம்பரில் தொடங்கிய இவ் வெளியீட்டு வரிசை பதினாறு மாதங்கள் கடந்த பின்பு இப்போது நிறைவேறுகிறது. தாமதமானாலும் எடுத்துக் கொண்ட காரியம்

ஒருவாறு நிறைவுறும் வண்ணம் செய்வித்த முருகன் திருவருளை எண்ணி உருகி வணங்குகின்றேன்.

சங்கநூற் கடல் எங்கே, நான் எங்கே? பரந்த பெருங் கடற்கரையில் கிளிஞ்சில் பொறுக்கும் குழந்தையைப்போல இவற்றை எழுதினேன். இதற்குக்கூட என்னுடைய அறிவாற்றல் காரணம் என்று சொல்ல முடியாது. என்னுடைய ஆசிரியப்பிரானாகிய **மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்களுடைய** கருணைப் பெருக்கிலே ஊறியமையால் அடைந்த பேறு இது என்பதை எத்தனை முறை சொன்னாலும் போதாது.

சங்கநூற் காட்சிகளாகிய இந்த நூல் வரிசையை நன்றாக வெளியிட வேண்டும் என்ற ஆவலும் அதற்கேற்ற முயற்சியும் செயல் வன்மையும் காட்டி, இவற்றை அழகாக மலரச் செய்த பெருமை **அமுத நிலையத்தின்** தலைவரும் என் கெழுதகை நண்பருமாகிய **ஸ்ரீ ரா ஸ்ரீ ஸ்ரீகண்டன்** அவர்களைச் சாரும். அவருக்கு என் நன்றியறிவைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**'மணி விளக்கு'** வெளியானது தொடங்கி ஒவ்வொரு புத்தகத்தையும் படித்து, "இது புது முறை; நல்ல முறை; அழகாக இருக்கிறது" என்று பாராட்டிய அன்பர்கள் பலர். பத்திரிகையாளர் இந்தப் புத்தகங்களைச் சிறப்பித்து மதிப்புரை எழுதினர். இத்தகைய அன்பர்கள் அளித்த ஊக்கம் என் கருத்துக்கும் பேனாவுக்கும் உரத்தை அளித்தன. அவர்களுக்கெல்லாம் என் நன்றி உரியது.

இந்தப் புத்தகங்கள் எட்டுக்கும் மூன்று வண்ணத்தில் மேலட்டை ஓவியங்களை எழுதி உதவியவர் **ஸ்ரீ எஸ். ராஜம் அவர்கள்.** இந்திய ஓவியக் கலையில் இவர் மிக்க திறமை உள்ளவர் என்பதைத் தமிழ் நாட்டார் நன்கு அறிவர். இந்தப் புத்தகங்களின் அழகை இவருடைய ஓவியங்கள் பின்னும் அதிகமாக்கியிருப்பதை நான் சொல்லவும் வேண்டுமா? ஓவியர் மணி **ராஜத்தின்** கைவண்ணத்தைப் பாராட்டி என் நன்றியறிவைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க தமிழ்!

11-3-1953 **கி. வா. ஜகந்நாதன்**

# உள்ளுறை

முகவுரை ... 1

1. திருமால் புகழ் ... 17

2. தமிழ் வையை ... 80

# திருமால் புகழ்

இறைவனுடைய பெருங்கருணையையும் பேராற்றலையும் நினைக்கும்பொழுது அன்பர்களுடைய உள்ளம் களிக் கூத்தாடுகிறது. ஒவ்வொரு கணமும் அவனுடைய திருவருளின் சிறப்பை உணர்ந்தபடியே வாழ்கிறவர்கள் அவர்கள். உடம்பையும் உடம்பின் உறுப்புக்களையும் உயிர்கள் வாழும் உலகையும் அவ்வுலகத்துட் பொருள்களையும் படைத்து உயிர்களுக்கு உதவிய கடவுளின் பேருதவியை நினைக்குந்தோறும் அவ்வன்பர்களுக்கு நன்றியறிவு மீதூர்கின்றது. அவனை வாயாரப் பாடுகின்றனர்; அவன் புகழை விரிக்கின்றனர்.

## புகழ் கூறுவார்

அவன் புகழ் அவர்கள் கூறக் கூற மேலும் மேலும் விரிகின்றது. அதற்கு எல்லை ஒன்று இருப்பதாகவே தோன்றவில்லை. வேதங்கள் பல பல விதமாக இறைவன் புகழை விரித்தும் இன்னும் முடிவு காணவில்லை. அப்படியிருக்க, மக்கள் எவ்வாறு புகழ்ந்து முடிவு கட்டி விட முடியும்? அதனால் புகழாமல் இருக்க முடியுமா? தம்மால் இயன்ற வரையில் புகழ்ந்துகொண்டே இருக்கிறார்கள்.

இறைவன் திருக்கோயிலை வலம் வந்து அவன் திருவுருவத்தைத் தரிசித்துப் போற்றுகின்ற சரியையாளர் அவனைப் புகழ்கின்றனர். அவர்கள் இறைவனுக்கு அன்பர்களே. ஆயினும் அவர்களினும் பெரிய அன்பர்கள் இருக்கிறார்கள். இறைவன் திருவுருவத்தை அணுகித் தாமே அலர் தூவியும் நீராட்டியும் புனைந்தும் வழிபடும் கிரியையாளர் இருக்கின்றனர். அவர்களும் இறைவனைப் புகழ்கின்றனர். அவர்களுக்கும் மேலே இயமம், நியமம் முதலிய நெறி பற்றி யோகம் புரிந்து சித்திபெற்ற அன்பர்கள் மூன்றாம் படியில் இருக்கிறார்கள். அவர்களும் தாம் பெற்ற இன்ப அநுபவத்தையும் அதனைத் தாம் பெற அருளிய இறைவன் திருவருளையும் எண்ணி எண்ணிப் பெருமிதம் அடைந்து அவனைப் புகழ்கின்றார்கள்.

## ஞானியர்

இனி நான்காவது படியில் இருக்கும் பேரன்பர்களை ஞானியர் என்று சொல்வார்கள். அவர்கள் உண்மைப் பொருளை உணர்ந்தவர்கள்; பொறிகளை வென்றவர்கள்; உள்ளத்தே தெளிவு பெற்றவர்கள்.

கண், செவி, நாக்கு, மூக்கு, உடம்பு என்ற ஐந்தும் ஐந்து வகை உணர்வுகளை உடையன. கண் காட்சி யுணர்வையும், செவி கேள்வி யுணர்வையும், நாக்குச் சுவை யுணர்வையும், மூக்கு மண வுணர்வையும், உடம்பு பரிச உணர்வையும் பெறுகின்றவை. இந்த ஐந்து உணர்வுகளை யும் ஐம்பொறிகளும் பெற்று நம் உள்ளத்தே அவற்றின் நுகர்ச்சியைச் சாரச் செய்கின்றன. ஐம்பொறிகளாகிய வாயிலின்வழியே உள்ளம் அவாவைச் செலுத்துகின்றது. ஐம்பொறிகளின் வழியே செல்லும் அவா வளர வளர உள்ளத்தே கலக்கம் மிகுதியாகின்றது; தெளிவு இல்லாமற்

போகின்றது. கலக்கம், தெளிவு என்பவற்றையே அறியாமை, அறிவு என்று சொல்லலாம். அவற்றையே இருள், ஒளி என்றும் சொல்லலாம். பொறிகளை மயக்கி அறியாமைக்கு உட்படுத்துவதனால் உலகத்தை, "மாயிருள் ஞாலம்", "இருள் தருமா ஞாலம்" என்று ஆன்றோர் கூறுவர். அந்த மயக்கம் நீங்கினால் ஒளியாகிய மெய்ஞ் ஞானம் உண்டாகும்.

ஐம்பொறிகளினால் உண்டாகும் இருள் நீங்க இறைவன்பால் இடைவிடாத அன்பு பூண்டு, மெல்ல மெல்லப் பொறிகளின் செயலை அடக்க வேண்டும். அவ்வாறு ஐம்பொறியினால் விளையும் இருள் நீங்கின பின் பழைய வாசனையினால் உள்ளத்தே இருக்கும் மாசைக் களைய வேண்டும். அந்த மாசைக் களைவதற்கு ஆன்றோர்கள் அருளாலும் அநுபவத்தாலும் தெளிந்து வழி வகுத்திருக்கின்றனர். மைத்திரி, கருணை, முதிதை, உபேக்ஷை என்ற நான்கு பாவனைகளால் மனமாசைத் துடைக்க வேண்டும். எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்று விரும்புவது மைத்திரி பாவனை. பிற உயிர்கள் துன்புறும்போது அதற்கு இரங்கி அத்துன்பம் நீங்க வேண்டுமென்று நினைப்பது கருணை பாவனை. தாம் பண்ணிய நல்வினைப் பயனை நுகர்ந்து உயிர்கள் மகிழ்ச்சியை அடைவது கண்டு மகிழ்தல் முதிதை பாவனை. விருப்பு, வெறுப்பு, பகை, நட்பு இன்றி எவ்வுயிரையும் சமமாகப் பாவித்தல் உபேக்ஷா பாவனை; இதை இகழ்ச்சி யென்றும் சொல்வர். இந்த நான்கும் சித்தத்தின்கண் உள்ள மாசைத் துடைத்துத் தூய்மைப் படுத்துவதால் இவற்றைச் சித்த பரிகர்மம் என்று சொல்வார்கள்.

ஐம்பொறிகளால் விளையும் மயக்கமாகிய இருளை நீக்கி மைத்திரி முதலிய நான்கு பாவனைகளால் உள்ளத்திலுள்ள

மாசைத் துடைத்து விட்டால் மனம் ஒருமைப்படும்; அப்போது இறைவனுடைய தியானமாகிய ஒன்றிலே மனத்தைச் செலுத்தினால் அம்மனம் ஓய்ந்து நிற்கும்; சமாதி நிலை கைகூடும்.

இறைவனுடைய அருளையே துணையாகப் பெற்ற ஞானியராகிய ஆர்வலர், ஐந்து இருளை அறவே நீக்கி, நான்கினாலே உள்ளத்தில் உள்ள மாசைத் துடைத்து, அந்த உள்ளத்தை ஒன்றின் வழியே செல்ல விடுத்துச் சமாதி நிலையிலே இன்புறுவார்கள். அவர்கள் தாம் பெற்ற இன்பத்தை நினைந்து நினைந்து மகிழ்கிறார்கள். அந்த இன்பத்தைப் பெற அருளிய இறைவனைத் தொழுது ஏத்துகிறார்கள்; அவனுடைய புகழை விரிக்கின்றார்கள்.

ஐந்து இருள் அற நீக்கி நான்கினுள் துடைத்துத் தம்
ஒன்று ஆற்றுப்படுத்த நின் ஆர்வலர் தொழுது ஏத்தி
நின் புகழ் விரித்தனர்.

● ஐந்து பொறிகளால் உண்டாகும் மயக்கத்தை அறும்படியாக ஒழித்து, மைத்திரி கருணை முதிதை உபேட்சை என்ற நான்கினாலும் (சித்தத்தில் உள்ள மாசைத்) துடைத்துத் தம்மை ஒன்றின் கண்ணே செல்லும்படி வழிப்படுத்திய நின் அன்பர்கள், நின்னை வணங்கிப் பாராட்டி நின் புகழை விரிவாகச் சொன்னார்கள்.

ஐந்து-கண், செவி, வாய், மூக்கு, உடம்பு என்னும் ஐந்து பொறிகள். இருள்-மயக்கம். நான்கு-மைத்திரி, கருணை, முதிதை, உபேட்சை. நான்கினுள்-நான்கினால். துடைத்து-மாசு நீக்கி; நான்கின் உள் துடைத்து என்று பிரித்து, நான்கினாலே உள்ளத்தை மாசறத் துடைத்து என்றும் பொருள் கொள்ளலாம். தம்-தம்மை. ஒன்று ஆற்றுப்படுத்த-

ஒரு பொருளினிடத்தே செலுத்திய; 'தம்மைச் சமாதியாகிய ஒரு நெறிக்கண்ணே படுத்திய' என்பது **பரிமேலழகர்** உரை. ●

## வியப்பிலாப் புகழ்

இவ்வாறு கடுவன் இள எயினனார் என்ற புலவர் திருமாலைப் பாட ஆரம்பிக்கிறார். திருமால் பலராலும் புகழப் பெற்றவர்.

"புகழ்ஒத் தீயே இகழுநர் அடுநனை"
"மாயோன் அன்ன உரைசால் சிறப்பு" **(புறநானூறு)**

என்று அப் பெருமானுடைய புகழைப் புலவர்கள் சிறப்பாக எடுத்துச் சொல்வார்கள். புகழையே கேளாமல் இருக்கும் ஒருவனிடம் சென்று எப்படிப் புகழ்ந்தாலும் அவன் அதை ஏற்றுக்கொள்வான்; குறைவாகப் புகழ்ந்தான் என்று சொல்லமாட்டான்; வேறு ஒருவன் மிகுதியாகப் புகழ்ந்திருந்தால்தான் இந்தப் புகழ் குறைவாகத் தோற்றும். ஆனால், பலரும் புகழும் பெருமானைப் புகழப் புகுந்தால் இந்தப் புகழ் அந்தப் பெருமானுக்குப் புதுமையாகத் தோற்றாது. அது மாத்திரம் அன்று. அப்பெருமான் எத்தகையோருடைய புகழை யெல்லாம் கேட்டவன் தெரியுமா? பொறிகளை அடக்கி மன மாசு அறுத்து யோக இன்பத்திலே தம்மை மறந்து நிற்பவர்களுடைய புகழைக் கேட்பவன் அவன். 'அவர்களுடைய புகழையெல்லாம் கேட்கும் பெருமானை நாம் புகழப் போகிறோம்' என்ற நினைவிலே புலவருக்குச் சிறிதே துணுக்கம் தோற்றியது. ஆனால் அடுத்த கணத்தில் அது மாறிவிட்டது.

திருமால் அந்த ஞானிகள் கூறிய புகழைக் கேட்டு, "நம் புகழை அளந்து சொல்கிறார்கள்" என்று

மகிழ்ந்தானோ? "இதுகாறும் யாரும் கூறாத புகழை இவர்கள் சொல்கிறார்கள்" என்று வியந்தானோ? அவனுக்குப் புகழ் ஒரு பொருட்டல்ல; புதுமையும் அன்று. ஆகவே அதைக் கேட்டு அவனுக்கு வியப்பே உண்டாகாது. அவர்கள் கூறும் புகழ் அவனுக்கு இறும்பூது அன்று. இதனைப் புலவர் நினைத்துப் பார்த்தார். 'அவர்கள் புகழ்வதற்கே வியப் படையாத பெருமான் நம் புகழைக் கேளாவிட்டாலும், அது நமக்கென்று தனியாக வந்த சிறுமை அன்று' என்று தம்மைத் தாமே தேற்றிக்கொண்டார்.

'அந்த ஞானியர் கூறும் புகழ் கிடக்கட்டும். நாம் கூறும் புகழ் எப்படி இருக்கும்?' என்ற நினைவு சிறிதே வந்தது. அதை நினைக்கும்போதே சிரிப்பு வந்தது. அவர் எண்ணம் ஓடியது.

'ஞானியர்களாலே முற்றப் புகழ ஒண்ணாத ஒருவனை நாம் புகழப் புகுகிறோமே! அவன் புகழை நாம் கேட்டிருக்கிறோம். பல இடங்களில் பலர் வாயி லாகக் கேட்டிருக்கிறோம். அவற்றையே இப்போது சொல்லப் போகிறோம். ஆனால் அவற்றையேனும் முழுதும் நினைவுறுத்திக்கொண்டு சொல்லமுடியுமா? அது எங்கே இயலப் போகிறது? இங்கு ஒன்றும் அங்கு ஒன்றுமாகக் கோவையின்றி, முறையின்றி, முழுமையின்றித்தான் புகழ முடியும். எதையாவது சொல்ல வந்த குழந்தை முழு வாக்கியத்தையும் சொல்ல முடியாமல் அங்கொரு வார்த்தை இங்கொரு வார்த்தையாகச் சொல்லுகிறதே, அதுபோலத்தான் நாம் புகழப் போகிறோம். அதைப் பற்றி நினைக்கும் போது நமக்கே சிரிப்பு வருகிறதே! இறைவன் சிரிக்க மாட்டானோ? நிச்சயமாகச் சிரிப்பான். சிரிப்பது நியாயம்; சிரிக்கத்தான் வேண்டும். "அட பைத்தியக்

காரர்களே!'' என்று நம்மைப் பார்த்துச் சிரிக்கத்தான் வேண்டும். சிரி அப்பா, சிரி; நீ நகுதலும் தகுதி தான்.

'ஆனால் எம்முடைய குறைபாட்டையும் நீ நகுவதையும் அறிந்து நாங்கள் புகழாமல் விடப்போவதில்லை. பொறியடங்கிச் சமாதி கூடிய பெரியோர் விரிக்கும் புகழையே மெச்சாத நீ, நாங்கள் கூறும் புகழைக் கேட்டுச் சிரிப்பது வியப்பன்று. அவர்கள் புகழ்வதை நிறுத்துவதில்லை. நாங்களும் புகழ்வதை நிறுத்தப் போவதில்லை. நீ சிரிக்கச் சிரிக்க எங்கள் மழலைத் துதியைச் சொல்லத்தான் போகிறோம்.'

புலவர் திருமாலையே நோக்கிச் சொல்கிறார்:

**......கிளக்குங்கால் அவை நினக்கு**
**இறும்பூது அன்மை நற்கு அறிந்தேம் ஆயினும்**
**நகுதலும் தகுதி, ஈங்கு ஊங்கு நிற் கிளப்ப**

● (நின் ஆர்வலர் நின் புகழை) விரித்துச் சொல்லும் பொழுது அவர்கள் கூறும் புகழ் வகைகள் உனக்கு வியப்பை உண்டாக்குவன அல்ல என்பதை நன்றாக அறிந்தோமாயினும், (அது கண்டு வாளா இராமல்) இங்கும் அங்குமாக நின்னை நாங்கள் புகழ, நீ எங்கள் குறை கண்டு சிரிப்பதும் ஏற்ற காரியந்தான்.

கிளக்குங்கால் - சொல்லும் பொழுது. வகையினாலே புகழ் பலவாதலால் அவையென்று பன்மையாகச் சொன்னார். இறும்பூது - வியப்பு. அன்மை - அல்லாத தன்மையை. நற்கு : நன்கு என்பதன் விகாரம். நகுதலும் - அறியாமையைக் கண்டு சிரித்தலும். தகுதி - தக்கது. ஈங்கு - இங்கு ஊங்கு - அங்கு. தொடர்பும் முறையும் இல்லாதது என்பதைப் புலப்படுத்த ஈங்கு ஊங்கு என்றார். நின் - நின்னை.

கிளப்ப - சொல்ல. ஈங்கு ஊங்கு நிற் கிளப்ப, நகுதலும் தகுதி என்று இயைத்துப் பொருள் செய்யவேண்டும்.

'அப்புகழ்க ளெல்லாம் நினக்கு இயல்பாவன அல்லது வியக்கப்படுவன அல்லாமையை அறிந்து வைத்தும், அத் தன்மையம் அல்லாத யாங்கள், அவற்றுட் சிலவற்றை ஈங்கும் ஊங்குமாகப் பிறழக் கூறுவதற்கு நீ நகுதலும் எமக்கு ஒரு தகுதியாம்; அதனால் யாம் கிளத்தலும் ஒழிதற் பாற்றன்று' என்பது **பரிமேலழகர்** உரை.●

★

**இ**வ்வாறு கடுவன் இளஎயினனார் அவையடக்கத்தைப் போன்ற முகவுரையைக் கூறிவிட்டு மேலே திருமாலைப் புகழ்வதில் ஈடுபடுகிறார். அப்பெருமானுடைய திருமேனிக் கோலத்தையும் ஆடை படை ஆகியவற்றையும் வருணிக்கிறார்.

## திருமேனி

**தி**ருமால் பெரிய திருமேனியை உடையவர்; கரிய மேனியர். அந்தத் திருமேனிக்கு எதை உவமை சொல்லலாம்? ஒளிவிடும் அழகிய நீல மணியைப் போல எம்பெருமான் திருமேனி ஒளிர்கிறது. ஆதலின் நீல மணியைச் சொல்லலாம். அவனுடைய பெரிய திருமேனிக்கு ஏற்றபடி பெரிய பொருளை உவமையாகச் சொன்னால் பொருத்தமாக இருக்கும். எல்லை யற்ற பொருள் ஒன்று இருந்தால் அதைச் சொல்லலாம். கரை யற்ற பொருளாக இருப்பது எது? கடல் இருக்கிறதே; கரிய நிறத்தை உடைய கடலை அவன் திருமேனிக்கு உவமை யாகச் சொல்வது மிகவும் பொருத்தமாக இருக்கும். ஆனால்

கடலிலே ஒரே நீல வண்ணத்தைக் காண முடியாதபடி அலைகள் செய்கின்றன. அலைகள் எழுந்து வீசினால் வெண்மையாகத் தோன்றுகின்றன. அவற்றில் நுரையும் எழுகின்றது. அலையும் நுரையும் இராமல் இருந்தால் ஒரே நீல நிறமாகக் கடல் இருக்கும். அலை உண்டாதல் அவிந்த, அலையடங்கிய, கடல் இருந்தால் அதை அவன் மா மெய்க்கு ஒப்பாகக் கூறலாம்.

திருமணியையும் திரை படுதல் அவிந்த முந்நீரையும் உவமையாகச் சொல்லலாம்; ஆனால் அவை ஓரிடத்தில் இருப்பவை. இறைவன் தன்னை வழிபடுவோரிடம் சென்று அருள் செய்கிறவன். தன் திருமேனிக் கோலத்தை அன்பர்கள் இருக்கும் இடம் சென்று காட்டும் அருளாளன். அதற்கு ஏற்றபடி உவமை சொல்ல வேண்டாமா? சூலுடைய மேகம் மழை பொழியும்பொருட்டு வருகிறதே; அதைப் பார்த்தால் அன்பர்களுக்கு அருள் செய்ய வரும் திருமாலின் திருமேனி நினைவுக்கு வரவில்லையா? ஆதலால் காலத்திலே மழையைப் பெய்ய வருகிற மழை முகிலையும் அவன் திருமேனிக்கு உவமை சொல்லலாம்.

இவற்றை யெல்லாம் நினைத்த புலவர், "திருமாலே, நின் பெரிய கரிய திருமேனி திருமணியையும், திரை அவிந்த முந்நீரையும், இருஞ் சூலை யுடைய மேகத்தையும் ஒக்கும்" என்று பாடுகிறார். *

திருமணி திரை பாடு அவிந்த முந்நீர்,
வரு மழை இருஞ்சூல் மூன்றும் புரையும் மாமெய்.

---

* வெய்யோன்ஒளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோஎனும் இடையாளொடும் இளையானொடும் போனான்,
மையோமரகதமோமறி கடலோமழை முகிலோ
ஐயோ இவன் அழகென்பதோர் அழியா அழகுடையான்

என்ற கம்பர் பாடல் இங்கே நினைவுக்கு வருகின்றது.

● அழகிய நீல மணி, அலை உண்டாதல் அடங்கிய கடல், காலத்தில் பெய்ய வருகிற பெரிய நீராகிய கருப்பத்தை யுடைய மேகம் ஆகிய மூன்றையும் ஒக்கும், நின் கரிய பெரிய திருமேனி.

திரு - அழகு. பாடு - படுதல் ; உண்டாதல் ; ஒலித்தலும் ஆம். அவிந்த-அடங்கிய-முந்நீர்-மூன்று நீர்மையை யுடைய கடல்; ஆக்கல், அளித்தல், அழித்தல் என்ற மூன்று இயல்பு களை உடையது; ஆற்று நீர், ஊற்று நீர், வேற்று நீர் என்ற மூன்று நீர்களை உடையது என்றும் சிலர் கூறுவர்.

வரும் - காலத்திலே பெய்ய வரும். இருஞ் சூல் மழை என்று கூட்டிப் பொருள் செய்ய வேண்டும், புரையும் - ஒக்கும். மா - பெரிய, கரிய. ●

## உடையும் படையும்

**தி**ருமேனியின் நீல வண்ணம் இயற்கையாகவே ஒளிர் கிறது. அதனைப் பின்னும் நன்றாகப் பொலி வுறுத்தும்படி அப் பெருமான் இடையில் அணிந்த பொன்னுடை அமைந்திருக்கிறது. நீல வண்ணமும் பொன்னிறமும் ஒன்றற்கு ஒன்று மாறுபட்டவை; ஒன்றை யொன்று எடுத்துக் காட்டுபவை.

**மாஅ மெய்யொடு முரணிய உடுக்கையை.**

● அந்தக் கரிய திருமேனியோடு நிறத்தால் மாறுபட்ட பொன்னுடையை உடையாய்.

முரணிய-மாறுபட்ட, உடுக்கை-உடை. ●

கரிய மேனியையும் பொன்னுடையையும் கண்ட பிறகு சற்றுக் கூர்ந்து எம்பெருமானை நோக்க விருப்பம் உண்டா கிறது. பளபளக்கும் ஆடையைக் கண்ட கண்ணோடு பார்க்

கையில் அப்பெருமானுடைய திருக் கரத்தில் ஏதோ ஒன்று பளபளப்பது தெரிகிறது. அது மின்னுகிறது; சுழல்கிறது. அது என்ன? இறைவன் சக்கரத் திருக்கையினன் என்று கேட்டிருக்கிறோமே. ஆம். அவன் திருக்கரத்தில் ஒளி விடு கின்ற சக்கரம் இருக்கிறது. அந்தச் சக்கரம் எத்தனையோ அசுரர்களுடைய உயிரைக் குடித்திருக்கிறது. பகைவர் களின் உயிரைக் கண்டால் அந்தச் சக்கரம் துள்ளு கிறது. அவர்களின் உயிருக்கு அது பகையானது; அவர்கள் உயிரோடு முரணை உடையது.

**நோனார் உயிரொடு முரணிய நேமியை**

● பகைவருடைய உயிரோடு மாறுபட்ட சக்கரா யுதத்தை உடையாய்.

நோனார்-பகைவர்; பொறாதவர் என்பது சொற்பொருள்; ஒருவருடைய புகழையும் செல்வத்தையும் கண்டு பொறா மல் பகைத்தலின் பகைவருக்கு நோனார் என்ற பெயர் வந்தது. முரணிய-பகைத்த. நேமி-சக்கரம்; நேமியை-சக்க ரத்தை உடையாய். ●

## நரசிங்கப் பெருமான்

திருமாலின் சக்கரப் படையின் வலியை நினைந்த போது புலவருக்கு அப்பெருமானுடைய திரு அவதாரங்கள் நினைவுக்கு வருகின்றன. பிற படை இல்லாமல் தன்னு டைய நகங்களே படையாக இரணியனுடைய உடலை வகிர்ந்த செய்தியை எண்ணுகிறார். நரசிங்க அவதாரத் திலே கருத்தைச் செலுத்துகிறார்.

'திருமாலே, செங்கண்ணை உடைய பெருமானே, சினத் தால் சிவப்பேறுதலின்றி இயல்பாகவே சிவந்த திருவிழிகளை உடையவனே, நீ இரணியனைப் பிளந்த உகிரை உடையாய்" என்று பாராட்ட வருகிறார்.

இரணியன் தன் ஆட்சிக்குள் தன் பெயரே யன்றிப் பிறர் பெயர் வழங்கலாகாதென்று அடக்கியாண்டான், அவன் மகன் நாராயணனைப் புகழ்ந்தான். ஊரெல்லாம் தன்னைப் புகழ, தன் அருகே உள்ள புதல்வன் வேறு ஒருவனைப் புகழ்வதைக் கேட்டுப் பொறுப்பானோ? அவனுக்குச் சினம் மூண்டது; நெஞ்சு புகைந்தது; அதனால் மார்பில் உள்ள சந்தனம் புலர்ந்தது.

"இரணிய ராஜ்யத்தில் வேறு ஒருவனைப் புகழ்வதாவது!" என்று உறுமினான். தன் இளஞ் சேயானாலும், அந்த அசுர உள்ளம் சேயென்ற எண்ணத்தைக் கொள்ளவில்லை. பிரகலாதனைப் பலவகையிலே துன்புறுத்தினான். கட்டிப்போட்டு மலையிலிருந்து உருட்டினான். யானை முன் இட்டான். தந்தையால் அந்தக் குழந்தை பட்ட துன்பம் கணக்கில் அடங்காது. பல பல பிணி பட்டும் அவன் இறைவனை மறக்கவில்லை; அவனுடைய திருநாமத்தைச் சொல்லிக் கொண்டே இருந்தான். இரணியன் கட்டக் கட்டப் பிரகலாதனுடைய அன்பு முறுகி உரம் பெற்றது. அவனுக்குத் துன்பம் மிகுதி ஆக ஆக, அவன் உடல் நடுங்கியது; ஆனால் அவன் உள்ளம் நடுங்கவில்லை. அவன் உரத்தைக் கண்டு தேவர் புகழ்ந்தனர். நோயும் நடுக்கமும் அவன் தன் தந்தையால் அடைந்தான்; ஆனால் அவன் தளர்வின்றி நாராயணனைப் புகழ்ந்தான். அவன் உறுதி கண்டு யாவரும் அவனைப் புகழ்ந்தனர். அவன் புகழ் அலர்ந்தது; பரவியது.

ஆயினும் இரணியனிடம் பிரகலாதனுக்கு வெறுப்பு உண்டாகவில்லை. பிரகலாதன் தன் மைந்தன் என்பதை இரணியன் மறந்தான்; பகைவனாக எண்ணினான்; அவனை ஒறுத்தான். பல பல பிணி படு வலந்தான் (கட்டினான்).

ஆனால் பிரகலாதனோ அவன் தன் தந்தையென்பதை மறக்கவில்லை. அவனிடம் இருந்த அன்பு மாறவில்லை.

அந்த அசுரன் பிரகலாதனை இகழ்ந்தான்; அவனுடைய உயிர்த் துணையாக நின்ற நாராயணனை இகழ்ந்தான். பிரகலாதன் இரணியனை இகழவில்லை. அவன் தன் தாதை யாகலின், அவன் இகழ்ந்தாலும் தான் அவனை இகழா நெஞ்சினனாக விளங்கினான்; எல்லாம் நாராயணன் செயல் என்று அமைதியோடு இருந்தான்.

தன்னை நம்பினோரைத் தாங்கும் தயாபரன் இறைவன். அவன் நல்லோரை நாட்டி அல்லோரை வீட்டும் கருணையும் திறலும் உடையவன். பிரகலாதனைக் காத்தருளவும் இரணியனைத் தடியவும் முற்பட்டான். தூணிலிருந்து நரமடங்கலாகத் தோன்றினான்.

இரணியன், "எங்கேயடா உன் ஹரி?" என்று கேட்டான். "அவன் எங்கும் உள்ளான்; தூணிலும் உள்ளான்; துரும்பிலும் உள்ளான்" என்றான் பிரகலாதன். "எங்கே, இந்தத் தூணில் இருந்தால் நான் பார்க்கிறேன்" என்று தூணை அறைந்தான் அசுரன். படீரென்று தூண் பிளந்தது; திடீரென நரமடங்கல் தோன்றியது. உற்பாதங்கள் நிகழ்ந்தன. முரசு முழங்கியது. தன்னை மனமொழி மெய்களால் விரும்பி வணங்கி நன்றாக அன்பு செய்த பிரகலாதனைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டான் திருமால். தன் பெயர் ஒன்றையே தன் நாட்டில் நட்டானே, அந்த இரணியனுடைய மார்பிலே பாய்ந்தான். பெரிய மலை போன்ற மார்பு அது. ஆனால் என்ன? குன்றின்மேற் பாயும் கோளரிபோலப் பாய்ந்தான் நரசிங்கப் பெருமான். இரணியனுடைய நெஞ்சம் அகங்காரம் நிரம்பியது; செருக்குச் செறிந்தது; பகை

புணர்ச்சியாகிய மதம் நிறைந்தது. அந்தப் பகை மதம் அழியும்படியாக அவன் நெஞ்சிலே இறைவன் பாய்ந்தான்; அவன் மார்பைத் தன் உகிரால் வகிர்ந்தான்.

இவ்வளவும் கணப்போதிலே நிகழ்ந்தது. வெடித்துப் பிளந்த கம்பத்தின் துண்டுகள் கீழே விழுவதற்கு முன்னே இரணியன் மார்பைப் பிளந்துவிட்டான் திருமால். தூணின் துண்டுகள் கீழே விழுந்தன; அவற்றோடு இரணியனுடைய பிளந்த மார்பின் தசைகளும் விழுந்தன.

இந்தக் காட்சியைத் தம் அகக் கண்ணிலே நிறுத்திய புலவர் பாடுகிறார். 'செங்கமலக் கண்ணா, உன்னைப் பிரகலாதன் புகழ, அதனைக் கேட்கப் பொறாமல் புகைந்த நெஞ்சும் புலர்ந்த சாந்தும் உடைய இரணியன் பிரகலாதனைப் பல பல துன்பத்தை அடையும்படி கட்டிய பொழுது, துன்பம் மிகவும் உடம்பு நடுங்கவும் நின்ற புகழோனாகிய அச்சேய் இரணியன் தன் தந்தையாதலின் இகழாத நெஞ்சோடு இருக்க, அப்போது நீ இரணியனை இகழ்ந்து புறப்பட்டுப் பிரகலாதனைத் தழுவி, இரணியன் மார்பிலே பாய்ந்து, உற்பாதங்கள் உண்டாகவும் இடி போன்ற முரசு முழங்கவும் வெடிபட்டு ஒடிந்த தூணின் துண்டங்களோடு தடிந்த ஊன் துண்டங்கள் பல கீழே விழும்படி வகிர்ந்த உகிரை உடையாய்' என்று பாராட்டு கிறார்.

10. செயிர் தீர் செங்கட் செல்வ ! நிற் புகழப்
புகைந்த நெஞ்சிற் புலர்ந்த சாந்திற்
பிருங்கலாதன் பல பல பிணிபட
வலந்துழி, மலர்ந்த நோய் கூர்
கூம்பிய நடுக்கத்து
அலர்ந்த புகழோன், தாதை ஆகலின்

இகழ்வோன், இகழா நெஞ்சினன்
ஆக, நீ இகழா
நன்று நட்ட அவன் நன்மார்பு முயங்கி
ஒன்று நட்ட அவன் உறுவரை மார்பில்
படிமதம் சாம்ப ஒதுங்கி
இன்னல் இன்னரொடு இடிமுரசு இயம்ப
வெடிபடா ஒடி தூண் தடியொடு
தடி தடி பலபட, வகிர்வாய்த்த உகிரினை

● *கோபம் தீர்ந்த, இயல்பாகவே செம்மையையுடைய கண்களையுடைய செல்வனே! நின்னைப் பிரகலாதன் புகழ, அதுகேட்டுச் சினத்தால் புழுங்கிய நெஞ்சத்தோடும், உலர்ந்த சந்தனத்தினோடும் அவன் பல பல வருத்தத்தைப் படும்படியாக இரணியன் கட்டிய பொழுது, பரவிய துன்பம் மிகுதியானவனும், ஒடுங்கிய நடுக்கத்தை உடையவனும், பரவிய புகழை உடையவனுமாகிய பிரகலாதன், தன்னையும் திருமாலையும் இகழ்பவன் தன் தந்தையாதலால் அவனை இகழாத நெஞ்சினனாக இருப்ப, நீ இரணியனை இகழ்ந்து, நன்றாக நின்னை விரும்பிய அந்தப் பிரகலாதனுடைய நல்ல மார்பைத் தழுவிக்கொண்டு, தன் பெயர் ஒன்றேயாக எங்கும் நிலைநிறுத்திய இரணியனுடைய மிக்க மலைபோன்ற மார்பிலே பகைமைச்செருக்கு அழியும்படி பாய்ந்து, துன்பத்தைக் காட்டும் தீய நிமித்தங்களோடு இடிபோன்ற முரசு முழங்க, வெடிபட்டுப் பிளந்த தூணின் துண்டங்களோடு நீ பிளந்த ஊன் துண்டுகள் பல கீழே விழ, வகிர்தலை வாய்த்த கை நகங்களை உடையாய்.*

10. *செயிர் - இங்கே கோபம்.* 11. *புகைதல் - சினத்தாற் புழுங்குதல். அதனால் வெப்பம் ஏறிய மார்பிலே பூசிய சந்தனம் உலர்ந்தது. நெஞ்சின் - நெஞ்சோடு. சாந்தின் - சந்தனத்தோடு.* 12. *பிருங்கலாதன் - பிரகலாதன். பிணி - வருத்தம். பட - அடைய.* 13. *வலந்துழி - கட்டினபோது. மலர்ந்த நோய் - பரவிய*

துன்பம். கூம்புதல் - அடங்குதல். கூம்புதற்குக் காரண மாகிய நடுக்கம். 14. அலர்ந்த - பரவிய. நோய் கூர் புகழோன், நடுக்கத்துப் புகழோன் என்று கூட்டிப் பொருள் செய்ய வேண்டும். 14-15. இகழ்வோன் தாதையாகலின் அவனை இகழாத நெஞ்சினனாக. 'இகழப்படுவோனை இகழாத நெஞ்சினனாக' என்பர் **பரிமேலழகர்.** இகழா - இகழ்ந்து; அவன் வலிமை முதலியவற்றை மதியாமல் என்றபடி.

16. நட்ட - விரும்பிய ; அன்பு செய்த. முயங்கி தழுவி. 'மார்பு முயங்கி' என்பதற்கு, 'அவன் நெஞ்சிற் பொருந்தி' என்று உரை எழுதுவர் **பரிமேலழகர்.** 17. ஒன்று நட்ட அவன் - தன் நாட்டிற் பிற பெயர் உலவாமல் தன் பெயர் ஒன்றே ஆகும்படி நிறுவிய இரணியன்; 'நின்னோடு ஒன்றாக வரங்கொண்ட இரணியன்' என்பர் **பரிமேலழகர்.** உறு - மிக்க.

18. படி - பகை; பிரதி என்பதன் சிதைவு. 'படியென்பது பாகதச் சிதைவு' (**பரிமேலழகர்** உரை.) மதம் - செருக்கு. சாம்ப - அழிய. ஒதுங்கி - பாய்ந்து. 19. இன்னர் - துன்பத்தைக் காட்டும் தீய நிமித்தங்கள். 20. வெடிபடா ஒடி - வெடி பட்டுப் பிளந்த. தூண் தடி - தூணின் துண்டங்கள். 21. தடி தடி - தடிந்த மாமிசம்; தடிதல் - இங்கே பிளத்தல். வகிர் - வகிர்தல்; பிளத்தல். உகிரினை - நகத்தை உடையாய். 'ஒரு காலத்தே இரண்டு தடியும் வீழ்ந்தனவென விரைவு கூறிய வாறு' என்பர் **பரிமேலழகர்.** ●

## வராக அவதாரம்

இறைவனுடைய திருவவதாரங்களில் ஒன்றாகிய நரசிங்க மூர்த்தியை நினைத்தபின், தொடர்ந்து மற்றோர் அவதாரம் நினைவுக்கு வருகிறது. உலகம் முழுவதையும் பாயாகச் சுருட்டிக் கடலில் மறைந்தான், ஓர் அசுரன். திருமால் வராக அவதாரம் எடுத்து அவனைக்

கொன்று உலகத்தைக் கடலினின்றும் மேலே எடுத்தான். அந்த அவதாரம் புலவர் நினைவுக்கு வந்தது அந்த வரலாறு நரசிங்கமூர்த்தியின் கதையைவிடப் பழமையானது; பூர்வ காலத்தில் நிகழ்ந்தது.

பழங்காலத்தில் இவ்வுலகத்தை வராகத் திருவுருவங் கொண்டு தன் கழுத்தால் தாங்கி எடுத்தான் இறைவன். உலகத்தைத் தாங்கும் வலிமை அக் கழுத்துக்கு உண்டு. கரிய வலிய கந்தரத்தால் இவ்வுலகத்தை எடுத்துத் தாங்கித் தன் அருளாட்சியின் கீழ் வைத்தது புராணத்தால் பாராட்டப்பெறும் செய்தி. உலகத்தை மீட்டு அதை உரிய நிலையில் வைத்துவிட்டு அதன் மேலே இறைவன் உவகையினால் நிமிர்ந்து நின்றான். அப்படி நின்றது, உலகத்துக்கு நடுவே அச்சுப்போலே மேருமலை நிமிர்ந்து நிற்பது போல இருந்தது. உலகத்தின் **நடுவண் ஓங்கிய பலர் புகழ் குன்றினோடு** ஒத்த வராகமூர்த்தியை நினைந்து பாடுகிறார் புலவர்.

**புருவத்துக் கரு வல் கந்தத்தால்**
**தாங்கி இவ் வுலகம் தந்து அடிப்படுத்ததை நடுவண்**
**ஓங்கிய பலர் புகழ் குன்றினோடு ஒக்கும்.**

● பண்டைக் காலத்தில் (வராகத் திருக்கோலம் கொண்டு) கரிய வலிய கழுத்தினால் இவ்வுலகத்தைத்தாங்கித் தன் அடிக்கீழ் வைத்தது, (உலகத்தின்) நடுவில் ஓங்கிய பலரும் புகழும் மேருமலையை ஒக்கும்,

புருவம்-பூர்வம்; பழங்காலம். கந்தம்: கந்தரம் என்பதன் சிதைவு போலும். தாங்கி-எடுத்துப் பாதுகாத்து. அடிப்படுத்தது-தன் அருளாணைக்குள் வைத்த செயல்; எழுவாய். ஐ: சாரியை. நடுவண்-நடுவில். பலர் புகழ் குன்று-மேருமலை. ●

## வெம்மையும் தண்மையும்

**கடவுள்** எல்லாப் பூதங்களையும் உண்டாக்கினான். கதிரவனையும் திங்களையும் படைத்தான். அவற்றின் தன்மைகளையும் அவனே உண்டாக்கினான். அந்த அந்தப் பொருளாகவே இருந்து உலகத்துக்கு நன்மை உண்டாக்குகிறான். அவன் இருளை ஓட்டும் தெய்வத்தேசு படைத்தவன்; சோதி உருவுடையவன். அவன் திருவுருவத்தைக் கண்டவர்களே அவனுடைய விளக்கத்தை உணர முடியும் என்பது இல்லை. அவனுடைய ஒளியின் ஒரு கூற்றைக் கதிரவனிடத்தில் பார்க்கலாம். அவன் தன் ஒளியினால் கதிரவனை ஒளியுடையவனாகச் செய்கிறான். அப்படியே அடியார்களுக்கு இன்னல் புரிவோர்களை அடக்கும் வெப்பம் அப்பெருமானிடத்தில் உண்டு. அந்த வெம்மையின் ஒரு கூறே பனியைப் போக்கும் வெம்மையாக ஞாயிற்றினிடம் அமைந்திருக்கிறது. ஆகலின் சூரியனைப் பார்க்கும்போதே திருமாலின் நினைவு வர இடம் உண்டு. அப்பெருமானுடைய **வெம்மையும் விளக்கமும் ஞாயிற்றின்**கண்ணே உள என்று எண்ணி வணங்கலாம்.

திங்கள் தண் சுடர். அதன் நிலவில் தண்ணிய ஒளியும் மென்மையும் இணைந்திருக்கின்றன. உலகம் தண்ணிய நிலவை ஏற்று உவக்கிறது. காதலர் அதனைக் கண்டு களிக்கின்றனர். குழந்தைகள் நிலா விளையாட்டு விளையாடுகின்றனர். முள்ளும் மரமும், மேடும் பள்ளமும், கறுப்பும் செம்மையும் கதிரவன் ஒளியில் வெவ்வேறாகத் தோன்றுகின்றன. பாலை நிலம் அவ்வொளியினால் கண்ணைத் துன்புறுத்துகிறது. ஆனால் நிலவொளியில் பாலை நிலங்கூட மோகனமான சோபையைப் பெறுகிறது. கரடு முரடான வழிகளும் பார்க்க அழகான தோற்றத்தைப் பெறுகின்றன. இதுதான்

நிலவின் மென்மை. அது பட்ட இடங்களெல்லாம், பார்க்க அழகிய தோற்றத்தை அடைகின்றன. இறைவன் தண்மைக்கும் மென்மைக்கும் இருப்பிடம். அவனுடைய திருவருளைக் காட்டிலும் தண்ணிய பொருள் ஒன்று இல்லை. அதைத் தண்ணளி என்று புலவரும் அன்பரும் பாராட்டுவர். அவனுடைய தண்மையையும் மென்மையையும் ஓரளவு திங்களிலே காணலாம்.

**நின், வெம்மையும் விளக்கமும் ஞாயிற்று உள;**
**நின், தண்மையும் சாயலும் திங்கள் உள.**

● நின்னுடைய (பகைவரை அழிப்பதற்குக் காரணமான) வெப்பமும், ஒளியும் சூரியனிடத்திலே இருக்கின்றன. நின்னுடைய குளிர்ச்சியும் மென்மையும் சந்திரனிடத்திலே இருக்கின்றன.

வெம்மை-கொடுமை; தீயோரைத் தெறும் தன்மை. ஞாயிறு-கதிரவன். தண்மை-குளிர்ச்சி; அருள். சாயல்-மென்மை. 'வெம்மை தண்மை என்றது பகைவர் மாட்டு வெகுளுதலையும் அன்பர்மாட்டு அருளுதலையும்' என்பது **பரிமேலழகர் உரை.** ●

அசுரர்களைத் தடிந்த வெம்மையும் அன்பர்களைக் காக்கும் தண்மையும் அவனிடம் இருப்பதை நரசிங்க அவதாரமும், வராக அவதாரமும் காட்டுகின்றன. அந்த வெம்மையையும் தண்மையையும் உலகிலே கண்டால் அவை யாவும் இறைவனுடைய குணங்களிலிருந்து கூறுபட்டு வந்தன என்று எண்ணுவது அடியார் இயல்பு. தீயதைப் போக்க வெம்மையும் நல்லதை ஆக்கத் தண்மையும் வேண்டும். உலகில் தீமை போக, நன்மை வளர்ந்தால் இன்பம் உண்டாகும். இறைவன் தன் திருவருளால் எல்லா உயிர்களுக்கும் இன்பம் அருளுகிறான்; துன்பத்தையும் அருளுகிறான். அவ்விரண்டுமே உயிர்களின் புண்ணிய பாவங்களின்

பயன்கள். தீமைக்குத் தீமையும் நன்மைக்கு நன்மையும் பயனாக வருதலின் தீமை ஒழிந்து நன்மை மிகும். ஆதலின் இறைவன் வெம்மையும் தண்மையும் உடையவனாக இருக்கிறான். அவனுடைய வெம்மையையும் தண்மையையும் உணர வேண்டுமானால் ஞாயிற்றையும் திங்களையும் கண்டு தெளியலாம். கதிரவனிடம் உள்ளது வெம்மையானாலும் அதனால் விளைவது நன்மையே. இறைவனுடைய வெம்மையும் அத்தகையதே.

## வண்மை

இறைவனைக் காட்டிலும் சிறந்த வள்ளல் யாரும் இல்லை. தம்மிடம் உள்ள பொருள்களை வரையறையின்றி ஈயும் வள்ளல்கள் பலர் உலகில் இருந்தார்கள்; இருக்கிறார்கள்; இனியும் இருப்பார்கள். ஆனால் அந்த வள்ளல்களுக்குப் பொருளை உதவியவன் யார்? இறைவன் அல்லவா? ஆகவே, வள்ளல்களை வள்ளல்களாகும்படி செய்த பெரு வள்ளல் இறைவன். அவன் தராவிட்டால் யாரும் ஏதும் பெற இயலாது. வள்ளல்கள் தம்மிடம் உள்ள பொருளைக் கொடுத்தால், அவரிடம் உள்ள பொருள் அந்த அளவுக்குக் குறைந்துவிடும். மறுபடியும் பொருளை ஈட்டிக் கொண்டாலன்றி அக்குறை நீங்காது. கொடுக்கக் கொடுக்கக் குறையாத செல்வம் அருள் ஒன்றுதான். அந்தச் செல்வத்தை நிரம்ப உடையவன் இறைவன். அதனை அநாதிகாலமாக அவன் யாவருக்கும் வழங்கி வருகிறான். அதனால் அவனிடம் உள்ள அருள் எள்ளளவும் குறைபடவில்லை. அவன் சுரக்கும் அருள் தங்குதடையின்றி வருவது. அவனுடைய வள்ளன்மை வேறு யாரிடத்தும் காணக் கிடையாதது.

இந்த இயல்புகளை நினைப்பூட்டுவது மழை. காலத்துக்குக் காலம் மழை சுரந்துகொண்டே இருக்கிறது. இனி

மேல் உலகத்தில் மழையே இல்லை என்று சொல்லும் நிலை எப்போதும் வராது. பசும்புல் முதல் மக்கள் வரையில் தலையெடுத்து வாழும்படி வைப்பது மழை. அது நம்மிடமிருந்து கைம்மாருக எதையும் எதிர்பார்ப்பதில்லை. இந்த இயல்பு மழைக்கு எங்கிருந்து வந்தது? இறைவனுடைய ஒரு கூறே மழையாக இருப்பதால் அவனுடைய **சுரத்தலும் வண்மையும்** மாரியினிடம் உள்ளன. அவனுடைய கூறு இல்லாவிட்டால் மழை இராது; மேகம் இருந்தாலும் அது பெய்யாது. இறைவனுடைய அருளாணையால் மேகம் மழை பெய்கிறது. அது பெய்யும்போது அதனைக் காணும் அன்பர்கள், "இதோ இறைவன் திருவருள் மழையாகப் பெய்கிறது" என்று கூறி வாழ்த்துவார்கள்.

**நின், சுரத்தலும் வண்மையும் மாரி உள.**

● உன்னுடைய இடையருது சுரக்கும் தன்மையும் கொடையும் மழையினிடம் உள்ளன.

'சுரத்தல் - கொடுக்கக் கொடுக்கப் பொருள் வளர்தல். வண்மை - கொடை.' **(பரிமேலழகர்)** ●

## காவலும் பொறையும்

**க**டவுள் எல்லா உயிர்களையும் தனு, கரணம், புவனம், போகம் என்பவற்றைக் கொடுத்து வாழச் செய்கிருன். தங்கள் தங்களுக்கு வேண்டிய பொருளைத் தாங்களே ஈட்டிக் கொண்டு வாழலாம் என்று எண்ணுவது தவறு. நம்முடைய முயற்சியால் நாம் பெறுவது மிகவும் சிறிதே. இறைவன் மறைமுகமாக நின்று நம் முயற்சிக்கு வெற்றி அருளுவதனுல்தான் அந்த முயற்சியும் பயனைத் தருகிறது. அரிசியை மனிதன் தன் முயற்சியால் வாங்கி வரலாம். அதைச் சமைக்கத் தீ வேண்டும். அது

இறைவன் தந்ததுதான். அரிசியுங்கூட நெற்பயிர் விளைந்தால்தான் கிடைக்கும். மண்ணையும் நெல்லையும் நீரையும் சேர்த்துக் கலந்து வைத்தால் பயிர் விளைந்து விடாது. நெல்லாகிய பயிரை விளையும்படி செய்கிறவன் இறைவன். அதன் இலையிலே பசுமையையும் அதன் காயிலே பாலையும் அதன் கதிரிலே நெல்லையும் அந்த நெல்லிலே அரிசியையும் அந்த அரிசியிலே உணவுத் தன்மையையும் இசைத்து நமக்கு உணவாகச் செய்கிறவன் இறைவனே. நம்மை நாம் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்ற நினைவு நமக்கு இருக்கிறது. ஆனால் அந்த நினைவினால்தான் நாம் முயற்சி செய்து வாழ்கிறோம் என்பது இல்லை. உலகத்து உயிர்கள் அனைத்தையும் காப்பாற்றும் கவலை இறைவனுக்கு இருக்கிறது. அவன் எல்லோரையும் காக்கும் தெய்வம். எல்லோரையும் காக்கும் காவலை ஏற்றுக்கொண்டவன். எல்லா உயிர்களையும் தாங்கிப் புரப்பவன் அவனே.

குழந்தையினிடம் அன்பு பூண்ட தாய் அதற்கு வேண்டிய உணவு முதலியவற்றை அளித்துப் பாதுகாக்கிறாள். ஏதேனும் குறும்பு செய்தால் கோபிக்காமல் கொஞ்சுகிறாள். பிழை செய்தால் பொறுக்கிறாள், இறைவன் உயிர்களைக் காப்பாற்றுகிறான். அவர்கள் செய்யும் பிழைகளைப் பொறுத்து அருள் செய்கிறான். அவனுக்கு உள்ள பொறுமைக்கு அளவில்லை. ஒவ்வொரு கணமும் நாம் பிழை செய்து கொண்டே இருக்கிறோம். அவனுக்கும் அவனுடைய குழந்தைகளாகிய உயிர்க் கூட்டங்களுக்கும் ஏதேனும் தீங்கு புரிவதே நம்முடைய இயற்கையாகப் போய்விட்டது. அவ்வாறு செய்யும் தீங்குகளுக்கு உரிய தண்டனையைக் கொடுக்க இறைவன் எண்ணினால் நாம் ஒரு கணமும் வாழ இயலாது. அவன் அளித்த உடம்பையும் பொருளையும் அவனுடைய அருள் நெறிக்கு மாறுபடாமல் பயன்படுத்தி வாழ நமக்குத் தெரியவில்லை; தெரிந்தாலும்

அப்படி வாழ்வதில்லை. இது பிழை அல்லவா? ஆயினும் இறைவன் நமக்கு மேலும் மேலும் பொருளைத் தருகிறான்; நாம் செய்யும் பிழையைப் பொறுத்துக் கொள்கிறான்.

உயிர்களைப் பாதுகாத்துப் **புரத்தலும்**, அவர்கள் இயற்றும் பிழைகளைப் பொருட்படுத்தாது பொறுக்கும் **நோன்மையும்** இறைவனிடம் இருத்தலை, நம்மைத் தாங்கும் **ஞாலம்** ஒவ்வொரு கணமும் நமக்குப் புலப்படுத்துகிறது. உயிர்க்கூட்டம் வாழ்வதற்கு ஆதாரமாக நின்று, அவர்களுக்குரிய போகங்களைத் தரும் பொருள்களைத் தன்னிடம் உண்டாக்கி உதவி செய்கிறது நிலம். நம்மைப் புரக்கும் தன்மை அதற்கு உண்டானது. இறைவன் திருவருளால். இறைவனுடைய கல்யாண குணங்களில் ஒன்றாகிய காவலை அது ஒரு கூறு பெற்றிருக்கிறது.

பொறுமைக்கு நிலத்தைக் கூறுவது வழக்கம். "அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தன்னை, இகழ்வார்ப் பொறுத்தல் தலை" என்பது வள்ளுவர் வாய்மொழி. தன் உள்ளே புதைந்திருக்கும் கனிப்பொருள்களை அகழ்ந்து எடுப்பதோடு, வேளாண்மையின் பொருட்டு உழுதும், நீர் நிலைகளை அமைக்கும் பொருட்டுத் தோண்டியும், நடக்கும் பொருட்டுக் காலால் மிதித்தும் மக்கள் துன்புறுத்தினாலும் பூமிதேவி சினம் கொள்வதில்லை. அத்தகைய பொறுமை எங்கிருந்து வந்தது? கதிரவனிடம் தன் வெம்மையின் ஒரு கூற்றையும், திங்களினிடம் தன் தண்மையின் ஒரு பகுதியையும், மாரியினிடம் தன் வண்மையின் ஓரளவையும் எந்தப் பெருமான் வழங்கினானோ அந்தப் பெருமானே ஞாலத்துக்கு இந்தப் பொறையை வழங்கினான். அவன் வழங்கியமையால் **புரத்தலும் நோன்மையும் ஞாலத்து** உளவாயின.

**நின், புரத்தலும் நோன்மையும் ஞாலத்து உள.**

● நின்னுடைய தாங்கும் தன்மையும் பொறுமையும் நிலத்தினிடம் இருக்கின்றன.

புரத்தல் - பாதுகாத்தல். நோன்மை - பொறுத்தல், ஞாலம் - பூமி. ●

## மணமும் வண்ணமும்

இறைவனுடைய திருமேனி நீல வண்ணத்தை உடையது. அதற்கு உரிய உவமைகளை முன்பு சொல்லி யிருக்கிறார் புலவர். மணியையும் அலையடங்கின கடலையும் மேகத்தையும் சொன்னார் அல்லவா? அது அவன் திரு மேனியை நினைத்து அதற்கு எது உவமையாகும் என்று ஆராய்ந்து பார்த்துச் சொன்னது. இப்போது கதிரவனை யும் திங்களையும் மழையையும் ஞாலத்தையும் பார்த்து அவற்றிலே இறைவனுடைய கூறு இருக்கிறதென்று கண்டு இன்புற்ற அதிசயத்தை வெளியிட்டார்.

காயாம்பூவை அகக்கண்ணிலே காணுகிறார் புலவர். கதிரவனைக் கதிரவனாகக் காணாமல் கடவுளின் வெம்மையை யும் விளக்கத்தையும் கொண்ட பொருளாகக் கண்டவர் இவர். கதிரவனைக் கண்டு உலகப் பொருளை யெல்லாம் அதன் ஒளியாற் காணலாம்; அன்றிக் கதிரவனையும் காண லாம். இந்த இரண்டுக்கும் புறக்கண் கருவியாக உதவும். இந்த இரண்டு காட்சியையும் யாரும் காணலாம். ஆனால் கதிரவனைக் கண்டு அவன் மூலம் இறைவனைக் காண்பது எல்லாராலும் இயலாது. இறைவனுடைய அன்பும் அவனு டைய திருவருளிலே நாட்டமும் உடையவர்களுக்கே அது இயலும். அந்த நாட்டத்தையுடைய புலவர் காயாம்பூவைக் காணுகிறார்.

காயாம்பூவுக்கு மணம் உண்டு; நிறம் உண்டு. மணம் இருத்தலால் மலராக இருக்கிறது; தனக்கென்று அமைந்த நீலநிறம் இருத்தலின் காயாம் பூவாக இருக்கிறது. பூவின் தன்மை மணம். காயாவின் தன்மை நிறம். இந்த மணமும் வண்ணமும் அது தானாகப் படைத்துக் கொண்டனவா? இல்லை. இறைவனுடைய அருளால் அமைந்தவை. அதனுடைய நறுமணமும் நீலவண்ணமும் திருமாலை நினைப்பூட்டுகின்றன. அவனிடத்தே உள்ள மணமும் பொலிவும் அம்மலரிடத்தே அமைந்துள்ளன.

**நின், நாற்றமும் ஒண்மையும் பூவை உள.**

● நின்னுடைய நறுமணமும் பொலிவும் காயாம்பூவில் உள்ளன.

நாற்றம்-மணம். ஒண்மை-பொலிவு; வண்ணம். பூவை-காயாம்பூ; காசா என்று இக்காலத்தில் வழங்குவர். ●

## தோற்றம் முதலியன

புலவர் இவற்றோடு நிற்கவில்லை. மேலும் எவ்வெப் பொருள்களில் அவனுடைய இயல்புகள் பொருந்தியுள்ளன என்பதைச் சொல்கிறார். நிலத்தைச் சொன்னார். அதனோடு நினைப்பதற்குரியது நீர் அல்லவா? நிலத்தைச் சுற்றி வளைந்து கரையற்று விளங்கும் கடல் வானத்திலிருந்து பெய்யும் மழைக்கும், நிலத்திலிருந்து சுரக்கும் ஊற்றுக்கும் ஆதாரமாக இருக்கிறது. அந்தக் கடல் மிக விரிந்தது பெரிய நீல நெடும்பரப்பாகக் கண்ணுக்கு எட்டாத தூரத்துக்கு அது பரவியிருக்கிறது. அதனுடைய **தோற்றமும் அகலமும்** வியப்பதற்குரியவை. தன் தோற்றமும் அகலமும் இறைவனுடைய தோற்றத்தையும் அகலத்தையும் நினைக்கத் தூண்டும் பொருளாக இந்த முந்நீர் கிடக்கிறது.

இப்படியே ஆகாயத்தைப் பார்த்தாலும் இறைவனுடைய தன்மைகள் நினைவுக்கு வருகின்றன. ஆகாயம் ஓர் உருவம் உடையது. ஆனால் கண்ணுக்குப் புலப்படுவது அன்று. இறைவனும் அப்படித்தான் இருக்கிறான். அவனுடைய உருவமே வெளி அல்லது ஆகாயம் என்று கூடச் சொல்வது உண்டு. ஆகாயத்துக்கு உரியது ஒலி. ஒலி ஆகாயத்தின் மூலம் பரவுகிறது. இறைவன் நாதமயமானவன்; ஒலி வடிவானவன். அவனுடைய அருளொலி இல்லையானால் உலகில் யாரும் பேச இயலாது; ஒலிக்க முடியாது. ஆதலின் அவன் ஒலியை நினைப்பூட்டுகிறது, ஆகாயத்திலே பரவும் ஒலி. அருவமாக நிற்கும் நிலையாகிய உருவத்தையும் அது நினைவுறுத்துகிறது.

ஐம்பெரும் பூதங்களில் ஒன்றாகிய காற்றுச் சில சமயங்களில் வீசுகிறது; சில சமயங்களில் வீசாமல் நிற்கிறது. அது வீசி அடிக்கும்போது, "காற்று அடிக்கிறது" என்று சொல்லுகிறோம். அது வீசாமல் புழுக்கமாக இருந்தால், "காற்றே இல்லையே!" என்று சொல்கிறோம். காற்று இல்லாத இடத்தில் நாம் வாழ முடியுமா? அது வீசும்போது காற்று இருப்பதாக உணர்கிறோம். வீசாத பொழுது, ஒடுக்கமாக இருக்கும்போது, உணர்வதில்லை; அதனால், "காற்றே இல்லை" என்று சொல்கிறோம். காற்று, தான் இருப்பதை உணர்த்திக்கொண்டு வீசுகிறது; தான் இருப்பதை உணர்த்தாமல் ஒடுங்கி நிற்கிறது. இறைவனும் இப்படி இரண்டு தன்மையை உடையவனாக இருக்கிறான். சில காலங்களில் உலகில் அவதாரம் செய்து தன் ஆற்றலைப் புலப்படுத்துகிறான். அன்புடையவர்களுக்குத் தன் அருளால் இன்ப நுகர்ச்சி தந்து தன்னை உணரும்படி வைக்கிறான். மற்றவர்களுக்கு அந்த உணர்வு இல்லாமற் செய்கிறான். உணர்ந்

தாலும் உணராவிட்டாலும் அவன் இருப்பது உண்மை, புழுக்கத்தினால், "காற்று இல்லை" என்று சொன்னாலும் காற்று இருப்பதுபோல, அறியாமையால், "இறைவன் இல்லை" என்று சொன்னாலும் இறைவன் இல்லாமல் போவதில்லை; இருக்கிறான். அவதார காலங்களில் வாழ் வாருக்கும் அன்புடையாருக்கும் வெளிப்பட்டு அருள் செய்ய வருகிறான்; ஏனையோருக்குத் தெரியாமல் ஒடுங்கி நிற்கிறான். இந்த இரண்டு இயல்புகளையும் காற்றினிடம் பார்க்கலாம். அதனிடம் **வருதலும் ஒடுக்கமும் உள.** அவை இறைவனுடைய இயல்புகளில் ஒரு கூறு ஆகும்.

30. **நின், தோற்றமும் அகலமும் நீரின் உள;**
**நின், உருவமும் ஒலியும் ஆகாயத்து உள;**
**நின், வருதலும் ஒடுக்கமும் மருத்தின் உள.**

● நின்னுடைய தோற்றமும் பரப்பும் நீரில் உள்ளன; நின்னுடைய உருவமும் ஒலியும் ஆகாயத்தில் உள்ளன; நின் வருகையும் வாராமல் ஒடுங்கி நிற்றலும் காற்றில் உள்ளன.

தோற்றம் - காணப்படும் காட்சி; 'வெளிப்படுதல்' என்பர் **பரிமேலழகர்.** அகலம் - விரிவு; "பெருமை' **(பரிமேலழகர்.)** 'உருவம் - ஞானக்கண்ணால் காணப்படும் உருவம். ஒலி - சொல்; ஆகாயத்துள என்றார், அதன் பண்பாகலின். வருதல் - அவதரித்தல். 'ஒடுக்கம் - மீண்டு சென்று அடங்குதல்' என்பர் **பரிமேலழகர்.** மருத்து- காற்று. ●

## எல்லாம்

இப்படியே இன்னும் சொல்லிக்கொண்டு போகலாம். தீயின் தன்மையாகிய வெப்பம் இறைவனுடைய இயல்பை நினைப்பூட்டுகிறது. மலையின் உயர்வும் கடலின் ஆழமும் மரத்தின் பசுமையும் கல்லின் திண்மையும் மலரின்

மென்மையும் பொன்னின் பொலிவும் இரும்பின் வன்மையும் இறைவன் இயல்புகளின் கூறுகளே. யானையின் உயர்விலே அவன் உயர்வையும், சிங்கத்தின் வீரத்தில் அவன் வீரத்தை யும், மானின் மென்மையில் அவன் மென்மையையும், அணிலின் சுறுசுறுப்பிலே அவன் இயக்கத்தையும், மயிலின் அழகிலே அவன் அழகையும், குயிலின் குரலிலே அவன் குரலையும், காக்கையின் சிறகிலே அவன் கருநிறத்தையும் காணலாம். சேற்றிலே நெகிழ்ச்சியும், முள்ளிலே முனையும், வாளிலே கூர்மையும் அவன் இயல்புகளின் அம்சமே. இப்படிப் பார்த்தால் உலகில் உள்ள பொருள்களின் தன்மைகள் யாவும் அவனுடைய தன்மைகளின் கூறுகளே. எல்லாம் அவனிடத்தில் உள்ள தன்மைகளிலிருந்து பிரிந்தவை. ஒடுங்கும்போது அத்தன்மைகள் அவனிடம் ஒடுங்குகின்றன.

புலவர் ஒவ்வொரு பொருளாக எண்ணி அவற்றின் தன்மைகளையும் நினைந்து, அவை இறைவனுடைய தன்மை களின் கூறுகள் என்றார். கதிரவனையும், திங்களையும், மாரியையும். ஞாலத்தையும். காயாம்பூவையும், நீரையும், வானையும், காற்றையும் நினைத்து அவற்றின் தன்மைகளை யும் நினைத்தார். இப்படி ஒவ்வொன்றாகச் சொல்லிக் கொண்டே போனால் உலகில் உள்ள பொருள்கள் எல்லா வற்றையும் சொல்லலாமே! அப்படிச் சொல்வது என்பது முடிகிற காரியமா? ஆகையால் மேலே வேறு பொருள்களைச் சொல்லாமல், “இதுகாறும் நான் சொன்ன பொருள்களும், இவையல்லாமல் இவற்றோடு தொடர்புடையனவாக நினைக்கத்தகும் பொருள்களும், மற்றவையும் ஆகிய எல்லாம் உன்னிடமிருந்து பிரிந்தவை; அதனால் உன் தன்மைகளைப் பெற்றவை; காவலையுடைய உன்னால் பாதுகாக்கப் பெறுபவை. இவை மீட்டும் உன்னிடத்தே ஒடுங்குபவை” என்று சொல்லிவிடுகிறார்.

இதுகாறும் சொன்னவற்றை இவை என்று சுட்டுகிறார். அப்படிச் சொன்னவற்றோடு தொடர்புடையனவற்றை உவை என்று சுட்டால் சுட்டுகிறார். மற்றவற்றையெல்லாம் அவை என்று கூறுகிறார். இவை, உவை, அவை என்ற மூன்று சுட்டுப் பெயர்களும் மூன்று நிலையில் உள்ளவை. நமக்கு அருகில் உள்ளவற்றை இவை என்று சொல்லுவோம். இ என்ற சுட்டு அணிமையைக் குறிப்பது. கதிரவன் முதலிய பொருள்கள் நமக்கு அருகில் இல்லாவிட்டாலும், அவற்றைப்பற்றிய நினைவு அணிமையிலே உண்டாயிற்று அல்லவா? அதனால் நெஞ்சுக்கு அணிமையாகிய அவற்றை இவை என்று சுட்டுவதில் தவறு இல்லை.* பாட்டில் புலவர் **இவ்** என்று சொல்கிறார். இவ் என்பது இவை என்ற பொருளையுடைய சொல். அவர் நினைத்த பொருளொடு சேர்த்து எண்ணும் பொருள்கள் சில உண்டு. ஞாயிற்றையும் திங்களையும் சொன்னவர் அவற்றிற்கு இனமாகிய மற்றக் கோள்களையும் நினைப்பது இயல்பு. நீர், நிலம், காற்று, வான் என்பவற்றோடு தீயையும் சொல்லலாம். காயாம் பூவோடு பிற மலர்களையெல்லாம் சொல்லலாம். முன்னே சொன்னவற்றை ஒட்டிச் சொல்லத்தக்க இவற்றைப் போன்ற பொருள்களை **உவ்** என்று சுட்டினார். நினையாதவற்றை **அவ்** என்று சுட்டினார். என்ன இருந்தாலும் மனிதன் மனத்தினால் நினைக்க முடியாதவையும் பல உண்டு. அவற்றிலும் இறைவன் தன்மை உண்டு. அவற்றையெல்லாம் **பிற** என்ற சொல்லிலே அடக்கினார். "எல்லாம் உன்னிடமிருந்து பிரிந்து உன்னிடமே ஒடுங்குவன" என்கிறார்.

---

* 'இவள் என்றார், தம் கருத்துக்கண் அணுமையான்' என்று **புறநானூற்று** உரையாசிரியர் (72 : 2) எழுதியது இங்கே நினைப்பதற்குரியது.

**அதனால், இவ்வும் உவ்வும் அவ்வும் பிறவும்**
**ஏமம் ஆர்ந்த நிற் பிரிந்து**
35. **மேவல் சான்றன, எல்லாம்;**
**சேவல் ஓங்கு உயர் கொடியோயே !**

● (இவ்வாறு ஒவ்வொரு பொருளிலும் உள்ள தன்மைகள் நின்னுடைய தன்மைகளின் கூறு என்று தெரியும்) அக்காரணத்தால், இதுகாறும் கூறிய பொருள் களும், இவற்றோடு தொடர்புடைய பொருள்களும், தொடர்பில்லாப் பொருள்களும், பிற பொருள்களுமாகிய எல்லாம் காவல் செய்யும் அருள் நிரம்பிய நின்னிடமிருந்து பிரிந்து மீட்டும் நின்னிடத்திலே பொருந்துதல் அமைந்தன; ஆண் கருடனாகிய ஓங்கிய உயர்வையுடைய கொடியை உடையவனே!

அதனால்: மேலே ஒவ்வொரு பொருளிலும் இறைவன் தன்மை உளவாதலைக் கூறினார். அவ்வாறு பொருளின்கண் உள்ள தன்மைகள் நின்னுடைய தன்மைகளாவதனால் என்று பொருள் கொள்ளவேண்டும். இவ்-இவை. உவ்-உவை. அவ்-அவை. உவ் என்பது இடையில் உள்ளவற்றையும் மேலுள்ளவற்றையும் புலப்படுத்தும். அவ் என்பது சேய்மை யில் உள்ளவற்றைச் சுட்டும். 'இவை யென்றது நணிய வற்றை; உவை யென்றது அவற்றிற் சேயவற்றை; அவை யென்றதுஅவற்றினும் சேயவற்றை; பிறவென்றது காணப் படாதவற்றை', (**பரிமேலழகர்**). ஏமம்-பாதுகாப்பு; இன்பம் என்றும் சொல்லலாம். ஆர்ந்த-பொருந்திய. பிறவுமாகிய எல்லாம் சான்றன என்று கூட்டுக. மேவல் - மீட்டும் நின்னிடத்தே ஒடுங்குதல். சான்றன - அமைந்தன. சேவல்-கருடன். ●

உலகத்துப் பொருள்கள் யாவும் இறைவனால் படைக்கப் பெற்று, அவனாலே பாதுகாக்கப் பெற்று, அவனிடத்திலே ஒடுங்குவன. படைப்பு, காப்பு, அழித்தல்

என்ற மூன்றையும் இறைவன் செய்கிறான். 'நிற்பிரிந்து' என்றதனால் படைத்தலையும், 'ஏமம் ஆர்ந்த நின்' என்றதனால் காத்தலையும், 'மேவல் சான்றன' என்றதனால் அழித்தலையும் குறிப்பிட்டார். 'என்றது, உலகுயிர்களின் தோற்றமும் நிலைபேறும் ஒடுக்கமும் நின்கண்ண என்றவாறும்' என்று பரிமேலழகர் எழுதியிருக்கிறார்.

## கொடியின் இயல்பு

"சேவலோங்கு உயர் கொடியோயே!" என்று கூறிய வுடன் புலவருக்கு அந்தக் கொடியைப் பற்றிய எண்ணம் விரிகிறது. திருமாலின் அவதாரம் பல. அவற்றுள் ஒவ்வோர் அவதாரத்தில் ஒவ்வொரு கொடியை உடையவனாக விளங்கினான். ஆயினும் நாராயணமூர்த்திக்கு என்றும் உள்ள கொடி கருடக்கொடி. மற்றக் கொடிகள் பல இருந்தாலும் ஒப்பற்றதாக ஓங்கி நிற்பது கருடக் கொடி. கொடியாகவும் ஊர்தியாகவும் இருக்கும் கருடன் மிக்க சிறப்புடையவன். திருமாலின் அடியவர்கள் அவனைப் பெரிய திருவடி என்று சொல்லுவார்கள்.

சேவற் கொடியையுடைய திருமாலுக்கு வேறு என்ன என்ன கொடிகள் அவதார காலங்களில் இருந்தன? பலராமனாக வந்தபோது அவன் பனைக்கொடியை உடையவனாக இருந்தான். அதனால் தாலகேது என்ற பெயர் அவனுக்கு வந்தது. நாஞ்சிலாகிய கலப்பைக் கொடியும் யானைக் கொடியும் அவனுக்கு உண்டு. ஆனாலும் அவை யாவும் ஒப்பில்லாத ஒரு கொடியாகி நிற்கும் தன்மை யுடையன அல்ல. எக்காலத்தும் ஒரே கொடியாக, எவ்விடத்தும் ஓங்கி உயர்ந்து நிற்பது கருடக்கொடிதான். மற்றவற்றிற்கு அப்படி ஒன்றாக உயர்ந்து நிற்கும் சிறப்பு இல்லை.

சேவல் ஓங்கு உயர் கொடி
நின் ஒன்று உயர் கொடி பனை;
நின் ஒன்று உயர் கொடி நாஞ்சில்;
நின் ஒன்று உயர்கொடி யானை;
நின், ஒன்றா உயர்கொடி ஒன்று இன்று.

● சேவல் ஓங்கி உயர்ந்திருக்கும் கொடியையுடைய நினது உயர்ந்த கொடி ஒன்று பனை; நின் உயர்ந்த கொடி மற்றொன்று கலப்பை; நின் உயர்ந்த கொடி பின்னும் ஒன்று யானை; (இப்படிப் பல கொடிகள் இருந்தாலும்) நின்னுடைய கொடி ஒன்றேயாக உயர்ந்த கொடி இவற்றுள் ஒன்றும் இல்லை.

உயர் கொடியையுடைய நின் என்று கூட்டுக. உயர் கொடி ஒன்று பனை என்று பொருந்தவேண்டும். நாஞ்சில்-கலப்பை. ஒன்று இன்று - மேற்கூறியவற்றுள் ஒன்று இல்லை. 'இவ்வண்ணம் பல கொடியுளவேனும், நின் ஒன்றாக உயர்ந்த கொடியை அக்கொடிகள் ஒன்றுதல் இன்று. ஒன்றாதல். முதலாதல். ஒன்றுதல்-ஒத்தல்' என்பது பரிமேலழகர் உரை. ●

அவனுடைய கொடிகளுள் பிறவற்றிற்கு இல்லாத சிறப்பை உடையதும், ஒன்றாக உயர்ந்ததும் ஆகிய கருடக் கொடியின் பெருமையை அளவிட்டுச் சொல்ல இயலாது. அந்தக் கொடியின் மிசையிருந்து காட்சி தரும் கருடன் திருமாலுக்கு வாகனமாகவும் இருக்கிறவன். திருமாலின் அங்க அடையாளங்களின் பெருமையைச் சொல்லும்போது அப்பெருமானுடைய கொடியில் இருக்கும் கருடனுடைய பெருமையை எண்ணிப் பார்ப்பது பொருத்தந்தான்.

கருடன் என்றாலே அஞ்சுவது பாம்பு. பாம்புக் குலத்துக்குப் பகை கருடன். விடத்தையுடைய நாகங்களின் உயிர் குடிப்பது; அவற்றின் உடம்பையும் விழுங்குவது.

கருடன். அதுமாத்திரமா? மற்றவர்களுக்கெல்லாம் பாம்பென்றால் அச்சம். "பாம்பென்றால் படையும் நடுங்கும்" அல்லவா? ஆனாலும் கருடன் அந்தப் பாம்புக்கு அஞ்சாதவன்; வேண்டிய படியெல்லாம் பாம்புகளை உபயோகப் படுத்திக் கொள்கிறான்.

கருடனை அது என்று சொல்வதைவிட அவன் என்று சொல்வதுதான் தக்கது. இறைவனுக்குக் கொடியாக நிற்கும் பேறுடையவன் அல்லவா? கருடன் என்ற உயர்திணைப் பெயரைப் படைத்தவன் ஆயிற்றே. அவனுடைய வயிற்றின்மேல் உதரபந்தனமாக ஒரு பாம்பைக் கட்டிக்கொண்டிருக்கிறான். அவன் கையிலேயும் தோளிலும் வளையாக இட்டிருப்பவை பாம்புகளே. முடியின்மேலும் பாம்புகள் இருக்கின்றன. பாம்பையே அணிகளைப் போலப் பூண்டிருக்கிறான். அவன் தலைமேலே குடைவிரித்தாற் போலப் பாம்பு இருக்கிறது. பகைவர்களை ஏவலாளராக வைத்துக் கொள்வது அரசர்களுக்கு இயற்கை. புள்ளரசனாகிய கருடன் பாம்புக்குலத்தைப் படுத்தும் பாடு சொல்லத் தரமன்று. என்ன என்னவோ விதமாக வேலை வாங்குகிறான். அவற்றைச் சிறகுகளில் தொங்கவிட்டிருக்கிறான். சிறகுகளின் தலைப்பிலே பூணைப் போலப் பொருத்திக் கொண்டிருக்கிறான்.

**விடமுடை அரவின் உடல் உயிர் உருங்கு உவணம்;**
**அவன் மடிமேல் வலந்தது பாம்பு;**
**பாம்புதொடி; பாம்பு முடிமேலன;**
**பாம்பு பூண்; பாம்பு தலைமேலது;**
**பாம்பு சிறை; தலையன**
**பாம்பு.**

● விடத்தையுடைய பாம்பின் உடலையும் உயிரையும் விழுங்கும் கருடன் (அந்தக் கொடியில் இருப்பது;)

அவனுடைய வயிற்றின்மேல் கட்டியிருப்பது பாம்பு; பாம்பே அவனுக்கு வளையாக இருப்பது; பாம்பு முடிமேல்; பாம்பே ஆபரணங்கள்; பாம்பே தலைக்கு மேலே இருப்பது; பாம்பே சிறையில் இருப்பவை; சிறையின் தலைப்பில் இருப்பவை பாம்பு.

உருங்கு-உண்ணும் உவணம்-கருடன். 'அது கடவுட் கொடியென்பது தோன்ற அவன் என உயர்திணையால் கூறினார்' என்பர் **பரிமேலழகர்**. மடி - வயிறு - வலந்தது. கட்டியது. தொடி-கைவளை, தோள்வளை. பூண்-ஆபரணம். சிறை-சிறகு. தலையன-சிறகின் தலைப்பில் உள்ளவை. ●

திருமால் பகைவர்களுடைய செருக்கை அழிப்பவன். அவனுடைய கொடியாக உள்ள கலுழனும் தன் பகையை அழிப்பவன். அவனுடைய பொன்னாபரணங்கள் பாம்புகளே. அவன் தாக்கி அலைத்து இரையாகக் கொள்பவையும் பாம்புகளே.

**படி மதம் சாய்த்தோய்! பசும் பூண் அவை;**
**கொடிமேல் இருந்தவன் தாக்கு இரையது பாம்பு.**

● பகைவர்களின் செருக்கை அழித்த திருமாலே! கருடனுக்குப் பசும் பொன்னாலான பூண்களும் அந்தப் பாம்புகளே; நின் கொடிமேல் இருந்தவனாகிய அவன் தாக்கிக் கொன்று உண்ணும் இரையும் பாம்பே.

படி-பகை. மதம்-செருக்கு. சாய்த்தாய்-அழித்தவனே பசும்பூண்-பொன்னாலான அணி; பசுமை, பொன்னைக் குறிக்க வந்தது.

'இதனால் கருடனுக்கு அறனுடைமையும் மறனுடைமையும் கூறப்பட்டன' (**பரிமேழகர் உரை.**) ●

## பகையும் நட்பும் இன்மை

இவ்வாறு பாம்புகளை அணியாகவும் குடையாகவும் இரையாகவும் கொள்ளும் கருடனைக் கொடியாகக் கொண்ட திருமாலும் சிலரை அழித்தான்; துன்புறுத்தினன். அவர்களிடத்திலே அவனுக்குப் பகைமை உண்டா?

இராவணன், இரணியன் முதலியவர்களை இறைவன் அழித்தான். அவர்களிடத்தில் உள்ள குற்றத்தைக் கண்டு அவர்கள் வருந்தும்படி வெகுண்டு துன்புறுத்தினன். விபீடணனையும் பிரகலாதனையும் பாதுகாத்தான் இப்படியே குற்றமுடையோரைத் தடிதலும் அன்புடையோரைப் பாதுகாத்து அருளுதலும் அவன்பால் உண்டு என்பதைப் பழைய வரலாறுகள் சொல்கின்றன. ஆதலால் இறைவனுக்குப் பகைவர் இன்னார், நண்பர் இன்னார் என்ற வேறுபாடு உண்டோ? இந்த ஐயம் சிலருடைய உள்ளத்தில் எழலாம். மனிதர்களுக்குப் பகைவரும் நண்பரும் இருப்பது போல, இறைவனுக்குப் பகைவரும் நண்பரும் இருக்கிறார்கள் என்று சொல்லலாமா?

இறைவனுக்கு அரக்கர் அத்தனை பேரிடமும் பகை உண்டு என்று சொன்னால், இராவணன், கரன், கும்பகர்ணன் முதலியவர்கள் திறத்தில் அது உண்மையாகும். இராவணன் பகைவன் என்றால், அவனைச் சார்ந்த யாவருமே பகைக் குழுவினரே. ஆனால் அவன் தம்பியாகிய விபீடணன் இறைவனுடைய அருளைப் பெற்றான். பகைவனுடைய தம்பி என்ற நினைவு இருந்தால் அவனுக்கு அருள் கிடைத்திராது. அப்படியே பிரகலாதனுக்கு அருள் செய்து இறைவன் அவனிடம் அபிமானம் கொண்டிருந்தால் அவன் தந்தையை அழிக்காமல் இருக்க வேண்டும்.

பிரகலாதன் தன் தந்தையென்ற நினைவோடு இகழாதிருந்த போது, இறைவன் தோன்றி இரணியனை இகழ்ந்து கொன்றான். இரணியனிடம் பகைமை இருந்தது என்றால் அவன் மகனுக்கு அருள் செய்வது மனித உணர்ச்சியோடு பொருந்துவது அன்று. கண்ணனாகத் திருவவதாரம் செய்தபொழுது தன் சொந்த மாமனை அழித்தான். மாமன் என்ற உறவு, அபிமானத்தை மிகுதியாகப் பெற்ற உறவு. அப்படியிருந்தும் மாமனாகிய கம்சனைக் கொன்றான் கண்ணன். ஆதலின் இறைவனுக்குப் பகையென்றும் நட்பென்றும் வரையறை இல்லையென்றே தோன்றுகிறது.

அப்படியானால் ஏன் சிலருக்கு அருளையும் சிலருக்கு வருத்தத்தையும் தருகிறான்?

சூரியன் வானத்தில் உதயமாகிறான். அதன்முன் உலகமே களிக்கூத்தாடுகிறது. சூரியனுக்குப் பகைப் பொருள் இது, நட்புப் பொருள் இது என்று அவற்றைச் சொல்ல முடியாது. ஆனால் சூரியன் உதயமாகும் போது தாமரை மலர்கிறது; நீல மலர் கூம்புகிறது. சூரியன் தாமரையினிடம் இனிய கதிர்களையும், நீல மலரினிடம் இன்னாத கதிர்களையும் வீசுவதில்லை. அதன் கதிர்கள் யாவும் ஒரே தன்மையன. அதில் பகைத் தன்மையும் நட்புத் தன்மையும் இல்லை. ஆயினும் தாமரையினிடம் மலர்ச்சியையும், நீல மலரிடம் குவிவையும் அந்தக் கதிர்கள் உண்டாகச் செய்கின்றன. கதிரவனுடைய கிரணங்களால் பனிக்கட்டியிலிருந்து நீர் சுரக்கிறது; சூரிய காந்தத்திலிருந்து நெருப்பு உண்டாகிறது. இரண்டு பொருள்களிடத்தும் வீசும் கதிர் ஒன்றேதான். வெங்கதிரோன் வீசும் வெயிலால் கடல் நீர் உப்புக் கட்டியாக மாறுகிறது; கட்டி நெய்யோ உருகி ஓடுகிறது. சூரியன் தாமரைக்கும் பனிக்கட்டிக்கும் நண்பன் என்றும், நீல மலருக்கும் சூரிய

காந்தத்துக்கும் பகைவன் என்றும் சொல்லலாமா? சொல்வது பொருந்தும் அன்று.

பின், இந்த வேறுபட்ட விளைவுகள் உண்டாவதற்குக் காரணம் என்ன? சூரியனுடைய கதிரின் தன்மை ஒன்றாகவே இருந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளும் பொருளின் இயல்புக்கு ஏற்றபடி விளைவு உண்டாகிறது. சூரியன் மலர்களுக்கு நட்புப் பூண்டவன் என்று சொல்ல இயலாது, நீலோற்பலத்தைக் குவிய வைப்பதனால். பகைவன் என்று சொல்ல இயலாது, தாமரையை மலர வைப்பதனால். தாமரையின் இயல்பு சூரியன் கதிர்களைக் கொண்டு மலரும் இயல்பு. நீல மலரின் பண்பு கதிரவன் கதிர்களுக்கு முன் கூம்புவது. ஆகலின், மலர்தலும் கூம்புதலுமாகிய வேறுபாடுகளுக்குரிய வெவ்வேறு காரணம் கதிரவன் கதிரில் இல்லை; மலர்களின் தன்மையில் இருக்கிறது.

இறைவனுடைய திருவருளும் அத்தகையதுதான். பொல்லாதவர்களுக்கு அவன் அருள் வெகுளியாக விளைகிறது; துன்பமாக வருகிறது. நல்லவர்களுக்கு ஆதரவாக விளைகிறது; இன்பமாக வருகிறது. மக்கள், தேவர், அரக்கர், அசுரர் யாராயிருப்பினும் ஒரு சாதியோ, குலமோ, கூட்டமோ அவனுடைய ஆதரவுக்கும் வெகுளிக்கும் உரியது என்று சொல்வது உண்மை அன்று. அவர்களுடைய தன்மைதான் இந்த இரு வகை விளைவுகளுக்கும் காரணமாக இருப்பது. பிறருக்குத் தீங்கு புரியும் வெம்மையுடையோர், பாவம் செய்வோராவார். பாவத்தை மறம் என்றும் சொல்லலாம். மறம் புரிவோருடைய மறமே இறைவன் திருமுன் வருத்தமாக விளைகிறது. புண்ணியமாகிய அறம் உயிர்களுக்கு இனியது; தண்மையானது. அந்தத் தண்ணிய இயல்புடையோருடைய இயல்பே இறைவன் திருமுன் இன்பமாக விளைகிறது.

**வெம்மை** உடையவர்களுடைய கடுமையான தற்றத்தைக் கண்டு அவர்கள் வருந்தும்படியான வெகுளியை இறைவன் தோற்றுவிக்கிறான்; விருப்பம் இல்லாதவனைப் போல, பட்சபாதம் உடையவனைப் போல, தோற்றுகிறான். வெம்மையாகிய மறம் இல்லாதவரிடத்துக் கடுப்பும் கோட்டமும் (பட்சபாதமும்) இல்லாதவனைப்போலத் தோற்றுகிறான். அப்படியே **தண்மை** உடையவர்களுக்கு அருள் செய்பவனைப் போலவும் நடுநிலையில் இருப்பவனைப் போலவும் விளங்குகிறான். அது இல்லாதவர்களிடம் அவை இல்லாதவனைப்போலத் தோற்றுகிறான்.

இவ்வாறு அவரவர்களுடைய அறத்துக்கும் மறத்துக்கும் ஈடாகக் கடுத்தலும் நல்கலும் இறைவனிடம் விளைகின்றனவே அன்றி, தன்னைப் போற்றாதவர்களென்ற காரணத்தால் அவர்கள் உயிரைப் போக்குதல் அவன் இயல்பு அன்று; தன்னைப் போற்றுகிறவர்கள் என்பதற்காக அவர்களுடைய உயிருக்கு இன்பம் செய்தலும் அவன் இயல்பு அன்று. அவன் அருள் எல்லோருக்கும் பொதுவானது. அறம் செய்தாருக்கு அந்த அருள் இனிதாக இருக்கிறது; மறம் செய்தாருக்குக் கொடியதாக இருக்கிறது.

இறைவன் நல்லோருக்கு அருள்வதையும் அல்லோரை அடக்கி வருத்துவதையும் கருணையின் இருவேறு பகுதிகள் என்றே சொல்லவேண்டும். நல்ல குழந்தைக்குத் தின்பண்டம் தந்து பள்ளிக்கூடத்துக்கு அனுப்பும் தாய், பொல்லாத குழந்தையை அடித்துச் சோறுகூடப் போடாமல் இருக்கிறாள். இந்த இருவகைச் செயல்களுக்கும், தன் பிள்ளைகள் நல்லவர்களாக வளர வேண்டும் என்ற தாயன்பே காரணம். தோற்றத்தில் ஒன்று இனிதாகவும் மற்றொன்று கொடிதாகவும் இருந்தாலும் இரண்டுக்கும்

மூலம் அன்புதான் அப்படியே இறைவன் நன்மையருளி இன்பந்தருவதற்குக் காரணமாகிய கருணையே, அல்லோருக்குத் துன்பந் தந்து ஒறுத்தலுக்கும் காரணம் ஆகிறது. இரண்டும் வெவ்வேறு செயலாக, ஒன்றற்கு ஒன்று மாறுபட்டனவாகத் தோற்றினாலும் கருணையின் விளைவுகளே. இனியதைத் தருகின்ற கருணையை அறக்கருணை யென்றும், இன்னாததைத் தருகின்றதை மறக்கருணை யென்றும் பெரியோர் கூறுவர்.

"வானம்எங் கேஅமுத பானம்எங் கேஅமரர்
வாழ்க்கைஅபி மானம் எங்கே
மாட்சிஎங் கேஅவர்கள் சூழ்ச்சிஎங் கேதேவ
மன்னன்அர சாட்சி எங்கே
ஞானம்எங் கேமுனிவர் மோனம்எங் கே அந்த
நான்முகன் விதித்தல் எங்கே
நாரணன் காத்தலை நடாத்தலெங் கேமறை
நவின்றிடும் ஒழுக்கம் எங்கே
ஈனம்அங் கேசெய்த தாருகனை ஆயிர
இலக்கமுறு சிங்கமுகனை
எண்ணரிய திறல்பெற்ற சூரனை மறக்கருணை
ஈந்துபணி கொண்டிலைஎனின்?
தானம்இங் கேர்சென்னைக் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே"

என்பதில் **இராமலிங்க வள்ளலார்,** சூரன் முதலியோரை முருகன் சங்கரித்தருளின செயலை **மறக்கருணை** என்று சொல்கிறார்.

இவ்வாறு, எல்லாம் இறைவன் அருளின் விளைவே என்று சொல்வதற்குக் காரணம் என்ன? அவனுக்கு எந்த

உயிரினிடத்தும் பகையோ, சிறப்பான விருப்போ இல்லை. அவனுக்குப் பகைவரும் இல்லை; நண்பினரும் இல்லை. இறைவன் அசுரரை அழித்தான், அன்பரைக் காத்தான் என்று சொல்லும் வரலாறுகள் யாவும் இந்த இயல்புக்கு முரணானவை அல்ல. இந்த உண்மையைச் சற்றே சிந்தித்துப் **போற்றி** உணர வேண்டும். இல்லையானால் தெளிவு பிறவாது. இரணியனை நரசிங்கமாகி அழித்தான், பூமியை வராகமாகி எடுத்தான் என்று முன்னே புகழ்ந்து விட்டு, "அவனுக்குப் பகைவரும் இல்லை; கேளிரும் இல்லை" என்று சொன்னால், இரண்டும் ஒன்றுக்கு ஒன்று மாறுபட்டதுபோலத் தோற்றலாம். ஆனால் முன்னே சொன்ன நியாயங்களையெல்லாம் ஆழ்ந்து சிந்தித்தால் **வேற்றுமை இன்று** என்று விளங்கும்.

**கடு நவை அணங்கும் கடுப்பும் நல்கலும்**
**கொடுமையும் செம்மையும், வெம்மையும் தண்மையும்**
**உள்வழி உடையை; இல்வழி இலையே;**
**போற்றார் உயிரினும் போற்றுநர் உயிரினும்**
**மாற்று ஏம் ஆற்றல் இலையே; நினக்கு**
**மாற்றோரும் இலர், கேளிரும் இலர் எனும்,**
**வேற்றுமை இன்று, அது போற்றுநர்ப் பெறினே.**

● கடுமையான குற்றத்துக்காக வருத்தும் கோபமும், அருள் செய்தலும், ஒருபாற் கோடித் தண்டிக்கும் கொடுமையும், நடுநிலையும் ஆகிய இவை பாவமும் புண்ணியமும் உள்ளவிடத்து உடையாய்; இல்லாத இடத்து இல்லாய். உன்னை வழிபடாதார் உயிருக்கும் வழிபடுவார் உயிருக்கும் மாற்றி அழித்தலைச் செய்வதும் இன்பம் செய்வதும் உன்பால் இல்லை. நினக்குப் பகைவரும் இல்லை, நட்பினரும் இல்லை; என்றாலும் (முன்னே சொன்னவற்றிற்கும் இதற்கும்) வேறுபாடு இல்லை, அதை ஆராய்ந்து கொள்வாரைப் பெற்றால்.

49-51. கடு நவை அணங்கும் கடுப்பு - கடுநவையின் பொருட்டு வருத்தும் கோபம்: நவை-குற்றம்; அணங்குதல்-வருத்துதல்; கடுப்பு-கோபம். நல்கல்-அருள் செய்தல். கொடுமை-கோடுதல். செம்மை-நடுநிலை. வெம்மை-மறம்; பாவச்செயல். தண்மை-அறம்; புண்ணியச்செயல். உள்வழி-அவற்றை உடையோரிடம். இல்வழி-இல்லாதாரிடம்.

வெம்மை உடையோரிடம் கடுநவை அணங்கும் கடுப்பும் கொடுமையும் உடையாய்; இல்வழி இலை. தண்மையுடையோரிடம் நல்கலும் செம்மையும் உடையாய்; இல்வழி இலை என்று முறையே கூட்டிப் பொருள் கொள்ள வேண்டும்.

52-3. போற்றார்-பகைவர். போற்றுநர்-வழிபடுவோர். மாற்று-மாற்றுதல்; போக்குதல். ஏம் ஆற்றல்-இன்பத்தைச் செய்தல்.

54-5. மாற்றோர்-பகைவர். கேளிர்-நண்பர். எனினும் என்பது எனும் என்று விகாரப்பட்டு நின்றது. போற்றுநர் பெறின்-ஆராய்ந்து தெளிந்து கொள்பவரைப் பெற்றால். போற்றுவாருக்கு இவ்விரண்டினுள்ளும் வேற்றுமை இல்லை யென்று விளங்கும் என்பது கருத்து.

'என்றது, குற்றமாகிய மறமுடையாரிடத்து வெகுளியும் கோட்டமும் உடையையாய் அஃது இல்லாரிடத்து இல்லை யாதலும், குணமாகிய அறமுடையாரிடத்து அருளும் செம்மையும் உடையையாய் அஃது இல்லாரிடத்து இல்லை யாதலும் அல்லது, நினக்குப் பகையாயினார் உயிரின்கண் அதனை மாற்றுதல் தொழிலும், நினக்குக் கேளிராயினார் உயிரின்கண் அதற்கு ஏமம் செய்தல் தொழிலும் உடையை அல்லை; அவ்விருதிறத்தாரும் நினக்கு இன்மையான் என்றவாறு' என்றும், 'உயிர்களது இயல்பான் நினக்குப் பகையும் நட்பும் உளபோலத் தோன்றுவதல்லது நின் இயல்பான் அவை உளவல்ல என்றவாறும்' என்றும் எழுதுவார் **பரிமேலழகர்** ●

இறைவன் விருப்பு வெறுப்பு அற்றவன்; "வேண்டுதல் வேண் டாமை யிலான் அடி சேர்ந்தார்க், கியாண்டும் இடும்பை யில" (குறள்) என்பது வள்ளுவர் வாக்கு. ஆகவே விருப்பிற்குரிய கேளிரும் வெறுப்புக்குரிய பகை வரும் அவனுக்கு இல்லை.

## மூவகை நிலை

**தி**ருமால் பொறிகளால் உணரும் உருவம் இல்லாதவ னாகவும், அன்பர்கள் அவனருளே கண்ணாகக் காணும் போது சில வகை உருவங்களை உடையவனாகவும், இயற்கை யாக அமைந்த பொருள்கள் யாவுமே தன்னுடைய வடிவாகப் பெற்றவனாகவும் இருக்கிறான். இந்த மூன்று வகை நிலையையும் புலவர் பாடுகிறார்.

அப்பெருமானுக்கு மனத்தினாலே பற்றிக் கொள்வதற் குரிய வடிவு என்று தனியாக ஒன்று இல்லை. அவன் மனத் துக்கும் அப்பாற்பட்டவன்; பொறிகளால் உணரப் படாதவன்.

**மனக்கோள் நினக்கு என வடிவு வேறு இலையே.**

● நினக்கு என்று மனத்தினால் பற்றிக்கொள்ளுவதற்கு அமைந்த வடிவம் தனியே ஒன்றும் இல்லை.

மனக் கோள் வடிவு என்று கூட்டுக. கோள் - கொள் ளுதல். வடிவு - கை கால் முதலியவற்றோடு கூடிக் கண்ணுக்குத் தோற்றுவதாக அமைந்த உருவம்.

'அன்பர் மனத்திற் கொண்டனவன்றி, நினக்கென வேறு வடிவு உடையை அல்லை.' (**பரிமேலழகர்.**) ●

எப்போதும் ஒரு குறிப்பிட்ட வடிவத்தோடு இருப்பவனானால் அவனுக்கு அதுவே வடிவம் என்று சொல்லலாம். ஒருவன் நாடகத்திலே பல வேடம் புனைபவனாக இருந்தாலும் அத்தனை கோலங்களும் அவனுடையன அல்ல. தனக்கென்று அமைந்த வடிவம் உண்டானால் அது ஒன்றாகத் தான் இருக்க முடியும். திருமாலுக்குப் பல வடிவங்கள் உண்டு என்று சொல்லும்போது குறிக்கும் வடிவங்கள் அன்பர்களுக்கு அருள் தரும் பொருட்டு மேற்கொண்டவைகளே. நாடகம் ஆடுவோன் நாடக ரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்த வெவ்வேறு கோலம் புனைவது போன்றது இது. ஆதலின் தனக்கென்று வரையறையாக யாவரும் கண்ணால் காணும் ஒரே வடிவம் அவனுக்கு இல்லை என்றார்.

அப்படி இல்லையாயினும் அவன் அருள் பெற்றார் காணும் அழகிய வடிவங்கள் அவனுடையனவே; அவன் வேண்டுமென்று மேற்கொள்வனவே. அவற்றின் அழகை உவமையோடு சார்த்தி எண்ணிப் பார்க்கிறார் புலவர்.

திருமால் இருள் போன்ற கருநிறமுடையவன். ஆனால் நம்முடைய கண்ணை மறைக்கிற இருளை அதற்கு உவமை சொல்லலாமா? இருளில் இல்லாத கவர்ச்சி அவன் மேனிக்கு உண்டு. இந்த இருளை நாம் ஏற்றுக்கொள்வதில்லை. நமக்கு விருப்பமில்லாத துன்பத்தை இருள் என்று சொல்கிறோம். ஆனால் இறைவனுடைய திருமேனியோ பல முறை கண்டு மகிழ்வதற்குரியது. நாம் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வதாக ஓர் இருட்டு இருக்குமானால் அதை அப்பெருமான் திருமேனிக்கு உவமை சொல்லலாம்; அந்த இருளின் இருக்கையென்றே அவன் திருமேனியைக் கூறலாம்.* அழகிய நீல மணியையும் சொல்லலாம்.

---

* "அல்லையாண்டு அமைந்த மேனி அழகன்" என்பது கம்பர் வாக்கு.

**கோள் இருள் இருக்கை, ஆய் மணி மேனி.**

● உவந்து ஏற்றுக் கொள்ளுதலையுடைய இருட்டின் இருப்பிடம், ஆய்ந்தெடுத்த நீல மணி நின் திருமேனி.

கோள் - கொள்ளுதல். கோள் இருள் என்பது இல் பொருள் உவமை. மேனி - நிறம். 'கண்ணைக் கொள்ளு தலையுடைய இருட்கு இடமாய நீலமணி போலும் மேனி' என்பது **பரிமேலழகர்** உரை. ●

அந்தத் திருமேனியில் திருமால் துழாய் மாலையை அணிந்திருக்கிறான். அம் மாலையில் திருத் துழாயின் மலரும் இருக்கிறது. கட்டு விட்டு அலர்ந்த பூவோடு கூடிய திருத் துழாய் மாலை அது. அதன் வாசனை நெடுந் தூரத்துக்கு வீசுகிறது. துளவத்தின் இலையும் மலரும் சேர்ந்த கொத்துக் களை மாலையாகக் கட்டியிருக்கிறார்கள்.

**நக்கு அலர் துழாஅய் நாறு இணர்க் கண்ணியை.**

● வெடித்து அலர்ந்த மலரோடு கூடிய துளவத்தின் மணம் வீசும் கொத்துக்களால் கட்டிய மாலையை உடையாய்.

நக்கு - கட்டுவிட்டு; வெடித்து. அலர் துழாய் என்பதைத் துழாய் மலரென்றே கொள்ளுவதும் பொருந்தும். இணர் - கொத்து. கண்ணியென்றது தலையிற் சூடும் சிறிய மாலைக்குப் பெயரானாலும் இங்கே பொதுவாக மாலையைக் குறித்து நின்றது.

'மேனியிலே கண்ணியை உடையாய்' என்று கூட்டியும் பொருள் கொள்ளலாம். ●

அவனுடைய திருமார்பிலே துழாய் மாலை கிடந்து புரள்கிறது. அதனூடே பார்த்தால் அம்மார்பில்

திருமகள் வீற்றிருத்தலைக் காணலாம் அவள் அவன் கரிய திருமார்பிலே ஒரு சிறிய மறுப் போல இருக்கிறாள். மறுவானாலும் அழகு தருவது; புனை மறு. அது பொன்னிறம் வீசுவது. திருமகள் பொன் நிறத்தவள் அல்லவா?

**பொன்னின் தோன்றிய புனை மறு மார்ப !**

● பொன்னைப் போலத் தோற்றம் அளிக்கும், புனைந்தது போன்ற, திருமகளாகிய மறுவையுடைய மார்பனே !

புனை - அலங்கரித்தால் போன்ற. 'திருமகளாதலால் புனைமறு என்றார்' **(பரிமேலழகர்.)** திருமகளே மறுவாக இருத்தலின், "திரு மறு மார்பு" **(பெரும்பாணாற்றுப்படை, 29)** என்று பிற புலவரும் கூறினர்; இதனை ஸ்ரீவத்ஸமென்பர் வடமொழியாளர். ●

அவனுடைய திருமேனியையும் மாலையையும் மார்பையும் சொன்ன பிறகு மேலும் சொல்ல ஆசைப் படுகிறார் புலவர். ஆனால் ஒவ்வோர் அங்கமாகச் சொல்லிக் கொண்டே போனால் மிக மிக விரிவாகச் சொல்லவேண்டி யிருக்குமே! அவன் திருவுருவத்தை உள்ளக் கண்ணிலே நிறுத்திப் பார்க்கிறார். மேலும் கீழும் பார்க்கிறார். மேலே பளபளவென்று ஒளி விடும் திருவிழிகளையும் கீழே யாவர்க்கும் பற்றுக் கோடாக இருக்கும் திருவடிகளையும் காண்கிறார். அவை இரண்டையும் சொல்லி அவனுடைய திருவுருவ வருணனையை நிறைவேற்ற எண்ணுகிறார் புலவர்.

அவனுடைய கண்ணுக்கு எதை உவமை கூறலாம்? கமலக் கண்ணன் அல்லவா? தாமரையைத்தான் சொல்ல வேண்டும். உலகில் சேற்றிலே முளைக்கும் தாமரையைச் சொல்ல அவர் மனம் இடம் கொடுக்கவில்லை. சேற்றிலே முளைக்காத தாமரை ஒன்று இருந்தால் அதைச் சொல்லலாம். அப்படி ஒன்று இருக்கிறதா? தாமரை சேற்றிலே

தோன்றுவதனால்தான் பங்கயம் என்று பெயர் பெற்றது. பங்கயம் அல்லாத தாமரை ஏது?—புலவர் யோசித்துப் பார்க்கிறார். சேற்றிலே முளைக்காத தாமரை ஒன்றை அவர் கண்டுபிடித்துவிட்டார். அது உலகிலுள்ள தாமரை களைப் போன்றதன்று அது தோன்றிய இடமும், அதனை இடமாகக் கொண்ட பொருளும் மிக மிகச் சிறப்பானவை.

அவனுடைய திருவுந்தியிலே தோன்றிய தாமரையைப் பங்கயம் என்று சொல்ல முடியுமா? அது சேற்றில் முளைக்காத தாமரை; அடுக்கடுக்காக இதழ்களையுடைய தாமரை; தாமரையின் இலக்கணம் ஒன்றும் குறைவின்றி மலர்ந்த தாமரை. அதைத்தான் அளப்பரியவனாகிய அப் பெருமானுடைய கண்ணுக்கு உவமை சொல்ல வேண்டும்.

**நின்னின் தோன்றிய நிரை இதழ்த் தாமரை**
**அன்ன நாட்டத்து அளப்பரியவை.**

● நின்னிடத்திலே (உந்தியில்) தோன்றிய வரிசையான இதழ்களையுடைய தாமரை மலரைப் போன்ற கண்ணை யுடைய, அளத்தற்கு அரியை.

நிரை-வரிசை. இந்தத் தாமரையில் பிரமன் தோன்றி னான். நாட்டம்-கண். அளப்பரியை என்பது அளப்பரியவை எனச் செய்யுளை நோக்கி வந்தது; ஓர் அகரம் இடையிலே புதிதாகச் சேர்ந்திருக்கிறது. 'இசை நிறையும் இடைச்சொல், (பரிமேலழகர்). ●

அவனுடைய திருவடிக்கு எதனை உவமையாகச் சொல் வது? அதற்கு உவமை சொல்லி முடியாது. இறைவனுக் காவது உவமை சொல்லலாம்; அவன் திருவடிக்குச் சொல் வது அரிது. 'அவனுடைய அங்கந்தானே அது?' என்று கேட்கலாம். அவன் திருவுருவத்தில் திருவடி ஓர் அங்கக்

தான். அவனுக்கு அது அங்கம். நமக்கோ அவனுடைய உருவம் முழுவதும் தெரியாது; தெரியவேண்டிய அவசியமும் இல்லை. நமக்குப் பற்றுக்கோடாக இருப்பது அவனுடைய திருவடிதான். தென்னமரத்தில் நமக்குச் சிறந்ததாகப் படுவது தேங்காய்தான். அதுபோல் இறைவன் திருமேனியில் அழகும் வலிமையும் உடைய பல அங்கங்கள் இருந்தாலும் நம்மை ஆள்வதற்குப் பூமியின்மேல் நடந்து வர உதவுவது அவன் திருவடியே. நமக்குப் பற்றுக்கோடாக இருப்பதும் அதுவே. அதனால்தான் திருவள்ளுவர் கடவுள் வாழ்த்து என்ற அதிகாரத்தில் "வாலறிவன் நற்றாள்", "மலர்மிசை ஏகினான் மாணடி", "வேண்டுதல் வேண்டாமை யிலானடி", "தனக்குவமை யில்லாதான் தாள்", "அறவாழி யந்தணன் தாள்", "எண்குணத்தான் தாள்", "இறைவன் அடி" என்று முழுமுதற் கடவுளின் திருவடிகளையே எடுத்துச் சொன்னார். நம்மாழ்வாரும் திருவாய்மொழியின் முதற் செய்யுளில், "துயரறு சுடரடி தொழுதெழல் மனனே" என்று கூறினார்.

ஆதலின், "நின்னைக் காட்டிலும் எமக்குச் சிறந்த திருவடியை உடையாய் நீ" என்று பாராட்டுகிறார் புலவர்.

**நின்னிற் சிறந்த நின் திருவடியவை.**

● நின்னைக் காட்டிலும் எங்களுக்குச் சிறந்த நின் திருவடிகளை உடையாய்.

நின்னின் - நின்னைவிட. சிறந்த அடி, நின் அடி என்று கூட்டுக. திருவடியை என்பது திருவடியவை என விகாரமாக நின்றது. ஓசை கூட்டிச் சொல்லும்பொருட்டு அகரத்தைச் சேர்த்துப் பாடினார். 'வீடளிக்குங்கால் நின்னினும் சிறந்த நின் தாளிணையை உடையை.' (**பரிமேலழகர்**) ●

முதலில், இறைவனுக்கு இன்னதுதான் வடிவம் என்ற வரையறை இல்லை என்றார். அப்பால் அவனுடைய திருவுருவத்தைப்பற்றி எண்ணினார். இனி அவனுடைய குணங்களைச் சொல்லுகிறார். தனித் தனியே எடுத்துச் சொல்லிக் கடைசியில் முற்றச் சொல்ல முடியாமையின், "எல்லாம் நீயே" என்று முடிக்கும்படி ஆகிவிடுகிறதல்லவா? ஆதலின் குணங்களைச் சொல்லும்போதும் அப்படித் தொடங்கி முடிக்க வேண்டாம் என்று புலவர் நினைத்தார்போலும்! 'கடவுள் என்று சொல்வதற்குரிய தன்மைகள் யாவும் உன்னிடம் நிரம்பியுள்ளன' என்று ஓரே வாக்கியத்தில் சொல்லிவிடுகிறார்.

**நின்னிற் சிறந்த நிறை கடவுளவை**

● நின்னிடத்தில் சிறப்பாக அமைந்த நிறைந்த கடவுள் தன்மையை உடையாய்.

நின்னில் - நின்னிடம். கடவுளவை - கடவுளை; கடவுள் தன்மையை உடையாய். அகரம் இசை நிறைவுக்காக வந்தது. இதற்கு, 'நின்னைக்காட்டிலும் சிறந்த நிறைந்த கடவுள் தன்மையாகிய அருளை உடையாய்' என்றும் பொருள் கொள்ளலாம். இறைவனுடைய தன்மை பல எனினும் உயிர்களுக்கு மிகப் பயன்படுவது அவன் அருளே ஆதலாலும், அவனுடைய குணங்கள், செயல்கள் என்று தனித்தனியே சொன்னாலும் அவை அனைத்துக்கும் அவன் அருளே மூலமாதலாலும் அதுவே சிறந்ததாயிற்று. கொன்றருளினான், எழுந்தருளினான், சினந்தருளினான் என்று அவனுடைய செயல்கள் அனைத்தையும் அருட்செயலின் வகைகளாகச் சொல்லும் வழக்கு இதைத் தெளிவாக்கும். ●

இவ்வாறு சொன்ன புலவருக்கு மீட்டும் யோசனை உண்டாயிற்று. இறைவனுடைய தன்மைகள் அளவிடற்

காரியன. "உயர்வற உயர் நலம் உடையவன்" அவன். எல்லாக் குணங்களும் அவனுடைய அருளிலும் மாயையிலும் தோற்றியவை. ஆதலின் தெய்வத்தன்மைகளை மாத்திரம் சொன்னால் போதுமா? ஆகவே அதோடு நிறுத்தாமல், 'அத்தகைய தெய்வத் தன்மைகளை அன்றி வேறு தன்மைகளும் நின்பால் உள. அவற்றை எம் போலியரால் எவ்வாறு அறிய முடியும்? வேதங்களை நன்கு ஆராய்ந்த முனிவர்கள் தம் அறிவினாலும் அநுபவத்தினாலும் உணர்ந்து அவ்வப்போது வெளியிடுகிறார்கள். அவற்றையெல்லாம் முடிவுபோக அறிந்து கூறுவது இயலுமா? உன்னை வணங்குவதோடு உன் அருள் பெற்ற முனிவர்களையும் வணங்குகிறோம். அவர்கள் உன்னைப் போன்றவர்கள். நின்னை ஒத்த அந்தணர்கள் அறிந்த அரிய உபநிடதப் பொருள் தெரிந்தால் நின் குணங்களை உணரலாம். அவர்கள் அறிந்தவை அவை; எம்மால் அறிதற்கு இயலாதவை' என்று சொல்கிறார்.

**அன்னோர் அல்லா வேறும் உள; அவை**
**நின்னோர் அன்னோர் அந்தணர் அருமறை.**

● அத்தன்மையல்லாத வேறு தன்மைகளும் நினக்கு உள்ளன. அவை நின்னையொத்த முனிவர்கள் உணர்வதற்குரிய அரிய உபநிடதத்தின் இரகசியப் பொருள்கள்.

அன்ன ஓர் அல்லா எனப் பிரிக்கவேண்டும்; ஓர்: அசை. அன்ன என்பதன் இறுதி அகரம் மறைய, அன் என நின்று ஓர் என்பதுடன் சேர்ந்து அன்னோர் என ஆயிற்று. நின் ஓர் அன்னோர் என்று பிரிக்கவேண்டும்; இங்கும் ஓர் என்பது அசை நிலை; அதற்கு ஒரு பொருளும் இல்லை. மறை - இரகசியம். மறைந்த பொருள் உடைமையால் வேதத்துக்கும் அதன் முடியாகிய உபநிடதங்களுக்கும் மறையென்ற பெயர் அமைந்தது. ●

இறைவன் திருமேனி உடையவனல்ல வாயினும் அருளுடையாருக்குக் காட்டும் திருமேனியைப் பற்றி முதலில் கூறி, அப்பால் அவன் இயல்புகளைக் கூறினார். பிறகு அவன் இருக்கும் இடங்களைக் கூற வருகிறார். இறைவன் எங்கும் இருக்கிறான். என்றாலும் அவனை நினைந்து வழிபடு வதற்கு என்று சில இடங்களை அருள் பெற்ற சான்றோர்கள் வரையறையாக வைத்திருக்கின்றனர். திருக்கோயில்களை அமைத்து அங்கே இறைவனுக்குரிய திருவுருவங்களை நிறுவி வழிபடும்படி செய்திருக்கிறார்கள் அவ்வாறு திருவுருவங்களைக் கோயிலின்றியே மரத்தின் அடியிலும் வேறு இடங்களிலும் வைத்து வழிபடுவதும் உண்டு. முதலில் அழகிய மரங்களில் இறைவன் இருப்பதாக எண்ணி, அவற்றை இறைவன் உருவாக வழிபட்டார்கள். அப்பால் அவ்விடங்களில் அவனுடைய உருவை அமைத்து வழிபட்டார்கள். பிறகு கோயில் கட்டி அங்கே அவன் திருவுருவத்தை நிறுவி வழிபட்டார்கள்.

ஆலமரம் மரங்களிலே பெரியது. அது விழுது விட்டுப் பரந்து நிற்பது; பலகாலம் இருப்பது; தன்னுடைய நிழலில் பல மக்களுக்கு இடம் கொடுப்பது. அதனிடம் பலருக்கு நிழல் தரும் தன்மை இருப்பதை எண்ணி, இறைவன் பலருக்கும் அருள் தரும் இயல்பை அதனுடன் ஒருங்கு வைத்துப் போற்றினார்கள். அதனிடம் தெய்வத் தன்மை இருப்பதாக நினைந்து வழிபட்டார்கள். ஆலமரம் தெய்வம் உறையும் மரம் என்ற நம்பிக்கை பழங்காலத்தில் இருந்த தைப் பழம் பாடல்கள் தெரிவிக்கின்றன. பிறகு, அங்கே கடவுளுருவங்களும் கோயில்களும் எழுந்தன. திருவாலந் துறை, திருவாலங்காடு, திருப்பழுவூர் முதலிய இடங்களில் சிவபெருமான் ஆலடியில் உறைகின்றார். "ஆலமர் கடவுள்" என்று பழநூல்கள் கூறும். "கடவுள் ஆலத்துத் தடவுச்சினைப் பல்பழம்" என்பது புறநானூறு (199 : 1.)

இப்படியே கடம்பிலும் இறைவன் இருப்பதாகக் கொண்டார்கள். கடம்பில் முருகன் உறைகின்றான் என்ற செய்தியைத் **திருமுருகாற்றுப்படை** சொல்கிறது; "புதுப்பூங் கடம்பும்" (225); "கடம்பமர் காளை" என்று **தேவாரம்** சொல்கிறது.

ஆற்றின் நடுவிலே இருக்கும் திட்டுக்குத் துருத்தி என்று பெயர். ரங்கம் என்று வடமொழியில் வழங்கும். அதுவும் தெய்வத்தை வழிபடுவதற்குரிய இடம் என்று சான்றோர் கொண்டனர். திருவரங்கம் காவிரி நடுவில் அமைந்த தலம் அல்லவா? திருத்துருத்தி (குற்றாலம்) என்பது ஒரு தலம். அது ஒரு காலத்தில் ஆற்றினிடையே திட்டாக இருந்ததுதான்.

இறைவனை வணங்கும் இடங்களில் மற்றொன்று மலை. இன்று தமிழ் நாட்டில் பெரும்பாலான மலைகளில் திருக்கோயில்களைக் காணலாம். கோயில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் முருகன் மலைகளில் எழுந்தருளியிருக்கிறான் என்ற கருத்துடையவர்கள் தமிழர்கள். குன்று தோறாடும் குமரன் என்று பாராட்டுவார்கள்.

ஆற்றின் துறைகளிலும், பொய்கைக் கரையிலும், மரத்தின் அடியிலே மக்கள் கூடும் அம்பலத்திலும், பிற இடங்களிலும் தெய்வத்தை வழிபடுவது மரபு. இவ்வாறு பல இடங்களில் பல பல உருவமும் நாமமும் உடையனவாக வைத்து வணங்கும் தெய்வங்கள் எல்லாம் ஒரே கடவுளின் வேறு வேறு நிலைகளே. இதைப் புலவர் சொல்கிறார்.

ஆலமரத்தின் தளிர் சிவப்பாக இருக்கும்; அழல் போலத் தோற்றும். அதன் நிழல் **கொழு நிழல்**.. அது மற்ற மரங்களை விட அதிகமான கிளைகளை உடையது. '**பல சினைகளைப்** பெற்ற ஆலமரத்திலும், கடம்பிலும், ஆற்றின் நடுவிலும்,

மலையிலும், வேறு இடங்களிலும் வேறு வேறு பெயரோடு எழுந்தருளுபவன் நீதான்' என்று பாடுகிறார் புலவர்.

**அழல்புரை குழைகொழு நிழல் தரும் பல சினை**
**ஆலமும் கடம்பும் நல் யாற்று நடுவும்**
**கால் வழக்கு அறுநிலைக் குன்றமும் பிறவும்**
**அவ்வவை மேய வேறு வேறு பெயரோய் !**

● நெருப்பை ஒத்த தளிரையும் கொழுவிய நிழலையும் தரும் பல கிளைகளையுடைய ஆலமரமும், கடம்பமரமும், நல்ல ஆற்றின் நடுவிடமும், காற்று வழங்குவது அறும்படி தடுத்து நிற்றலையுடைய மலைகளும், பிற இடங்களும் ஆகிய அவ்வவ் விடங்களில் மேவிய வேறு வேறு பெயர்களை உடையவனே !

அழல்புரை - நெருப்பையொத்த. குழை - தளிர். குழை தரும், நிழல் தரும் என்று கூட்டுக. சினை - கிளை. கால் வழக்கு அறும் நிலை - காற்று வழங்குதல் அற்ற நிலையை யுடைய; 'காற்று வழங்காத திணிந்த நிலையையுடைய குன்ற மென்க' (பரிமேலழகர் உரை.) ●

இப்படிச் சில இடங்களை வகுத்துக்கொண்டு அங்கே இறைவன் இருக்கிறான் என்று வழிபடுவதனால், மற்ற இடங்களில் அவன் இல்லை என்று கொள்வதா? அது தவறு. இறைவன் எங்கும் நிறைந்தவன். விஷ்ணு என்ற திரு நாமமே அவன் யாண்டும் நிறைந்திருப்பவன் என்பதை உணர்த்துவது. இறை என்ற சொல்லும் அதே பொருளைத் தருவது. ஆதலின் அவன் இல்லாத இடமே இல்லை.

முன்பு, அவன் குணங்கள் இன்ன இன்ன பொருள் களில் உள்ளன என்று சொல்லத் தொடங்கினவர், எல்லாப் பொருள்களிலும் நின் குணங்களே உள்ளன என்று கூறி முடித்தார். அப்படியே இன்ன இன்ன இடங்களில் எழுந் தருளியிருக்கும் தெய்வங்களாக இருப்பவன் நீயே என்று

தொடங்கியவர், இடங்களைக் கணக்குப் பண்ணிச் சொல்ல முடியாது என்று உணர்ந்து "பிறவும்" என்று சொன்னார். 'ஆலமும் கடம்பும் ஆற்று நடுவும் குன்றமும்' என்று சொன்னவர், 'இன்னும் பல பல உண்டு; அவற்றை யெல்லாம் ஒவ்வொன்றாக எடுத்துச் சொல்லுதல் இயலாத காரியம்' என்று எண்ணினார்; 'இவைகளும் பிறவும்' என்று சொல்லி முடித்தார். அப்படியும் அவருக்குத் திருப்தி பிறக்கவில்லை 'எல்லா இடங்களிலும் நீயே எழுந்தருளியிருக்கிறாய்' என்று கூறி ஆறுதல் பெறுகிறார்.

**எவ்வயினோயும் நீயே.**

●எவ்விடத்தில் இருப்பவனும் நீதான்.

எவ்வயினோய்: முன்னிலை. தெய்வம் இருப்பதாகச் சொல்லும் இடங்களையெல்லாம் முன்பு சொன்னார். இப்போது எல்லா இடங்களிலும் அவன் இருப்பதைச் சொல்கிறார். ●

## அடியார்க் கெளியன்

இறைவன் எங்கும் இருக்கிறான்; பல உருவங்களும் பல குணங்களும் உடையவனாக இருக்கிறான்; பல பெயர்களோடு இருக்கிறான். ஆனாலும் அவன் எல்லோராலும் அறியப்படுவது இல்லை. எங்கும் இருந்தாலும், ஒவ்வொரு மனிதனுடைய இருதயத்திலும் இருந்தாலும் அவனை உணர்ந்து அன்பு செய்து அதனால் வரும் இன்பத்தை நுகர்பவர்கள் மிகச் சிலரே. அந்த அன்பர்களிடத்தில் இறைவன் விளையாடுகிறான். அவர்களிடம் கட்டுப்பட்டிருக்கிறான். வேறு பொருள்களால் அவனைக் கட்ட முடியாது. யசோதை கயிற்றினால் கட்டப் பார்த்தாள்; முடியவில்லை. ஆனால் அன்பர்களுடைய அன்பினால் தளைப்படுபவன் அவன். சகாதேவன் அப் பெருமானைக் கட்டிவிட்டான்.

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலை அவன். பக்தி வலையிற் படுபவன் அவன். தன்னைத் தொழுபவர்கள் கையாலே கட்டிப் பிடிக்குமளவுக்கு அவர்களுக்கு எளியவனாக இருக்கிறான். அவர்கள் அவனைத் தலைவனாக எண்ணி அன்பு செய்து கை குவித்துக் தொழுகிறார்கள். அவனோ அவர்களுடைய தொழுத கையின் குவிப்புக்குள்ளே அடங்கி நிற்கிறான். அதுமாத்திரமா? அந்த அன்பர்களுக்கு வேண்டியவற்றைச் செய்து உதவும் ஏவலாளனாகவும் இருக்கிறான். ஏவாமலே தலைவன் நினைத்ததை முடிப்பவன் சிறந்த ஏவலாளன். அப்படியே இறைவனும் தன் அடியார்கள் நினைப்பவற்றை முடித்துத் தருகிறான். அதனால் அவர்களுக்கு அவனைக் காட்டிலும் சிறந்த ஏவலாளன் யாரும் இருக்க முடியாது. அவர்களிடத்திலே அடங்கி, அவர்கள் வழிப்படியே ஒழுகி ஏவல் செய்பவனைப் போல இருந்தாலும், அவர்களுக்குத் தீங்கு வராமல் பாதுகாக்கும் பெரிய காவலாளனாகவும் இருக்கிறான்; அவர்கள் செய்யும் தொண்டுகளுக்கு அரணமாக இருந்து அவற்றை நிறைவேற்றுகிறான்.

இந்த இயல்புகளையெல்லாம் புலவர் சொல்லிப் பாடலை முடிக்கிறார்.

**நின் ஆர்வலர்**
**தொழுத கை அமைதியின் அமர்ந்தோயும் நீயே;**
**அவ்வர் அவர் ஏவலாளனும் நீயே;**
**அவர் அவர் செய்பொருட்கு அரணமும் நீயே.**

● *நின்னுடைய அன்பர்கள் நின்னைத் தொழுத கையின் குவிவுக்குள்ளே அடங்கி அமர்ந்தவனும் நீயே; அந்த அந்த அன்பர்களுக்கு ஏற்ற ஏவலாளனும் நீயே; அவர் அவர் செய்யும் பொருளுக்குக் காவலாக இருப்பவனும் நீயே*

**ஆர்வலர்** - அன்பர். **அமைதி** - அமைந்த நிலை. 'நினைத்தன முடித்தலான், அவரவர் ஏவல் செய்வானும் நீ...செய்

பொருள் - அறர் பொருள் இன்பம் வீடென்பன" (பரிமேலழகர்.) அரணம் - காவல்.

முதலில், திருமாலினுடைய புகழ் சொல்வதற்கரிய தென்று கூறி, பின் அவன் திருமேனியையும் உடை நேமி ஆகியவற்றையும் நினைத்து, பிறகு நரசிங்க அவதாரத்தையும் கேழலாக வந்த கோலத்தையும் புகழ்ந்து, அவனுடைய தன்மைகளை உலகத்துப் பொருள்களெல்லாம் கொண்டிருத்தலைச் சொல்லி, அவன் கொடியின் சிறப்பைப் புகழ்ந்து, வேண்டுதல் வேண்டாமையிலான் அவன் என்பதைத் தெளிவுறுத்தி, மீண்டும் அவன் உருவ எழிலையும் திருவடிச் சிறப்பையும் குண நலங்களையும் எடுத்துரைத்து, அவன் இருக்கும் இடங்களை இயம்பி, எங்கும் இருப்பவன் என்பதையும் தெளிவுறுத்திய புலவர், ஆர்வலருக்கு அணிமையில் உள்ளவனாக இருப்பதைச் சொல்லிப் பாட்டை முடித்தார். 'ஆர்வலர் நின் புகழ் விரித்தனர்' என்று தொடங்கி, 'ஆர்வலர்க்கு அரணம் நீயே' என்று முடித்தார்.

பாட்டு இறைவனுடைய நலங்களைச் சொல்வதாக இருக்கிறதே ஒழிய, இன்னது வேண்டும் என்று வேண்டிக் கொள்ளும் வகையில் அமையவில்லை. ஆயினும், 'இத்தகைய பெருமானிடம் நாமும் அன்பு செய்தால் அவன் அருளைப் பெறலாம்' என்ற கருத்து நமக்குத் தோன்றும்படி அவன் தன் அன்பர்களுக்கு எளியனாகும் தன்மையை இறுதியிலே சொல்லி முடித்திருக்கிறார். இறைவன் இயல்பு எத்துணைச் சிறப்புடையதாக இருந்தாலும் நமக்கு ஒரு பயனும் இல்லை. நமக்கு அருள் செய்யும் தன்மை அவன்பால் இருப்பதுதான் அவனுக்குப் பெருமை. அதனையே இறுதி அடிகள் நினைப்பூட்டுகின்றன.

★

## திருமால்

ஐந்துஇருள் அறநீக்கி நான்கினுள் துடைத்துத்தம்
ஒன்றுஆற்றுப் படுத்தநின் ஆர்வலர் தொழுதுஏத்தி
நின்புகழ் விரித்தனர்; கிளக்குங்கால் அவைநினக்கு
இறும்பூது அன்மைநற்கு அறிந்தேம்; ஆயினும்
நகுதலும் தகுதிஈங்கு ஊங்குநிற் கிளப்பத்;
திருமணி திரைபாடு அவிந்த முந்நீர்
வருமழை இருஞ்சூல் மூன்றும் புரையும் மாமெய்;
மாஅ மெய்யொடு முரணிய உடுக்கையை;
நோனார் உயிரொடு முரணிய நேமியை;
செயிர்தீர் செங்கட் செல்வ! நிற் புகழப்
புகைந்த நெஞ்சிற் புலர்ந்த சாந்திற்
பிருங்க லாதன் பலபல பிணிபட
வலந்துழி - மலர்ந்த நோய்கூர் கூம்பிய நடுக்கத்து
அலர்ந்த புகழோன் தாதை ஆகலின்
இகழ்வோன்-இகழா நெஞ்சினன் ஆக,நீ இகழா
நன்று நட்டஅவன் நன்மார்பு முயங்கி
ஒன்று நட்டவன் உறுவரை மார்பிற்
படிமதம் சாம்ப ஒதுங்கி
இன்னல் இன்னரொடு இடிமுரசு இயம்ப
வெடிபடா ஒடிதூண் தடியொடு
தடிதடி பலபட வகிர்வாய்ந்தஉகிரினை;
புருவத்துக் கருவல் கந்தத்தால்
தாங்கிஇவ் வுலகம் தந்துஅடிப் படுத்ததை நடுவண்
ஓங்கிய பலர்புகழ் குன்றினோடு ஒக்கும்;
நின் - வெம்மையும் விளக்கமும் ஞாயிற்றுஉள;
நின் - தண்மையும் சாயலும் திங்கள்உள;
நின் - சுரத்தலும் வண்மையும் மாரிஉள;
நின் - புரத்தலும் நோன்மையும் ஞாலத்துஉள;
நின் - நாற்றமும் ஒண்மையும் பூவைஉள:
நின் - தோற்றமும் அகலமும் நீரின்உள;

நின் - உருவமும் ஒலியும் ஆகாயத்து உள;
நின் - வருதலும் ஒடுக்கமும் மருத்தின் உள;
அதனால், இவ்வும் உவ்வும் அவ்வும் பிறவும்
ஏமம் ஆர்ந்தநிற் பிரிந்து
மேவல் சான்றன எல்லாம்;
சேவல் ஓங்கு உயர்கொடி யோயே!
சேவல் ஓங்கு உயர்கொடி
நின்ஒன்று உயர்கொடி பனை;
நின்ஒன்று உயர்கொடி நாஞ்சில்;
நின்ஒன்று உயர்கொடி யானை;
நின் - ஒன்று உயர்கொடி ஒன்றுஇன்று;
விடமுடை அரவின் உடல் உயிர்உருங்கு உவணம்;
அவன் - மடிமேல் வலந்தது பாம்பு;
பாம்புதொடி; பாம்பு முடிமேலன;
பாம்புபூண்; பாம்பு தலைமேலது;
பாம்புசிறை, தலையன;
பாம்பு - படிமதம் சாய்த்தோய்! பசும்பூண் அவை;
கொடிமேல் இருந்தவன் தாக்குஇரை யதுபாம்பு;
கடுநவை அணங்கும் கடுப்பும் நல்கலும்
கொடுமையும் செம்மையும் வெம்மையும் தண்மையும்
உள்வழி உடையை; இல்வழி இலையே;
போற்றார் உயிரினும் போற்றுநர் உயிரினும்
மாற்றுஏம் ஆற்றல் இலையே; நினக்கு
மாற்றோரும்இலர் கேளிரும் இலரெனும்
வேற்றுமை இன்றுஅது போற்றுநர்ப் பெறினே;
மனக்கோள் நினக்குஎன வடிவுவேறு இலையே;
கோள்இருள் இருக்கை ஆய்மணி மேனி,
நக்குஅலர் துழாஅய் நாறுஇணர்க் கண்ணியை;
பொன்னிற் றோன்றிய புனைமறு மார்ப!
நின்னிற் றோன்றிய நிரைஇதழ்த் தாமரை
அன்ன நாட்டத்து அளப்பரியவை;
நின்னிற் சிறந்த நின்தாள் இணையவை;

நின்னிற் சிறந்த நிறைகட வுளவை;
அன்னோ ரல்லா வேறும் உள;அவை
நின்னோ ரன்னோர் அந்தணர் அருமறை;
அழல்புரை குழைகொழு நிழல்தரும் பலசினை
ஆலமும் கடம்பும் நல்யாற்று நடுவும்
கால்வழக்கு அறுநிலைக் குன்றமும் பிறவும்
அவ்வவை மேய வேறுவேறு பெயரோய்!
எவ்வயி னோயும் நீயே;நின் ஆர்வலர்
தொழுதகை அமைதியின் அமர்ந்தோயும் நீயே;
அவர்அவர் ஏவ லாளனும் நீயே;
அவர்அவர் செய்பொருட்கு அரணமும் நீயே.

கடவுள் வாழ்த்து.
கடுவன் இளஎயினனார் பாட்டு.
பெட்டனாகனார் இசை
பண்ணுப் பாலையாழ்.

*இந்தப் பாட்டு, கடவுள் வாழ்த்து என்னும் துறையில் அமைந்தது. இதைப் பாடியவர் கடுவன் இள எயினனார் என்னும் புலவர். இதற்கு இசை வகுத்தவர் பெட்டனாகனார் என்னும் புலவர். இதற்கு உரிய பண் பாலை. இவை மேலேயுள்ள குறிப்புகளிலிருந்து தெளிவாகின்றன.*

*இது பரிபாடலில் நான்காவது பாடலாக அமைந்திருப்பது.*

# தமிழ் வையை

## மழை

நீரால் நிறைந்திருக்கும் கடலில் மேகங்கள் சென்று முகந்தன. இதற்கு முன் பல முறை நீரை முகந்தும் அது இன்றும் நிறைகடலாகவே இருக்கிறது. அதன்கண் நீரை முகந்துகொண்ட மேகங்கள் வானப் பரப்பினிடையே எங்கும் பரவின; வான முழுவதையும் போர்த்து நின்றாற் போல எங்கும் நிறைந்தன; மெல்லச் சென்றன; நீராகிய பாரத்தைத் தாங்காதவை போல நின்றன அந்தப் பாரம் குறைய வேண்டுமானால் தாம் முகந்த நீரைப் பொழிந்து விட வேண்டும். ஆகவே நீர் துளும்பிக் கொண்டிருக்கும் அந்த மேகங்கள் பாரம் நீங்கி இளைப்பாற வேண்டி நீரைப் பொழிந்தன.

**நிறை கடல் முகந்து உராய் நிறைந்து நீர் துளும்பும் தம்**
**பொறை தவிர்பு அசைவிடப் பொழிந்தன்று வானம்.**

● நீரால் நிறைந்த கடலில் நீரை முகந்து வானத்தில் பரவி நிறைந்து, அப்பால் நீர் துளும்புகின்ற தம்முடைய பாரம் நீங்கி இளைப்பாறும் பொருட்டு, பொழிந்தன மேகங்கள்.

உராய் - உலவி; பரவி. பொறை - பாரம். தவிர்பு - நீங்கி. அசைவிட - இளைப்பாற. பொழிந்தன்று - பொழிந்தது.

வானம் - மேகம். பொழிந்தன்று என்று ஒருமையாகச் சொன்னது, மேகங்கள் எல்லாவற்றையும் சேர்த்து ஒன்றாக எண்ணி; இதைச் சாதி ஒருமை என்பார்கள். ●

## வெள்ளம்

மழை நன்றாகப் பொழிந்ததனால் எங்கும் ஒரே நீர் மயம். தரையே தெரியாமல் மழைநீர் மிகுதியாக எல்லா இடங்களிலும் நிரம்பி நின்றது. எங்கே பார்த்தாலும் மழை நீர் வெள்ளம். மலையின் மேலே மழை மிக வேகமாகப் பொழிகிறது. அதனால் மலையில் உள்ள மான் முதலிய விலங்கினங்கள் கலங்குகின்றன. மயிலினங்கள் மேகத்தையும் மழையையும் கண்டு அகவுகின்றன. மழை பெய்ததனால் மலையில் உள்ள அருவியில நீர்ப்பெருக்கு அதிகமாகின்றது. அது மலையை நீராட்டுவது போல வேகமாக இறங்குகிறது. அதன் மாசைக் கழுவுவது போல அருவி பல கால்களாகப் பிரிந்து மலைச் சாரலில் ஓடுகிறது.

மலைச் சாரலில் ஓடி வந்த நீர் எல்லாம் கீழே இறங்கி ஆறாக ஓடுகிறது. புலவர்கள் மழையைப் பற்றிப் பாடிய பாடல்கள் பல. அதனை வாழ்த்திய கவிதை பல. மழையில்லா விட்டால் மாநிலத்தாருக்கு வாழ்வு இல்லை என்று பாடியிருக்கிறார்கள். மழை கைம்மாறு கருதாமல் பெய்வதையும் அதனால் பயிர் விளைவதையும் அறிவு விளக்கத்தைப் புலப்படுத்தும் தம்முடைய நாவினால் பாடியிருக்கிறார்கள். மாசு இல்லாத புலவர்கள், நல்ல செய்யுட்களை இயற்றும் நாவலர்கள், தம்முடைய கவிதையினால் எப்படியெல்லாம் பாடினார்களோ அப்படியே இப்போதும் மழை பொழிய, அருவி நீர் மலிந்து, கீழே இறங்கி ஆறாக ஓடுகிறது.

அவர்கள் நாவினால் புனைந்த நல்ல கவிதை பொய்யாகாதபடி. நீர் எங்கும் மேவிப் பரந்து விரைந்தது. அதனால் அங்கங்கே உழுவார் உழவும், விதைப்பார் விதைக்கவும், களையெடுப்பார் களையெடுக்கவுமாகப் பயிர் செய்யும் தொழில் மேன்மேலும் பெருகியது.

இப்படி, வானம் பொழிந்த தண்ணம் புனல் எங்கும் ஓடி நன்மையை உண்டாக்கியது.

**நிலம் மறைவதுபோல் மலி புனல் தலைத்தலைஇ**
**மலைய இனம் கலங்க மலைய மயில் அகவ**
**மலை மாசு கழியக் கதழும் அருவி இழியும்**
**மலிநீர் அதர் பல கெழுவு தாழ்வரை**
**மாசில் பனுவற் புலவர் புகழ் புல**
**நாவிற் புனைந்த நன்கவிதை மாறாமை**
**மேவிப் பரந்து விரைந்து வினை நந்தத்**
**தாயிற்றே தண்ணம் புனல்.**

● தரையானது மறைந்துவிடுவது போல வெள்ளம் அவ்வவ் விடங்களில் நிறைந்து, மலையிலே உள்ள விலங்கினங்கள் கலங்கவும், மலையிலுள்ள மயில்கள் மகிழ்ச்சியால் ஆரவாரிக்கவும், மலையில் கோடைக் காலத்தில் படிந்திருந்த மாசு கழியவும் வேகமாக அருவி இறங்குகின்ற, மிக்க நீர்செல்லும் வழிகள் பல பொருந்திய மலையின் அடியில், குற்றமற்ற செய்யுட்களைப் பாடும் புலவர்களுடைய, புகழ் பெற்ற அறிவு விளக்கமுள்ள நாவினால் அழகு பெறப் பாடப் பெற்ற நல்ல கவிதையின் பொருள் பொய்யாகாமல் சென்று பரவி விரைந்து, எங்கும் வேளாண்மையாகிய தொழில் பெருகும்படியாகக் குளிர்ந்த அழகிய புனல் ஓடியது.

'ஊழிக்கண் நிலம் மறையும் வெள்ளம்போலே வெள்ளம் மேலே பரக்க' என்பர் **பரிமேலழகர்.** மலி புனல்—

வெள்ளம். தலை தலைஇ- இடந்தோறும் நிரம்பி; தலை-இடம். மலைய-மலையில் உள்ள. இனம்-மான் முதலிய விலங்குக் கூட்டம். மேகத்தைக் கண்டு மகிழ்தல் மயிலுக்கு இயல்பு. அகவ-மகிழ்ச்சியால் குரல் எழுப்ப; ஆட என்றும் கொள்ளலாம். கதழும்-வேகமாகச் செல்லும். இழியும்-இறங்கும். மலி நீர் அதர்-மிக்க நீர் செல்லும் வழி. கெழுவு-அமைந்த. தாழ்வரை-மலையடிவாரம். மாசு இல்லாத பனுவல் என்றும் மாசு இல்லாத புலவர் என்றும் இரண்டு வகையாகவும் பொருள் கொள்ளலாம். பனுவல்-நூல். புலம்-அறிவு. மாறுமை-மாறுமல்; பொய்யாகாமல். வினை-தொழில். பிற தொழில்களும் நீரின்றிச் சிறப்படையாமையால் மனிதர்கள் இயற்றும் எவ்வகைத் தொழிலும் சிறப்படையும்படி என்றும் கொள்ளலாம். தாயிற்று-தாவியது; ஓடியது. தண் அம்புனல். குளிர்ந்த அழகிய நீர்.

'கவிதை-கவியது தன்மை அஃது ஈண்டுச் செய்யுள் மேல் நின்றது.' பரிமேலழகர்.) ●

## வையை

மழை பெய்ய அதனால் மலையில் அருவி பெருகியது. அது வேகமாக இறங்கிக் கரையில் ஆறாக ஓடலாயிற்று. மழை வெள்ளம் இவ்வாறு வந்தமையால் வையை யாற்றில் புது வெள்ளம் வந்தது. அதனால் வையையின் வருகையே இதுகாறும் இல்லாத சிறப்பை அடைந்தது;

வையையில் புது வெள்ளம் வந்தால் அதை வரவேற்றுப் பூசித்து நீராடப் புகுவார்கள் மக்கள். பூசைக்கு வேண்டிய பண்டங்களைக் கையிலே ஏந்திக்கொண்டு வெள்ளத்தோடு வரும் வையையை நோக்கிப் போவார்கள். வையையைப் பூவால் அருச்சித்துத் தூபதீபம் காட்டி நிவேதனம் செய்து பொன் மீன் முதலியவற்றை அதனுள் இடுவது வழக்கம். அதனைத் தூபத்துக்குரிய திரவியங்களை

யும், தீபத்தையும், தூபத்துக்கு வேண்டிய நெருப்பையும் ஏந்திச் செல்வார்கள். அதுமட்டுமா? வையையாற்றில் புனல் விளையாட்டுப் புரியப் பலர் செல்வார்கள். தமக்கு இன்பத்தை உண்டாக்கும் காதலர்களோடு புனலில் விளையாடுவது மிக்க இன்பத்தைத் தரும். அதற்காகக் காலையிலே எழுந்து தம்மை அலங்கரித்துக்கொண்டு மகளிர் புறப்படுவார்கள். அவர்கள் தம் கையிலே மேலே சொன்ன பொருள்களை ஏந்திக்கொண்டு செல்வார்கள்.

உண்ணும் நீரையும் உணவை உண்டாக்கும் நீரையும் தந்து, மாசு தீர ஆடும் நறும் புனலையும் வழங்குவதனால் வையையாறு பூசை செய்வதற்குரியது. அந்த நீரால் அறம் மலியும்; பொருள் மலியும்; வீட்டு நெறிக்குரிய தூய்மை மலியும். அவற்றோடு காதலரும் காதலியரும் ஒன்றுபட்டு நீர் விளையாட்டு நடத்தும் இன்பச் செயல்களுக்கும் வையையின் புது வெள்ளம் துணையாக இருக்கின்றது.

இவ்வாறு காதலுடையவர்களைக் காலையிலே அலங்காரம் செய்து கொள்ளும்படியாகச் செய்யும் வகையிலே வையை புது வெள்ளத்துடன் வந்தது.

மழை பெய்து வையையில் வெள்ளம் வருகிறது. அதன்கண் விளையாடும் பொருட்டு மகளிரும் மைந்தரும் கோலம் புனைந்துகொள்ளப் போகிறார்கள். அவர்கள் நீர் விளையாட்டு நிகழ்த்தும் பொழுது தங்கள் தங்கள் காதலரோடு சேர்ந்து ஆடுவதனால் அவர்களுக்கு அளவற்ற மகிழ்ச்சி உண்டாகும். உடம்பு பூரித்துப் போகும். தோளிலே அணிந்திருந்த தோள் வளைகளாகிய வாகுவலயங்கள் அந்தப் பூரிப்பினாலே இறுகிப் போகும். அவை இறுகும்போது அவற்றை முன்

கைக்குத் தள்ளினால் அங்கே அவை கலகலக்கும். மகளிர் மார்பிலும் தோளிலும் சந்தனக் குழம்பால் கொடியின் உருவத்தை எழுதியிருப்பார்கள். அதற்குத் தொய்யில் என்று பெயர். அது உருவழிந்து போகும். அவர்கள் இடையிலே அணிந்திருக்கும் மேகலைகள் மணி உதிர்ந்து வெறும் வடங்களாக நிற்கும். நல்ல சுடரை வீசும் முத்து மாலைகள், அழிந்த சந்தனத்தோடும் மற்றப் பொருள்களோடும் கலந்து தம்முடைய ஒளி மங்கித் தோன்றும்.

மகளிர் தம்முடைய விரல் நகங்களில் சாயம் பூசியிருப்பார்கள்; கன்னத்தில் செம்பஞ்சுக் குழம்பால் பொட்டு இட்டிருப்பார்கள்; சிலர் இலேசாகப் பூசியும் இருப்பார்கள். அந்தச் சாயமும் செம்பஞ்சுக் குழம்பும் நீர் விளையாட்டில் கலைந்துபோகும். மார்பில் சந்தனக் குழம்பு பூசியிருப்பார்கள். அதுவும் அழிந்து போகும். இந்த வண்ணப் பொருள்களும் சந்தனமும் நீரிலே கரைந்து வண்டலிடும். அந்த வண்டல் மணலோரங்களில் மண்டும். அவர்கள் அணிந்திருந்த இலை மாலையும் அவர்களுடைய கூந்தலும் நீராடும்போது அங்கும் இங்கும் புரளும். அதனால் அவர்கள் மேனியிலே படிந்திருந்த சந்தனம் நன்றாக அழிந்து போகும். துடைத்து விட்டாற்போல அவை அழியும். இவ்வாறு மகளிர் நீரில் விளையாடும்போது அவர்களுடைய காதலரும் அவர்களுடன் ஆடி மகிழ்வார்கள். மகளிர் தனங்களிலும் ஆடவர் மார்புகளிலும் அணிந்த ஆபரணங்கள் ஒன்றோடு ஒன்று கலந்து பொருந்தும். இப்படி நீர்விளையாட்டு இனிமேல் நிகழும்படியாக வையையிலே புனல் பெருகி வந்தது.

காதலர் ஒன்றுபட்ட உள்ளத்தினராய் நீர் விளையாட்டு நிகழ்த்துவார்கள். அவர்களுடைய உள்ளத்தில் காதல் பொங்கும். மற்ற வேளைகளில் அவர்கள் தம் காதலைப்

புலப்படுத்தாமல் மனத்தை அடக்கி வைத்திருப்பார்கள். நீர்விளையாட்டில் உள்ளம் ஒரு நிலையிலே அடங்கி நிற்குமா? மனத்தை நிறுத்தமுடியுமா? இது காறும் அதனை நிறுத்தியிருந்தாலும் புதுப் புனலைக் கண்டபோது, அதை நிறுத்தும் ஆற்றல் தளர்ந்து போய்விடும். அவர்களுடைய உள்ளம் நிறையென்னும் அணையைத் தகர்த்துவிடும். அன்பினால் ஒத்த காதலருடைய உள்ளம், நாணத்தால் நிறுத்தும் ஆற்றலாகிய நிறையை உடைத்தாற்போல, வையை நீரும் வரும் வழியிலுள்ள அணைகளையெல்லாம் உடைத்துவந்தது; மலையைப் போல உயரமாகக் கட்டிய அணைகளாக இருந்தாலும் அவற்றை உடைத்துக்கொண்டு வந்தது. அப்படி வருகின்ற வெள்ளம் கரையை மோதியது. அலைகளாகிய சிறையினால் கரைகளாகிய சிறையை உடைத்தது. இரு கரையும் நின்ற காவலர்கள் இதைக் கண்டார்கள். கரை உடைந்துபோனால் ஊருக்கே ஆபத்து அல்லவா? ஆகவே அவர்கள் கரையை அடைப்பதற்காகப் பறை அறைவாரை அழைத்துப் பறை அறையச் சொன்னார்கள்.

“புது வெள்ளம் வந்துவிட்டது; கரை உடைந்துவிடும். எல்லோரும் வந்து கரையைச் சரிப்படுத்துங்கள்” என்று அவர்கள் பறை அறைந்து கூறினார்கள். அந்தப் பறையைக் கேட்டு ஊரில் உள்ளவர்களெல்லாம் ஆரவாரத்தோடு எழுந்தார்கள். புனல் வந்ததென்ற மகிழ்ச்சியினால் அவர்கள் செய்த முழக்கம் நெடுந்தூரம் கேட்டது.

தொடிதோள் செறிப்பத் தோள் வளை இயங்கக்
கொடி சோரத் திருக்கோவை காழ்கொளத்
தொகு கதிர் முத்துத் தொடை கலிழ்பு மழுக
உகிரும் கொடிறும் உண்ட செம்பஞ்சியும்
நகில் அணி அளறும் நனிவண்டல் மண்ட
இலையும் மயிரும் ஈர்ஞ்சாந்து நிழத்த

20 முலையும் மார்பும் முயங்கணி மயங்க
விருப்பு ஒன்று பட்டவர் உளம் நிறை
உடைத்தென

வரைச்சிறை உடைத்ததை வையை; வையைத்
திரைச்சிறை உடைத்தன்று கரைச்சிறை;
அறைகெனும்
உரைச்சிறைப் பறை எழ ஊர் ஒலித்தன்று.

● வாகுவலயங்களைத் தோள்கள் அழுந்தும்படி செய்ய, தோளில் உள்ள வளை (முன் கையில் வந்து) அலைய, மார்பிலும் தனத்திலும் எழுதிய கொடியாகிய தொய்யில் அழிய, அழகிய மேகலை வெறும் வடமாகிய தோற்றத்தைக் கொள்ள, ஒளி சேர்ந்த முத்துமாலை கலங்கி நிறம் மங்க, நகத்திலும் கன்னத்திலும் பூசிய செம்பஞ்சுக் குழம்பும் தனங்களில் அணிந்த சந்தனக் குழம்பும் அழிந்து நன்றாக வண்டலாகச் செறிய, இலை மாலையும் கூந்தலும் (புரண்டு) ஈரமான சந்தனத்தை அழிக்க, மகளிருடைய தனங்களிலும் மைந்தருடைய மார்புகளிலும் அணிந்த ஆபரணங்கள் அவர்கள் தழுவிக் கொள்வதனால் ஒன்றோடொன்று சேர்ந்து கலக்க, அன்பு ஒன்றுபட்ட காதலருடைய உள்ளம் நிறுத்தும் ஆற்றலை உடைத்தது போல மலையைப் போன்ற அணைகளை உடைத்தது வையை; வையையினுடைய அலைகளாகிய சிறகுகள் கரையாகிய சிறையை உடைத்தன: அப்போது அங்கே இருந்த காவலர்கள் பறை அறைக என்னும் உரையை அடுத்ததாகப் பறையின் முழக்கம் எழவே, ஊரில் உள்ளார் ஆரவாரம் செய்தார்கள்.

14. தொடி - தோள்வளை. செறிப்ப - நெருங்கி அழுந்தும்படி செய்ய. முன்னே நெகிழ இட்ட தொடி இப்போது தோள் பூரித்தலால் செறிந்தன. அப்படிச் செறிந்தது பொறுமல் கீழே தள்ளிய வளைகள் முன்கையினிடம் வந்து அலைந்தன. துயங்க - நழுவி அலைய.

15. கொடி - தொய்யில்; கொடி போன்ற உருவத்தை எழுதுதலின் இப்பெயர் பெற்றது. சோர - தன் உருவம் கலைய. திருக்கோவை - அழகிய கோவைகளாலாகிய மேகலை. மேகலை எட்டுக் கோவை, பதினாறு கோவை, முப்பத்திரண்டு கோவையெனப் பலவகைப்படும். காழ் - வடம். உடம்பு பூரித்தலாலும் நீர்விளையாட்டினாலும் மேகலையில் உள்ள மணிகள் உதிரவே, வெறும் வடம் மாத்திரம் நின்றது.

16. தொகு கதிர்-தொகுதியாகச் சேர்ந்த ஒளி. தொகு முத்து என்றும் கூட்டிப் பொருள் கொள்ளலாம். முத்துத் தொடை - முத்துமாலை; இது மார்பில் அணிந்தது. கலிழ்பு-கலங்கி; விளையாடுதலால் புரண்டு கலங்கியது. மழுக - சந்தனம் முதலியவற்றில் புரண்டு அலைவதால் நிறம் மங்க.

17. நகத்திலும் கன்னத்திலும் சிவப்புச் சாயம் பூசுவது இன்றும் உள்ள வழக்கம். உகிர் - நகம். கொடிறு - கபோலம்; கன்னம். உண்ட - பூசப் பெற்ற. செம்பஞ்சி - ஒருவகைச் செந்நிறக் குழம்பு.

18. நகில் - தனம், அளறு - சேறு; இங்கே சந்தனக் குழம்பு. வண்டல் மண்ட - வண்டலாகச் செறிய. நீரின் ஓரத்தில் மணலின்மேல் வண்டலாகப் படிந்தது.

19. இலை என்றது இலைமாலையை; அதைப் படலை என்று சொல்வார்கள். ஈர்ம் சாந்து - ஈரமாகிய சந்தனம். நீராடும் பொழுது நீரினால் சந்தனம் ஓரளவு அழிய, எஞ்சியதை இலை மாலையும் கூந்தலும் நிலைகுலைந்து போக்கின. நிழத்த-குறைக்க; அழிக்க.

20. மார்பு என்றது ஆடவர் மார்பை. முயங்கு-பொருந்திய. மயங்கல்-ஒன்றோடொன்று கலத்தல். இருவரும் தழுவியமையால் இப்படி ஆயின.

21. விருப்பு-அன்பு. நிறை-நிறுத்தும் ஆற்றல். உடைத்தென-உடைத்ததென; உடைத்தாலென என்றும் விரிக்கலாம்.

22. வரைச்சிறை-மலையைப் போன்ற அணையை. உடைத்ததை: ஐ, சாரியை.

23. திரையாகிய சிறகுகள். படபடவென்று பறவைகள் சிறகுகளை அடித்துக் கொள்வது போல அலைகள் தோற்றுதலின் அவற்றைச் சிறையாக உருவகம் செய்தார். கரைச் சிறையை உடைத்தன்று. சிறை—கட்டுக்காவல். அறைக எனும் என்பது அறைகெனும் என விகாரம் ஆயிற்று. கரை உடைப்பது கண்ட காவலர் பறையடிப்பாரை நோக்கி ஊராருக்குச் செய்தி தெரியும்படி பறையறையச் சொன்னார்கள்.

24. உரைச்சிறை - உரையின் புறத்தே. 'உரையாகிய காவலோடே' என்பது **பரிமேலழகர்** உரை. பறை எழு-பறையின் ஒலி முழங்க. ஊர்—ஊரில் உள்ளார்; ஆகுபெயர். ஒலித்தன்று-ஆரவாரித்தது.

தோள் தொடியைச் செறித்தல் முதலிய செயல்கள் நிகழும்படியாக, வையையில் நீர் அணையை உடைத்துக் கரையை உடைத்துப் பாய்ந்தது. இனி நிகழப்போகும் செயல்களை இங்கே நினைப்பூட்டினார். ●

## புனலாடப் போதுவார்

ஊரினர் ஆரவாரித்ததற்குக் காரணம் வையை யாற்றில் புனல் விளையாட்டு நிகழ்த்தலாம் என்ற எண்ணமே. அவர்கள் வையை ஆற்றை நோக்கிக் கூட்டம் கூட்டமாகப் புறப்பட்டார்கள். மகளிரும் மைந்தரும் புறப்பட்டார்கள். வீரர்கள் போருக்கு அணி அணியாக வகுத்துக் கொண்டு செல்லும் கூட்டத்தைப்

போல இருந்தது அது. போருக்குச் செல்லும் படையில் யானைகள் சிறப்பாகத் தோற்றம் அளிக்கும். அவ்வாறு இந்தக் கூட்டத்தில் பெண் யானைகள் வரிசை வரிசை யாகச் சென்றன. அவற்றை நன்றாக அலங்கரித்திருந் தார்கள். உலா வருவதாக இருந்தால் வேறு விதமாகக் கோலம் புனைவார்கள். நீராடப் போவதனால் அதற்கு ஏற்ற வகையில் அணிந்திருந்தார்கள். அந்த நீராட்டணி யுடன் பிடிகள் சென்றன.

25 அன்று, போர் அணி அணியிற் புகர்முகம்
சிறந்தென

நீரணி அணியின் நிரை நிரை பிடி செல.

● (ஊரினர் ஆரவாரம் செய்த) அன்று, போருக்காக அணியும் அணியோடு களிறுகள் சிறந்தாற் போல நீராடற் கேற்ப அணிந்த அணிகளோடு வரிசை வரிசையாகப் பிடிகள் போக.

போர்-போரின் பொருட்டு. அணியின்-அணியோடு. புகர்முகம்-யானை; போரைக் கூறினமையின் ஆண்யானைக ளென்று கொள்ளவேண்டும். நீர்-நீர்விளையாட்டு; ஆகு பெயர். நீர் விளையாட்டுக்காக அணிந்த அணியோடு. நிரை-வரிசை. ●

நீர்விளையாட்டுக்காகவே சில வகையான ஆடை யணிகள் உண்டு. அவற்றை ஆடவரும் மகளிரும் புனைந்து புறப்பட்டார்கள். அந்த அலங்காரத்தை **ஈரணி** என்று புலவர்கள் சொல்வார்கள். நீராடப் புறப்பட்டவர்கள், "நான் முந்தி, நான் முந்தி" என்று போட்டி போட்டுக்கொண்டு சென்றார்கள். அழகான அணிகளை அணிந்த இளைஞர்களும் அவர்களுக்கு இனியராகிய மகளிரும் போர் செய்யப் போவாரைப்

போலவே வேகமும் இகலும் (போட்டி) உடையவர்களாகப் போய்க்கொண்டிருந்தார்கள். ஆம்; அவர்கள் நீர்விளை யாட்டையே போரைப் போல நிகழ்த்தப் போகிறார்கள். வையை ஆற்றையே அவர்கள் தங்கள் போர்க்குக் களமாக விரும்பி, அந்தப் போரிடையே வெல்வதற்கு ஏற்ப வலிமை யுடன் சென்றார்கள். அணியணியாகச் சென்றார்கள். போரில் படைக்கலங்கள் உண்டல்லவா? இங்கும் சில கருவிகள் உண்டு. அந்தக் கருவிகளுடன் சென்றார்கள். போரில் முன்னாலே செல்லும் படைக்குத் தார் என்று பெயர். இங்கும் இளையரும் இளைய மகளிரும முன் வரிசையிலே கையில் சில கருவிகளோடு நடந்தார்கள். நீர்க் கரையிலே புகுந்து தம்முடைய போரை நிகழ்த்த அங்குள்ள துறைக் கண்ணே இறங்கப் போகிறவர்கள் அவர்கள்.

**ஏர் அணி அணியின் இளையரும் இனியரும்**
**ஈர் அணி அணியின் இயல் மிக நவின்று**
**தணி புனல் ஆடும் தகை மிகு போர்க்கண்**
**துணிபுனலாகத் துறை வேண்டும் மைந்தின்**
**அணி அணியாகிய தாரர் கருவியர்**
**அடுபுனலது செல அவற்றை இழிவர்.**

● அழகாக அணிந்த அணிகளையுடைய இளைய மைந் தரும் அவருக்கு இனிய மகளிரும், நீராட்டுக்குரிய அலங் காரங்களுடன் போட்டியை மிக விரும்பி, குளிர்ந்த நீரில் ஆடுகிற அழகு மிக்க போரில், தமக்குரிய போர்க்களமாக நீர்த் துறையை விரும்பும் வலிமையோடு, வரிசை வரிசை யாக அமைந்த தூசிப் படையைப் போன்றவராகி, நீர்வீசு கருவிகளை உடையவராய், கரையை மோதுகின்ற புனல் ஓடிக் கொண்டிருக்க, தாம் விரும்பிய அத்துறைகளிலே இறங்குவா ராகி.

இழிவர்: முற்றெச்சம்; இழிவராகித் திரிஇ எனப் பின் வரும் சொல்லோடு முடியும்.

ஏர்-அழகு. அணியின்-அலங்காரத்தோடு. இகல்-ஒருவர்க் கொருவர் மாறுகப் பேசி நடத்தல்; போட்டி. நவின்று-விரும்பி. தணி-குளிர்ந்த. தகை-அழகு; தகுதியும் ஆம். துணி புனல் துறையாக என்று கூட்டிப் பொருள் கொள்ள வேண்டும்; தெளிந்த நீரே தம் போர்க்கு உரிய களமாக. மைந்து-வலிமை. நீர்விளையாட்டுக்குரிய வலிமை மைந்தர் மகளிர் ஆகிய இருவருக்கும் இருத்தலின், இங்கே மைந்து என்றது அவ்விரு பாலருடைய ஆற்றலையும் சுட்டியது. தார்-முன்னால் நிற்கும் தூசிப்படை. கருவியர்-நீரைப் பீச்சும் பீச்சாங்குழல் முதலிய கருவிகளை உடையவர். வண்ண நீரையும் வாசனைக் கலவைகளையும் இட்டுப் பிறர்மேல் வீசும் குழல்களே இந்தக் கருவிகள். இவற்றைச் சிவிறியென்றும், துருத்தியென்றும் சொல்வார்கள்; இக்காலத்தில் பீச்சாங்குழல் என்று வழங்குவார்கள். ●

புனல் விளையாட்டை நடத்தச் செல்லும் மகளிர் பலர் வாகனங்களில் ஏறிச் சென்றனர். சிலர் யானையின்மேல் ஏறிச் சென்றனர். இன்னும் சிலர் ஆரவாரத்தையுடைய மெல்லிய நடையையுடைய குதிரையின் மேலே சென்றனர். அவர்கள் கையில் என்ன என்ன கருவிகள் இருந்தன? சிலர் புழுகு நெய்யை உள்ளே அடைத்த குழலை வைத்திருந்தார்கள். நீராடும்போது பிறர்மேல் அதிலிருந்து புழுகை வீசுவார்கள். இன்னும் சிலர் உள்ளே துளையையுடைய கொம்பிலே பனி நீரை நிரப்பிக்கொண்டு போனார்கள். வேறு சிலர் வெள்ளை நெட்டியாலான தெப்பக் கட்டையைக் கொண்டு போனார்கள். நீந்துவதற்கு ஏற்ற கருவி அல்லவா? வெறும் தெப்பக்கட்டை அது. இன்னும் சிலரோ நீரிலே மிதக்கும்படியாக நெட்டியாலே தேரைப் போலச் செய்து வண்ணம் கொடுத்து அதைக் கொண்டு போனார்கள். என்ன கலைப் பண்பு!

வையையாற்றுக்குப் போகும் வழி முழுதும் ஒரே மக்கட் கூட்டம். அவர்களோடு யானைக் கூட்டம் வேறு;

குதிரைக் கூட்டம் வேறு. மற்றக் காலங்களில் யானைகள் விருப்பப்படி நடை போடலாம்; குதிரைகளும் இடசாரி வலசாரியாக ஓடலாம். ஆனால் இந்தக் கூட்டத்தில் தம் விருப்பம்போல் போக முடியுமா? சாரிகையை மறுத்து ஒரே வழியிலே நெருங்கிச் சென்றன. அவற்றின் மேலே ஏறிச் சென்றவர்களும் அவற்றின் போக்கிலே விட்டு அவை போன வழியே திரிந்தார்கள்.

**கைம்மான் எருத்தர் கலிமட மாவினர்**
**நெய்ம்மாண் சிவிறியர் நீர் மணக்கோட்டினர்**
35. **வெண்கிடை மிதவையர் நன்கிடைத் தேரினர்**
**சாரிகை மறுத்துத் தண்டா உண்டிகை**
**ஓர் இயவு உறுத்தர ஊர்பு ஊர்பு இடந் திரீஇ,**

● *சிலர் யானைகளின் கழுத்தின்மேல் ஏறியவராய், சிலர் ஆரவாரத்தையுடைய மெத்தென்ற நடையையுடைய குதிரையில் ஏறியவராய், புனுகு நிறைந்திருக்கும் துருத்தியை உடையவராய், பனி நீரால் மணத்தைப் பெற்ற கொம்பை உடையவராய், வெள்ளை நெட்டியாற் செய்த தெப்பத்தை உடையவராய், பல வண்ணம் ஊட்டிய நல்ல நெட்டியாற் செய்த தேரை உடையவராய், தாம் இயல்பாகச் செல்லும் கதியை மாற்றிக் குறையாத யானைத் திரளும் குதிரைத் திரளும் ஒரு வழியிலே நெருங்கிச் செல்ல அவற்றை ஊர்ந்து ஊர்ந்து (மகளிரும் மைந்தரும்) இடந்தோறும் உலவ.*

கருவியராகி (31), இழிவராகி(32). எருத்தராகி, மாவின ராகி (33), சிவிறியராகி, கோட்டினராகி (34), மிதவைய ராகி, தேரினராகி (35)த் திரீஇ என்று கூட்டுக.

திரீஇ என்பது திரிந்து என்ற பொருள் உடையதேனும் திரிய என்று கொள்ளவேண்டும்; இது எச்சத் திரிபு.

கைம்மான்-யானை. எருத்து-கழுத்து. கலி-ஓசையை யுடைய; கனைப்பையுடைய. நீராடச் செல்லும் கூட்ட மாத

யின் போருக்குரிய குதிரைகளைக் கொணராமல் மென்மையானவற்றைக் கொணர்ந்தனர். மடம்-மென்மை. மா-குதிரை. நெய் என்றது புழுகு நெய்யை. சிவிறி-நீர் வீசு கருவி; துருத்தி யென்றும் கூறுவர். நீர்-இங்கே பனி நீர். கொம்பு-ஊது கொம்பைப் போல உள்ளே துளையையுடைய கொம்பு; இதில் மணமுள்ள நீரை இட்டு வைப்பர். கிடை-நெட்டி. மிதவை-மிதப்பு; தெப்பக்கட்டை. நன்கிடையை, 'நிறம் பிடித்த நன்கிடை' என்பர் **பரிமேலழகர்**, சாரிகை-சாரி; நடை. மறுத்து-நீக்கி. தண்டா-குறையாத. உண்டை என்பது உண்டிகை எனத் திரிந்தது; உண்டை-திரள்; கூட்டம். இயவு-வழி. உறுத்தர-நெருக்க. ஊர்பு-ஊர்ந்து, திரீஇ-திரிந்து; இங்கே திரிய என்ற பொருளில் வந்தது.

இளையரும் இனியரும் (27) திரிய (37) என்று கூட்டிப் பொருள் கொள்ளவேண்டும். ●

கூட்டம் கூட்டமாக வந்த இளைஞரும் மகளிரும் நீரிலே இறங்கி விளையாடத் தொடங்கினர். ஆனால் சிலர் நீருள் இறங்காமல் துறையிலே இருந்தார்கள். மதுரையின் புறச்சேரியில் சில சாதியினர் வாழ்ந்தார்கள். அவர்கள் மதுரைமா நகர் மக்களோடு ஒன்றி விளையாடும் உரிமை இல்லாதவர்கள். அவர்கள் நீரில் இறங்கி விளையாட வில்லை. ஆனாலும் அவர்களும் கூட்டத்துடன் வந்து துறையின்கண்ணே நின்று வேடிக்கை பார்த்தார்கள். சிலர், தாமும் நீரிலே புகுந்து மற்றவர்களோடு விளையாட வேண்டும் என்னும் ஆசை இருந்தாலும் சமுதாய அமைப்பினாலும் தங்களுடைய தொழில் வகையினாலும் நீருக்குள்ளே செல்ல முடியாத நிலையில் இருந்தார்கள். அவர்களும் புகவில்லை. மற்றும் ஒருசாரார் வேறு எவ்வகையான தடையும் இல்லாமல் இருந்தாலும் நீருக்குள்ளே இறங்கி அங்கே நடக்கும் விளையாட்டுப் போரில் ஈடுபடும் ஆற்றல் இல்லாதவர்கள்; அதற்கு ஏற்ற மைந்து அற்ற

மெலியோர். அவர்களும் துறையிலே நின்றார்கள். இப்படிச் சேரி இளையரும், செல்லுதற்கு அரிய நிலையினரும், வலியர் அல்லோரும் அவர்களுக்கு விருப்பமான துறைகளிலே இருந்து நீர் விழாவிலே கலந்து கொண்டார்கள். மெலியர் அல்லோராகிய ஏனையோர் புதிய புனலில் புகுந்து நீர்விளையாட்டைப் புரிந்தார்கள்.

## வேறுபடு நீர்

அவர்கள் புகுந்து உழக்கியதால் நீர் தன் நிறமும் இயல்பும் மாறிவிட்டது. பல வகையான வாசனைப் பண்டங்களை ஊறவைத்த நீரைக் குழலிலே பெய்து கொண்டு வந்தவர்கள், அதனை எல்லோர் மேலும் வீசினார்கள். மைந்தரும் மகளிரும் அணிந்திருந்த சந்தனக் குழம்பு நீரிலே கரைந்தது. வாசனைத் தைலங்களைத் தலையில் தடவிக்கொண்டு நீராடியமையால் அந்தத் தைலம் ஆற்றிலே கலந்தது. பீச்சாங்குழலின் மூலம் வீசிய புழுகு நெய் நீரோடு கலந்தது. அவரவர்கள் அணிந்திருந்த மலர்கள் சிதைந்து நீரிலே விழுந்தன. பலவகை மணத்தைப் பெற்ற இத்தனை பண்டங்களும் கலந்ததனால் வையை யாறு புதிய மணத்தை வீசியது; அது வரும் வழி முழுதும் மணம் வீசிக்கொண்டே வந்தது.

சேரி இளையர், செலவரு நிலையர்,
வலியர் அல்லோர் துறை துறை அயர
மெலியர் அல்லோர் விருந்து புனல் அயரச்
சாறும் சேறும் நெய்யும் மலரும்
நாறுபு நிகழும் யாறு வரலாறு.

● மதுரையின் புறச் சேரியில் வாழும் இளைஞர்கள், மரபு பற்றி நீருக்குள்ளே மற்றவர்களோடு செல்வதற்கு அரிய நிலையை உடையவர்கள், உள்ளே புகுந்து விளையாடும்

வலிமை உடையோ ரல்லாதார் ஆகியோர் துறைதோறும் விழாவை விரும்பி நின்று பார்க்க, மெலியர் அல்லாதார் நீருக்குள்ளே புகுந்து புதுப் புனல் விளையாட்டைச் செய்ய, அதனால் பல வாசனைப் பொருள்கள் ஊறிய சாரமாகிய நீரும் சந்தனக் குழம்பும் வாசனைத் தைலமும் புனுகும் பூக்களும் கலந்து மணம் வீசிச் செல்லும் வையையாறு, தான் வரும் வழியில்.

சேரி-புறஞ்சேரி; இங்கே பிற நாட்டிலிருந்து வந்த யவனர் முதலியவர்கள் இருந்தார்கள். செலவரு நிலையர் என்பது பாணர் முதலியோரை. துறை அயர-துறையை விரும்ப. சேரி இளைஞரே செலவரு நிலையர் என்று **பரிமே லழகர்** கொண்டு, 'காதலாற் செல்லும் புறச்சேரியில் இளை யர் செல்லுதற்கரிய நிலையராக' என உரை எழுதுவர். விருந்து-புதுமை. அயர-விளையாட்டைச் செய்ய. சாறு-சாரம். 'பத்துத்துவர் முதலாயின ஊறின நீர்' (**பரிமேழலகர்**) சேறு-குழம்பு: இங்கே சந்தனக் குழம்பு. நெய்-வாசனைத் தைலம்; புழுகு நெய். நாறுபு-மணம் வீசி. நிகழும்-செல்லும். வரலாறு-வருகிற வழியில். 'இவ்வியாறு வருகின்ற வாறு' என்பர் **பரிமேலழகர்,**

வையையாற்றில் நீராடிக் காலையில் செய்தற்குரிய கடன்களைச் செய்தற் பொருட்டு அந்தணர் வந்தனர். வேதத்தை விரும்பி ஓதும் அவர்கள் நீர்த் துறைக்கு வந்த போது அதில் ஒருவகை மணம் வீசுவதைக் கண்டார்கள். மூழ்குவதற்கும் ஆசமனம் முதலியன செய்வதற்கும் ஏற்றது தூய நீரே. தூயதல்லாத நீரிலும், வெந்நீரிலும் கடன்களை இறுத்தல் முறையன்று. எப்போதும் போலன்றி நீர் புதிய மணம் வீசி வேறுபட்டதைக் கண்டு அவர்கள் மருண் டார்கள். மகளிரும் மைந்தரும் பூசியிருந்த வாசனைப் பொருள்களைக் கழுவி வந்த கலங்கல் நீர் ஒன்றும் செய் வதற்கு ஏற்றதன்று என்று எண்ணி, அதில் நீராடவில்லை; ஆசமனமும் செய்யவில்லை.

நாறுபு நிகழும் யாறு கண்டு அழிந்து
வேறுபடு புனல் என விரை மண்ணுக் கலிழைப்
புலம்புரி அந்தணர் கலங்கினர் மருண்டு.

● மணம் வீசிச் செல்லும் வையை யாற்றைக் கண்டு, இது தன் இயல்பு மாறி வேறுபட்ட நீர் என்று எண்ணி, மகளிரும் மைந்தரும் பூசிய வாசனைப் பண்டங்களைக் கழுவுதலையுடைய கலங்கல் நீரை, வேதத்தை விரும்பி ஓதும் அந்தணர் கண்டு மருண்டு கலங்கினர்.

நாறுபு - மணம் வீசி. அழிந்து - தன் இயல்பு நீங்கி. வேறுபடு புனல் - வேறான இயல்பைப் பெற்ற நீர். விரை- வாசனைப் பொருள்கள். மண்ணு - மண்ணுதல்; கழுவுதல்; கலிழை - கலங்கல் நீரை. புலம் - வேதம். புரி - விரும்பும். கலங்கினர் - மனம் குழம்பினர். மருண்டு - வியப்படைந்து. இவ்வாறு வருதற்குக் காரணம் என் என்று வியந்தனர். கலங்கினர் என்பதற்கு, 'நீராடலும் வாய் பூசலும் முதலிய தம் தொழில் செய்யாது நீங்கினர்' என்று உரை எழுதுவர் **பரிமேலழகர்.** ●

அந்தணர் மாத்திரம் வேறுபட்ட வையை நீரைக் கண்டு மருண்டு கலங்கினார் என்பது இல்லை; மற்றவர்களும், "இந்த நீர் உண்ணப் பயன்படாது" என்று கண்டு நீங்கினர். அவர்கள் நீரின் மணத்தை மாத்திரம் கண்டு விலகவில்லை. அதில் வரும் பொருள்களைக் கண்டபோது அதனைப் பருக மனம் கொள்ளவில்லை. அவர்கள் கண்ணிற் பட்டவை எவை?

புனல் விளையாட்டு நிகழ்த்த வந்த மகளிர் தம் கூந்தலிலே செருகியிருந்த மலர்களை எடுத்து எறிந்து நீராடினார்கள். அந்த மலர்கள் வையை யாற்றிலே மிதந்து வந்தன. மைந்தர்கள் மார்பிலே அணிந்த மாலைகள் கழன்று வந்தன; மகளிர் அணிந்த கோதைகளும் வந்தன.

ஆடவர் அணியும் மாலையைத் தார் என்றும் மகளிர் அணிவதைக் கோதை என்றும் சொல்வது மரபு. நீர்விளையாட்டில் ஈடுபட்டவர்கள் கழித்த மலரும் தாரும் கோதையும் மிதந்து வந்தன.

இவைகள் யாவும் நகர மக்கள் நீராடும் இடத்திலே கலந்த பொருள்கள். ஆனால் முன்பே வையையாற்றில் வேறு பொருள்களும் வருகின்றன. புது வெள்ளமாதலின் இரு கரைகளிலும் உள்ள பொருள்களை அடித்துக்கொண்டு வருகிறது ஆறு. பல மரங்களின் வேரைப் பறித்து அந்த வேரையும், மரத்தடியிலே உள்ள தூரைப் பறித்து அதனையும், மரஞ் செடி கொடிகளின் காயையும் கொடிகளின் கிழங்கையும் பறித்து அவற்றையும் அடித்துக்கொண்டு வருகிறது ஆறு. வரும் வழியில் இழிவான பழக்க வழக்கங்களை உடைய பூரிய மாக்கள் புனலைக் கண்டவுடனே ஆரவாரம் செய்கின்றனர். அதன் கரையிலே குதித்துக் கொம்மாளம் போட்டு விருந்துண்கின்றனர். அவர்கள் விருந்தில் ஊனும் கள்ளுந்தானே இருக்கும்? அவர்கள் பன்னாடையால் வடிகட்டிய கள்ளை நுகர்கின்றனர்; அந்தக் கள்ளை உகுக்கின்றனர். அவர்கள் உண்டு ஒழித்த ஊனும், உகுத்த கள்ளும் வையை யாற்றின் தூய்மையைக் கெடுக்கின்றன.

மலரும் தாரும் கோதையும் கலப்பதனால் வையை யாற்று நீர் வேற்று மணம் உடையதாயிற்று; வேரும் தூரும் காயும் கிழங்கும் வருவதனால் தெளிவற்றுக் கலங்கிய தாயிற்று; ஊனும் கள்ளும் கலப்பதால் அதன் நலனே அழிந்துவிட்டது. இவற்றால் வையை நீர் தூயது, தெளிந்தது, ஆடுதற்குரியது, பருகுதற்குரியது, ஆடை வெளுப்பதற்குரியது என்று பலபடியாகச் சொல்லும் இயல்புகள் யாவும் மாறிவிட்டன. வெள்ளம் வந்தாலும்,

விரிந்த பரப்புடைய நீர் இப்போது இருந்தாலும், அது சேறாகவும் வேறுபட்ட இயல்புடையதாகவும் இருந்தது.

**மாறும் மென் மலரும் தாரும் கோதையும்**
**வேரும் தூரும் காயும் கிழங்கும்**
**பூரிய மாக்கள் உண்பதும் மண்டி**
**நார் அரி நறவம் உகுப்ப நலன் அழிந்து**
**வேறு ஆகின்று இவ் விரிபுனல் வரவு எனச்**
**சேறு ஆடு புனலது செலவு.**

● சூடிக் கழித்த மெல்லிய மலரும், ஆடவர் அணிந்த தாரும், மகளிர் அணிந்த மாலையும், மரஞ் செடி கொடிகளின் வேரும் தூரும் காயும் கிழங்கும், இழிந்த மக்கள் உண்ணும் ஊனும் நிரம்பி, அம் மக்கள் பன்னாடையிலே வடிகட்டின கள்ளைச் சிந்த, இவற்றால் தனது நல்ல இயல்பு கெட்டு, இந்த விரிந்த நீர் வரவு இப்போது நமக்குப் பயன்படாமல் வேறாகிறது என்று கண்டோர் கூறும்படி சேறுபடும் வையை நீரினது கதி இருந்தது.

மாறுதல் - மாற்றுதல்; சூடிக் கழித்தல். தார், மைந்தர் அணிவது; கோதை, மகளிர் அணிவது; 'மகளிர் கோதை மைந்தர் புனையவும், மைந்தர் தண்டார் மகளிர் பெய்யவும்" (**பரிபாடல், 20; 21-2**); "ஒலிகொள் ஆயம், தந்த கோதை தாரொடு பொலிய" (**மதுரைக் காஞ்சி, 264-5**) என்பதற்கு, 'புதுநீர் விழாவின் ஆரவாரத்தைத் தம்மிடத்தே கொண்ட மகளிர் திரள் தம்மிடத்து நெருங்கின கோதை தம் கணவர் மார்பின் மாலையுடனே அழகு பெற' என்று **நச்சினார்க்கினியர்** உரை எழுதுவர். தூர் - அடிமரப் பகுதி. பூரிய மாக்கள் - கீழ் மக்கள். பூரிய மாக்கள் உண்பது என்றது ஊனை. மண்டி - நெருங்கி; நிரம்பி. நார் - பன்னாடை. நறவம் - கள். நார் அரி நறவம் - மரப்பட்டையினால் அரித்துப் பண்ணிய கள் என்றும் பொருள் கொள்ளலாம். உகுப்ப - சிந்த. நலன் - நல்ல இயல்பு. வேறு - தனக்குரிய இயல்பு மாறி

பெருமை உடைய இயல்பு ஆகின்று - ஆகின்றது. என - எனச் சொல்லைப் பிறரும் நீங்க. புனலது செலவு இருந்தது என ஒரு சொல் வருவித்து முடிக்கவேண்டும்.

## புனலின் உரை

விடியற் காலையில் தமிழ்ப் புலவர்களின் புகழைப் பெற்ற வையையின் புனல் மதுரைக்குள் வந்த அழகு கண் கொள்ளாக் காட்சி. **தமிழ் வையைத் தண்ணம் புனல்** அந்த விடியற் காலையில் ஒரு செய்தியுடன் வந்தது. இரவில் தம்முடைய காதலிமாரோடும் திருப்பரங்குன்றத்தில் கட்டிளங் காளையர் இன்புற்றுத் தங்கிய செய்தியை, அந்த இன்பத்தைப் பெறுதவர்களுக்கு உரைக்க வந்தது போல வையைத் தீம்புனல் படர்ந்தது.

குன்றத்தினின்றும் அருவிக்கால் இழுமென்ற ஓசையோடு இறங்கியது. அந்த அருவி காதலர்கள் இனிது தூங்குவதற்குப் பாடும் தாலாட்டுப் பாட்டைப் போல இருந்தது. அங்கே காற்றுக்குப் பஞ்சம் உண்டா? அதற்குத் தடைதான் உண்டா? தடையின்றி வருகின்ற தூய காற்று, உருவமற்ற அருபியாக இருந்தாலும் அது வீசும் போது ஒரு வகை இன்னொலியை உண்டாக்கியது. அந்தக் காதலர்களின் இன்ப நிலையை அது பாராட்டியது போலும்! இப்படி அருவிக்கால் தாலாட்டவும், அருபியான காற்றுப் பாராட்டவும். தம் காதல் மங்கையரின் தனங்களின் இடையே ஆடவர் இரவிலே அளவளாவித் தூங்கும் சிறப்புடையது முருகன் எழுந்தருளிய திருப்பரங் குன்றம். இந்தச் செய்தியைச் சொல்லுவதுபோல வையை நீர் ஊரிடை ஓடி வந்தது. தம் காதலரோடு கூடாமல் தனித்திருக்கும் மகளிருக்கு, அவர்களுடைய **கணவர்கள்**

தம் காமக் கிழத்தியரோடு இரவில் அளவளாவியதை யெல்லாம் தெளிவாக இருள் புலரும் விடியற் காலையிலே அறிவிப்பதுபோலத் தரையிலே படர்ந்து சென்றது, வையைத் தண்புனல்.

வரை அழி வால் அருவிக்கால் தாலாட்டக்
கரை அழி வால் அருவிக்கால் பாராட்ட*
இரவிற் புணர்ந்தோர் இடைமுலை அல்கல்
புரைவது பூந்தாரான் குன்று எனக் கூடார்க்கு
உரையோடு இழிந்து உராய் ஊரிடை ஓடிச்
சலப்படையான் இரவில் தாக்கியது எல்லாம்
புலப்படப் புன்னம் புலரியில் நிலப்படத்
தான் மலர்ந்தன்றே
தமிழ்வையைத் தண்ணம் புனல்.

● மலையினின்றும் மிக்கு வரும் தூய அருவியின் கிளை தாலாட்டவும், தடையின்றி மிக்குவரும் தூய உருவமற்ற காற்றுப் பாராட்டவும், இரவிலே தம் காமக் கிழத்தியரைப் புணர்ந்தவர்கள் அவர்களுடைய தனங்களிடையே தங்குதல் சிறந்திருப்பது பூமாலையையணிந்த முருகனுடைய திருப்பரங் குன்றம் என்று அங்கே வந்து இன்புறுதவர்களுக்குச் சொல்லும் சொல்லோடே இறங்கிப் பரவி ஊரினிடையே ஓடி, வஞ்சனையையே படையாகக் கொண்டு அவ்வாடவர் இரவில் செய்ததெல்லாம் நன்றாக வெளிப்பட மிக்க விடியற்காலையில் நிலத்திலே நன்கு ஈரம் படும்படி தமிழால் புகழ்பெற்ற வையை யாற்றின் குளிர்ந்த அழகிய புனல் பரவியது.

அருவி வழியே ஆற்றிலே கலந்துவந்த பொருள்கள் காதலர்கள் இன்புற்றதைக் காட்டியது.

வரை - மலை. அழிதல் - மிகுதல். வால் அருவிக்கால் - தூய அருவியின் கிளை, தூய அருவமான காற்று. அருவி - அரு

* 'வரையழி வாலருவி(?) வாதா லாட்டக், கரையழி வாலரு விக் கால்பா ராட்ட' என்பது புத்தகத்திலுள்ள பாடம்.

வந்ததை உடையது; அருவி என்பதன் சிதைவு. அல்கல் - தங்குதல். புனலது - பிறப்புடையது. பூந்தாரான் என்றது முருகனை. திருப்பரங்குன்றத்தைக் குன்றென்று அடையின்றிச் சொல்வது மரபு. கூடார்க்கு - வந்து சேராதவர்களுக்கு. உரையோடு - சொல்லும் சொல்லோடு; என்றது புலப்படுத்தும் அடையாளங்களைக் கூட்டியபடி. இழிந்து - இறங்கி. உராய் - பரந்து. சலப்படையான் - வஞ்சகமாகிய ஆயுதத்தால். தாக்கியது - துன்புறுத்தியது. வீட்டிலுள்ள மனைவியரை அவர் அறியாமல் பிரிந்து காமக் கிழத்தியரோடு இருந்ததையே சலப்படையால் தாக்கியது என்றார். புன்னம் புலரி - மிக்க புலரி; புலரி - விடியற்காலம். பென்னம் பெரிது, சின்னஞ் சிறிது, கன்னங் கரிது என்பனபோலப் புன்னம் புலரி என வந்தது; மிகுதிப் பொருளைக் காட்டியது. மலர்ந்தன்று - பரவியது. தமிழ் வையை - தமிழ்ப் புலவரால் பாடப்பெற்ற வையை; தமிழ் நாட்டுத் தலைநகராகிய மதுரையைத் தமிழ் மதுரை என்றது போலச் சொன்னதாகவும் கொள்ளலாம். ●

## 2

முதல் நாள் வையை நீரில் தன் காமக் கிழத்தியோடும் நீராடினான் ஓர் ஆடவன். அவன் மனைவி வீட்டில் இருந்தாள். அவனுக்குரிய காதற் பரத்தை ஒருத்தியும் இருந்தாள். அவனுடைய இல்லத்தின்கண் ஒருசார் வாழ்ந்து அவனுக்கு இன்பம் ஊட்டுபவளாக இருந்த இற்பரத்தையாகிய காமக்கிழத்தியோடு அவன் நீர்விளையாடி இன்புற்றான் என்ற செய்தி அவனுடைய காதற் பரத்தைக்கும் மனைவிக்கும் தெரிந்தது.

சேரியிலே வாழும் பொது மகளிரைச் சேரிப் பரத்தையர் என்று வழங்குவர். அவருள் தலைவன் காதலைப் பெற்று அவனுக்கே உரியவளாக வாழ்பவள் காதற்

பரத்தை; இவள் சேரிப் பரத்தையின் மகள். அவ்வாறு இருந்த காதற் பரத்தையின் மகளாய், மனைவியை ஒன்றை யன்றி மற்ற எல்லா நலங்களையும் பெறும் ஒருத்தியைக் காமக் கிழத்தி என்றும் இற்பரத்தை யென்றும் சொல் வார்கள். நாள்தோறும் அமுதத்தையே நுகரும் ஒருவன் அது தெவிட்டினால் சிறிது புளிப்புச் சுவையையும் நுகர்வது போலத் தலைவன் தன் மனைவியோடு இன்புற்று வாழும் காலத்தில் இடையே இத்தகையவர்களோடு அளவளாவு வது வழக்கம்.

பரத்தையரோடு அளவளாவுவது தெரிந்தால் தலை விக்கு ஊடல் உண்டாகும். இங்கே முதல் நாள் இற்பரத்தையோடு நீராடினான் என்ற செய்தியை உணர்ந்த காதற் பரத்தை தலைவனிடம் ஊடலுடைய வளாக இருந்தாள். தலைவன் தளிரைக் கொய்து கொண்டு வந்து அவளுக்குக் கையுறையாகக் காட்டி வையையில் புனல் வந்த செய்தியை மேலே உள்ளவாறு சொன்னான்.

காதலர்கள் ஒன்றுபட்டு விளையாடும் விளையாட்டைப் பற்றி அவன் கூறக் கூற அவளுக்குக் கோபம் மிகுதியா யிற்று. கோபத்தோடு பேசலானாள் :

**காதற் பரத்தை :** நான் பழையவள். பழைய பொருளிடம் சலிப்பு உண்டாவதும் புதிய பொருளிடம் மோகம் உண்டாவதும் உலக இயற்கை. இதை என்னிடம் ஏன் கொண்டுவந்து தருகிறாய்? என்றும் மாறாத புதுமையை உடையவரும் நின்னால் விரும்பப்படுவாருமாகிய மகளிருக் காக அல்லவா இதை நீ கொய்தாய்? அப்படி இருக்க, அவர்களிடம் அளிக்காமல் என்னிடம் ஏன் கொண்டு வந்தாய்?

**தலைவன்:** ஓ! நீ இந்தத் தளிரை நன்றாக அறிந்திருக்கிறாயே! நீ சொன்னவையே இவை.

(இப்படி அவன் பரிகாசமாகச் சொன்னான்.)

**காதற் பரத்தை:** நீ என்ன சொன்னாலும் உண்மை உண்மை தான். இப்போது மிகவும் நல்லவனைப்போல நீ பணிந்து தான் நிற்கிறாய். ஆனால் உன்னுடைய பழைய பண்பாகிய அன்பு ஒசிந்து (முறிந்து) விட்டது. முன்பெல்லாம் நீ தளிர் கொண்டு வந்து கொடுத்தபோது அது எப்படி இருந்த தென்பது எனக்குத் தெரியாதா? உன் அன்பு எப்படி இருந்ததோ அப்படி வளப்பமாக இருந்தது. அப்போதெல்லாம் தளிரைக் கொய்தவுடனே எனக்குக் கொண்டு வந்து கொடுத்தமையால் அது துவளாமல் இருக்கும். இப்போதோ இது துவண்டிருக்கிறது; நீயே பார். யாருக்காகவோ இதைக் கொய்து கொண்டு சென்றாய். அவள் வேண்டாம் என்று மறுத்துவிட்டாள். அதை இங்கே கொண்டு வந்திருக்கிறாய். அங்கும் இங்கும் அலைந்ததனால் இது துவண்டு போயிற்று. உன் திருட்டுத் தனம் இப்போது எனக்கு வெளிப்பட்டுவிட்டது. ஆ ஆ! எத்தனை அன்புடனும் ஊக்கத்துடனும் நீ இதைக் கொய்திருக்கிறாய்! உன் மார்பிலே கிடக்கும் மாலை கூட வாடிவிட்டதே! அப்படி வாடும்படி நீ கொய்தது தெரிந்தும் அவள் உனக்கு உடம்படவில்லையோ? மிகவும் வருந்திக் கொய்த தழையைக் கையிலே எடுத்துச் சென்று அவளிடம் பல்லைக் காட்டிப் பரக்க விழித்துச் செய்யாததை யெல்லாம் செய்தாயே; அதற்குக்கூடவா அவள் மனம் இரங்கவில்லை? நீ கெஞ்சிக் கூத்தாடியது கண்டும் அவள் சம்மதிக்கவில்லையா?

**"விளியா விருந்து விழுவார்க்குக் கொய்தோய்."**

**"தளிர் அறிந்தாய்; தாம் இவை."**

" பணிபு ஓசி பண்ப! பண்டு எல்லாம் நனி உருவத்து;
என்னோ துவள்கண்டீ?
65. எய்தும் களவு இனி; நின் மார்பில் தார் வாடக்
கொய்ததும் வாயாளோ? கொய் தழை கைபற்றிச்
செய்ததும் வாயாளோ? செப்பு "

● "அழியாமல் எப்போதும் புதுமையை உடைய, நின்னால் விரும்பப்படும் மகளிருக்கு இதனைக் கொய்தாய்" என்று காதற்பரத்தை கூறினாள்.)

"இந்தத் தளிரை நீ நன்கு அறிந்தாய்; அவையே இவை" (என்று குறிப்பாகத் தான் அது செய்யவில்லை என்பது தோன்றத் தலைவன் சொன்னான்.)

"இப்போது பணிந்து, முறிந்த பழைய பண்பை உடையவனே! முன்பு எல்லாம் நன்றாக அழகு பெற்றதாக இருந்தது நீ தந்த தளிர்; இப்போது இது துவள்வது ஏன்? நீயே பார். நின் திருட்டுத்தனம் இப்போது வெளிப்பட்டு விட்டது. நின் மார்பில் உள்ள மாலை வாடும்படியாக நின்று இத்தளிரைக் கொய்ததற்கும் அவள் உடம்படவில்லையா? கொய்த தழையைக் கையிலே கொண்டு சென்று செய்யாத வணக்கமெல்லாம் செய்ததற்கும் அவள் உன் கருத்துக்கு உடம்படவில்லையோ? சொல்" (என்றாள் காதற்பரத்தை.)

விளியா - ஒழியாத. விருந்து விழைவார்க்கு - புதியவராகிய விரும்புவாருக்கு; விருந்து - புதுமை; இங்கே புதுமையுடையாருக்கு ஆயிற்று.

பணிபு - பணிந்து. ஓசிதல் - ஒடிதல். பண்ப - பண்பை உடையவனே. நனி உருவத்து - நல்ல உருவத்தை உடையது; உருவத்தது என்பது செய்யுள் விகாரத்தால் உருவத்து என நின்றது. துவள் - துவளுதல். கண்டீ - காண்பாயாக.

எய்தும்-வெளிப்படும். இனி-இப்பொழுது. வாயாளோ-சம்மதியாளோ. ●

**தலைவன்:** இந்தத் தளிர் வாடுவதற்குக் காரணம் உண்டு. வையையில் புதுப்புனல் வந்தமையால் பறித்தவுடனே அதைக் கடந்துவர முடியவில்லை. அலங்கரித்த தெப்பத்தில் ஏறிவர வேண்டியிருந்தது. அதனால் தாமதம் ஆயிற்று. வையை வெள்ளம் காரணமாக இந்தத் தளிர்கள் துவண்டன. வேறு என்ன என்னவோ நீ சொல்கின்றாயே! முருகனுடைய குன்றத்தின் மேல்....(சற்று நிறுத்தி) ஆ ஆ! அந்த வையையின் நீரோட்டந்தான் எவ்வளவு அழகாக இருக்கிறது! அழகிய வெள்ளம் அல்லவா அது?

அவன் திருப்பரங்குன்றத்தின்மேல் ஆணையிட்டுச் சொல்ல வந்தவன், அதன் பெயரைக் கூறினான்; அப்பால் வையையின் அழகைக் கூறுவான் போல ஆணை என்ற சொல்லைக் கூறாமல் மாற்றினான்.

**“புணை புணை ஏறத் தாழ்த்ததை; தளிர் இவை**
**நீரின் துவண்ட; சேஎய் குன்றம், காமர்**
**பெருக்கு அன்றோ வையை வரவு?”**

● “அலங்கரித்த தெப்பத்தில் ஏறிவரத் தாமதம் ஆயிற்று; இந்தத் தளிர்கள் புதுப்புனல் காரணமாகத் துவட்சியை அடைந்தன. முருகனது திருப்பரங்குன்றத்தின் மேல்—அழகிய வெள்ளமல்லவா வையையில் வரும் நீர்?”

புணை - அலங்கரித்த புணை-தெப்பம்; ஓடம். தாழ்த்தது- தாமதம் ஆயிற்று; ஐ; சாரியை. நீரின் - நீர் வந்தமையால். துவண்ட-வாடின. சேஎய் - முருகன். குன்றம்-திருப்பரங்குன்றம். காமர் - அழகிய; விருப்பத்தை உண்டாக்கும் என்றும் கொள்ளலாம். பெருக்கு-வெள்ளம். ●

இதனைக் கேட்ட காதற் பரத்தைக்குப் பின்னும் கோபம் மூண்டது. வையை வெள்ளத்தைப் பற்றித் தலைவன் சொல்லச் சொல்ல அவன் இற்பரத்தையுடன்

*நீர்விளையாட்டில் ஈடுபட்டதை எண்ணி எண்ணிப் பொருமினாள்.**

**காதற் பரத்தை:** *ஆம், ஆம், நீ சொல்வது சரி. வையையின் வெள்ளம் ஒரே நிலையில் நிற்பது அன்று. சில காலம் அது திடீரென்று பெருகுகிறது; சில காலம் அது சுருக்கத்தை அடைகிறது. உன்னுடைய காதலால் எழுந்த காமமும் ஒரே சீராக ஒரே நிலையில் நிற்குமோ? சில பேரிடம் மிக விரைவிலே குறைந்து விடுகிறது. வேறு சிலரிடமோ மிக விரைவிலே பெருகி விடுகிறது. ஆகவே இதை நம்பி நீ ஆணையிட்டுச் சபதம் செய்யாதே. நிலையாக நிற்கும் காதல் நின்பால் இருந்தால் சூளுறலாம். அப்படி இருப்பதில்லை என்பதை நான் அநுபவத்தில் உணர்ந்தவள் ஆயிற்றே! ஆதலின் நீ சூளுற வேண்டாம். உன் காமம் வையைப் பெருக்கை ஒப்பதுதான். ஆதலின் முன்பு ஆணையிட்டாயே; அது தவறு; நீ பிழையுடையவன் ஆனாய்.*

**“ ஆம் ஆம்; அது ஒக்கும்; காதலம் காமம்**
**ஒருக்க ஒருதன்மை நிற்குமோ? ஒல்லைச்**
**சுருக்கமும் ஆக்கமும்; சூளுறல்; வையைப்**
**பெருக்கு அன்றோ? பெற்றாய் பிழை.**

● *“ஆம் ஆம்; அது பொருந்தும், காதலால் பிறந்த காமம் ஒரு படித்தாக ஓர் இயல்பிலே நிற்குமோ? விரைவிலே சுருக்கத்தையும் பெருக்கத்தையும் உடையது அது. ஆதலின் அதை நம்பி ஆணையிட்டுப் பேசாதே; உன் காமம் வையையின் வெள்ளமே அல்லவா? நீ சூளுறவு செய்து குற்றத்தை அடைந்தாய்.*

---

* *‘காதற் பரத்தை, அவள் காமப் பெருக்கம் வையை வரவு ஒக்கும் என்றாளாக உட்கொண்டு பின்னும் புலந்து கூறுகின்றாள்.’* (**பரிமேலழகர்.**)

ஒக்கும்-பொருந்தும். காதல்-உள்ளத்து உணர்ச்சி. காமம்-செயல்வகை. முன்னதை உள்ளப்புணர்ச்சி யென்றும், பின்னதை மெய்யுறு புணர்ச்சி என்றும் சொல்வார்கள். ஒருக்க-ஒரேமாதிரி. ஒல்லே-விரைவில். சுருக்கமும் ஆக்கமும் உடையது என்று ஒரு சொல் வருவித்து முடிக்க வேண்டும். சூளுறல்-சூளுறுத்த; ஆணையிட்டு உறுதி கூறுதே; சூள்-உறுதிமொழி; சபதம்.

பின்னும் காதற் பரத்தை பேசுகிறாள்:—

"நான் சொல்வதை நீ நன்கு அறிவாய். மழை பொழி கின்ற கார்காலம் இது. இப்போது வையையில் நிறைய வெள்ளம் வந்திருக்கிறது. என் இடமும் நின் இடமும் அருகில் உள்ளன. அப்படி அருகே நம் பதி இருந்தும் வையையின் வெள்ளம் நீ என்னிடம் விரைவில் வர முடியாமல் தடுக்கின்றது. ஓடத்தை எதிர்பார்த்து நீ காத்துக் கிடக்கவேண்டியிருந்தது. அம்பி (ஓடம்) காரணமாகத் தாழ்க்கச் செய்யும் வெள்ளத்தையுடைய இதே வையை இளவேனிற் காலத்து நீரின்றித் தன்னிடத்தே நாரை முதலிய பறவைகள் இரை தேரும்படி கிடக்கும்; அப்போது கடக்க எளியதாய் இருக்கும். உன்னுடைய காமமும் இப்படித்தான் காலந்தோறும் வேறுபடுகிறது. நீ வையையைப் பற்றிச் சொன்ன அத்தனை செய்தியும் அதற்குப்பொருந்தும். ஆதலின் அதனை வையையோடு ஒன்றாகக் கருது."

(வையையில் வெள்ளம் இன்றும் ஓடிக்கொண்டிருக்கிறது. நீ பரத்தையினிடம் கொண்ட காமம் இன்னும் குறையவில்லை என்பதை யெல்லாம் குறிப்பிடுகிறாள்.)

75. "அருகு பதியாக அம்பியின் தாழ்ப்பிக்கும்,
குருகு இரை தேரக் கிடக்கும், பொழி காரில்,
இன்னிள வேனில் இது அன்றோ வையை?
நின் காமம்
வையை வயமாக வை.

● "அருகில் நம் பதிகள் இருப்பனவாக, மழை பொழி கின்ற காரில் நின்னை ஓடம் காரணமாகத் தாமதிக்கச் செய்யும்; இனிய இளவேனிற் காலத்தில் பறவைகள் இரை தேடும்படியாகக் கிடக்கும்; இது அல்லவா வையையின் இயல்பு? நின் காமத்தையும் வையையைச் சார்ந்ததாக வைத்து எண்ணுவாயாக.

அருகு-பக்கத்தில். பதி - வாழும் இடம். அம்பி - ஓடம். தாழ்ப்பிக்கும்-தாமதிக்கச் செய்யும். குருகு-நாரை, கொக்கு முதலிய நீர்ப்பறவைகள்; குருகு என்பதே ஒரு வகைப் பறவையின் பெயர் என்றும் கூறுவர். இரை தேர - இரை தேட. கிடக்கும்-ஓடாமல் தேங்கி நிற்கும். காரில் - கார் காலத்தில். இளவேனில் - இளவேனிற் காலத்தில். காரில் தாழ்ப்பிக்கும், வேனிலில் கிடக்கும் என்று முறையே கூட்டிப் பொருள் கொள்ள வேண்டும்; இதனை நிரல் நிறை என்று சொல்லுவார்கள். 'காமம்' என்ற சொல் மூலத்தில் இல்லை. பரிமேலழகர் உரையைக் கொண்டு அமைந்தது. வயமாக - வழியாக; சார்ந்ததாக. வை-வைத்து எண்ணுக.

'மேல் வையைப் பெருக்கன்றே என்றதனையல்லது அதன் இயல்பு கூறிற்றிலள்; கூறுவாள் இதனால் அதன் இயல்பு கூறி, இவ்வொப்புமை உண்மையான் அதன்கண் அவனொடு நுகர்ந்த நுகர்ச்சி இன்னும் ஒழிந்தபாற்று அன்று என்றாளாம்' என்பார் **பரிமேலழகர்.** ●

முதலில் அவள் வையைப் பெருக்கைப் பற்றிச் சொல்வது போலச் சொன்னாள். அவள் கோபம் மிக்கது. அந்தப் பெருக்கை உவமை காட்டிப் பொதுவாக அவன் காமத்தைப்பற்றிக் கூறினாள். அவளுடைய சினம் மேன்மேலும் மிகுதியாயிற்று. அவன் இற்பரத்தையுடன் நீர் விளையாட்டு அயர்ந்தது முதலியவற்றை வெளிப்படையாக உரைக்கத் தொடங்கிவிட்டாள்.

காதற்பரத்தை: வேகமாக ஓடும் ஆற்றின் இனிய புனலிலே செல்பவர்களுக்கு அந்த வேகத்தோடு செல்லும் புணை பற்றிக் கொள்ள உதவுகின்றது. அந்தத் தெப்பக் கட்டை தன்னைப் பற்றிக் கொண்டாரின் போக்குக்கும் நீரின் போக்குக்கும் ஏற்றபடி போகுமேயன்றித் தனக்கென்று எந்த விதமான இயக்கமும் இல்லாதது. எந்தச் சமயத்தில் பற்றிக் கொள்ளலாம் என்று பார்த்திருந்து வெளவிக் கொள்ளுவதில் வல்லவர்களாகிய மகளிர் நீர் விளையாட்டிலே நின் மார்பினையே தெப்பமாகக் கொள்ளுகிறார்கள். அவர்கள் இழுத்த இழுப்புக்கெல்லாம் உட்படும் மார்பை உடையாய் நீ. அப்படி யாவரும் காணப் புனல் விளையாட்டு அயர்ந்தது மாத்திரம் அன்றி, பிறிதேனும் அச்சமின்றி அவர்களோடு இரவு முழுவதும் தங்கினாய். அப்படி நீ இருந்தும் அவர்கள் மனம் நிறைவு பெற்றிருக்க மாட்டார்கள். நின்னைப் பிரிந்தமையால் அவர்கள் மிகவும் துன்புறுகிறார்கள். நின் பிரிவினால் அவர்களை நீ எரித்தாய். அது மாறும்படி, அந்தப் பிரிவினால் உண்டான துன்பு அவியும்படி, நீ அவர்களை அணைந்து இரவும் பகலும் இருந்தாய். இப்போது இங்கே வந்திருக்கிறாய். வையையில் உடைந்துவிட்ட மடையை அடைத்த பிறகுங்கூட அடைத்த இடத்திலிருந்து பின்னும் ஊற்றெடுத்து வரும் நீரைப்போல, நீ அவர்களை அணைந்த பிறகும், வருந்தும்படி இங்கே வந்துவிட்டாயே! அவர்கள் உன் பிரிவால் மறுபடியும் கலங்கிக் கண்ணீர் வார நிற்பார்களே! அவர்கள் நெஞ்சம் கனலெழுந்து பொருமுமே! அப்படி யெல்லாம் ஆகும்படி நீ இங்கே வராதே.

" செல்யாற்றுத் தீம்புனலில் செல் மரம் போல
வவ்வுவல்லார் புணை ஆகிய மார்பினை;
என்னும் பனியாய் இரவெல்லாம் வைகினை;
வையை உடைந்த மடை அடைத்தக்கண்ணும்
பின்னும் மலிரும் பிசிர்போல இன்னும்,
அனற்றினை, துன்பு அவிய நீ அடைந்தக்கண்ணும்
பனித்துப் பனி வாரும் கண்ணவர் நெஞ்சம்
கனற்றுபு காத்தி வரவு."

● "ஓடும் ஆற்றினது இனிய புனலிலே செல்லும் தெப்பக் கட்டைபோல வெளவிக் கொள்ளுதலில் வல்ல மகளிருக்குத் தெப்பமாக உதவும் மார்பை உடையாய்; சிறிதளவேனும் அஞ்சாமல் இரவு முழுவதும் அவர்களோடு தங்கினாய். வையையில் உடைந்த மடையை அடைத்த பொழுதும் பின்னும் அதில் ஊற்றெடுக்கும் நீரைப்போல, மனம் வெப்பம் அடையும்படி செய்த துன்பம் நீங்குமாறு நீ அடைந்தபொழுதும் இன்னும் நடுங்கித் துளிக்கும் நீர்த்துளி ஒழுகும் கண்ணையுடைய அம் மகளிருடைய நெஞ்சம் புழுங்கச் செய்து இங்கே வருவதை நீக்குவாயாக."

செல் யாறு - ஓடும் ஆறு. தீம்புனல்-இனிய நீர். மரம்: ஒரு மரப்புணை என்பார்; மரக்கட்டையும் ஆம். வவ்வு-வவ்வுதல்; முதல்நிலைத் தொழிற்பெயர். இப்பரத்தையையே நினைந்து கூறினாலும் பன்மையிற் கூறினான், அங்ஙனம் கூறுவது வழக்கமாதலின். புணை-பற்றுக்கோடு. மார்பினை-மார்பையுடையாய்; மார்பை உடையாயாகி இரவு தங்கினை யென்று ஒன்றாகப் பொருள் செய்வதும் பொருந்தும். என்னும்-எவ்வளவும். பனியாய்-நடுங்காய்; அஞ்சாயாகி. வைகினை-தங்கினாய்.

மலிரும்-ஊற்றெடுக்கும். பிசிர் - ஊற்றுநீர். அனற்றினை துன்பு-அனலப் பண்ணின நின்னால் உண்டான துன்பம்; அனற்றினை: வினையாலணையும் பெயர். அவிய-கெட.

கனற்றுபு - வெப்பச் செய்து. இன்னும் கனற்றுபு என்று சேர்த்துப் பொருள் கொள்ள வேண்டும். கனற்றுபு வரவு காத்தி என்று கூட்டுக. காத்தி - காப்பாயாக; ஒழிவாயாக என்றபடி.

'தனக்கென ஒரு செலவின்றி யாற்றின்கட் செல்கின்ற புனல் வழியே செல்லும் மரம்போல' என்பர் **பரிமேலழகர்.** ●

இதைக் கேட்ட தலைவன் மேலே கூறலானான்.

**தலைவன்:** நடந்ததைச் சொல்லி விடுகிறேன். நான் ஒரு தடாகத்திலே குளித்தேன். அந்தப் பைந்தடத்தின் கரையில் ஒரு பெண் நின்றாள். தானும் குளிக்க வேண்டுமென்று எண்ணினாளோ என்னவோ; கரையில் நில்லாமல் நீரிலே மூழ்கினாள்; மூழ்கி எழுந்து என்மேல் மயங்கி விழுந்தாள். நான் அதுகண்டு எழுந்து அவளை அணுகித் தூக்கச் செல்லுவதற்குள் அவளே எழுந்துவிட்டாள். அவள் காமம் நுகரும் பருவம் உடையவள் அல்லள். உடையவளானால் யான் எடுக்குமட்டும் அப்படியே கிடப்பாள் அல்லவா? அவளைத் தவிர, தான் அணிந்த கோதையைப் போல என் மார்பினுள் அழுந்தி அணையப் பெற்றாள் வேறு யார்? நான் அவளோடு ஆடிய ஆறு யாது?

**" நல்லாள் கரை நிற்ப நான் குளித்த பைந்தடத்து**
**நில்லாள், திரை மூழ்கி நீங்கி எழுந்து என்மேல்**
**அல்லா விழுந்தாளை எய்தி எழுந்தேற்று யான்**
**கொள்ளா அளவை எழுந்து ஏற்றாள்; கோதையின்**
**உள் அழுத்தியாள் எவளோ?**
**தோய்ந்தது யாது?" என.**

● "ஒரு பெண் கரையில் நிற்க, நான் குளிதத பசிய குளத்திலே அவள் கரையிலே நில்லாதவளாய் நீரிலே மூழ்கிப் பின் அங்கிருந்து எழுந்து என்மேல் மயங்கி விழுந்தவளை

அணுகி எழுந்து நான் எடுப்பதற்குள் அவளே எழுந்து விட்டாள். கோதையைப் போல என் மார்பினுள் அழுத்தப் பட்டவள் வேறு யார்? நான் அவளுடன் படிந்தது எந்த ஆறு?'' என்று தலைவன் கூற.

நல்லாள்-பெண். திரை என்றது இங்கே நீரை; ஆகு பெயர். அல்லா விழுந்தானை-மயங்கி விழுந்தவளை; அல்லா- அல்லாந்து. எழுந்தேற்றல்- எழுதல். கொள்ளா அளவை- கொள்ளுவதற்கு முன். எழுந்தேற்ருள்-எழுந்தாள். கோதையின்-மகளிர் அணியும் மாலையைப் போல. உள் அழுத்தியாள்- என் மார்பினுள் அழுத்தப் பெற்றவள்; என்னைத் தன் கோதைக்குள் அழுத்திக் கொண்டவள் என்றும் கூறலாம். தோய்ந்தது- படிந்தது; நீராடியது. ●

**காதற்பரத்தை:** *நீயும் அவளும் ஆடிய ஆறு யாதென்று கேட் கிருய்? அதை என் வாயினுல் சொல்ல வேண்டுமென்று நீ விரும்பினுல் நான் சொல்கிறேன். நீ தெளிவாக அறிந்துகொள். வேறு எங்கோ இருக்கிற ஆறு அது? இந்த வையை ஆறுதான்.*

> '' தேறித் தெரிய உணர்தி; பிறிதும் ஓர்
> யாறு உண்டோ? இவ்வையை யாறு ''

● ''நன்ருகத் தெளிந்து அறிந்து உணர்வாயாக; வேறு ஓர் ஆறும் உண்டோ? நீ ஆடியது இந்த வையை ஆறுதான்.''
தேறுதல்-தெளிதல். தெரிதல்- ஆராய்தல். ●

இதை கேட்ட தலைவன் மறுபடியும் ஆணையிட்டுச் சொல்லலானுன்.

**தலைவன்:** *நான் குளத்தில் அல்லவா குளித்தேன்? அப்படி இருக்க, நீ வையை ஆறு என்று சொல்லுகிற முரண் பாட்டுக்குக் காரணம் என்ன? நான் சொல்வதில் உனக்கு நம்பிக்கை இல்லையா? தண்பரங்குன்றத்தின் தலையைக் கையால் தொட்டு ஆணையாகச் சொல்கிறேன்.*

"இவ்வையையாறு என்ற
மாறு என்னை? கையால்
தலை தொட்டேன் தண் பரங்குன்று"

● "நான் கடலில் நீராடியது உண்மையாக இருக்க, நீ இந்த வையை ஆறு என்று சொன்ன மாறுபாடு ஏன்? தண்பரங்குன்றின் தலையை என் கையால் தொட்டு ஆணையிட்டேன்."

மாறு-மாறுபாடு. என்னை-ஏன்; என்ன காரணம். கையால் தலைதொட்டு ஆணையிடுதல் மரபு. தண் பரங்குன்று-குளிர்ச்சியான திருப்பரங்குன்றத்தை. ●

காதற்பரத்தையின் ஊடல் தணியாமல் இருந்தமையால் தலைவன் திருப்பரங்குன்றத்தின்மேல் ஆணையிட்டுச் சொன்னான். இவ்விருவரிடையிலும் நடைபெறும் வாக்குவாதத்தைக் காதற் பரத்தையின் வீட்டிலுள்ள முதிய பெண்கள் கேட்டார்கள். தம்முடைய மகளுடைய ஊடல் எல்லை கடந்து சென்றுவிட்டதை உணர்ந்தனர். தலைவனுடைய பொறுமைக்கும் எல்லை உண்டு அல்லவா? ஆதலின் இனியும் அவளுடைய ஊடல் நீட்டித்தால் அவர்களிடையே உள்ள உறவு முறிந்துவிடும் என்று அறிவார்கள். ஆகவே காதற்பரத்தைக்கு அவர்கள் நல்லுரை கூறலானார்கள்.

பெண்டிர்: பெண்ணே, நீ இன்னும் சினத்தோடு இருத்தல் முறையன்று. கோபத்தால் மை உண்ட நின் கண்கள் சிவந்திருக்கின்றன. அந்தச் சிவப்பைக் கண்டு தலைவன் அஞ்சுகிறான். அவனிடத்தில் உள்ள கோபத்தை விட்டுவிட்டு அவனோடு அளவளாவத் தொடங்குவாயாக. இந்த ஊடல் அதிகமாகிவிட்டால் காதல் முறிந்துபோகும். எதையும் அளவிலே நிறுத்திவிட வேண்டும். ஆண்மகனது பொறுமைக்கு எல்லை உண்டு.

அந்த எல்லை கடக்கும்படி நீ செய்யக்கூடாது. உன்னுடைய **துனி** (ஊடல்) மிகுதிப்பட்டால் இவ்வளவு காலம் வளர்ந்த காமம் கெட்டுவிடும். இவன் மனம் கலங்கியிருக்கிருன். மேலும் நீ கலக்கத்தை அதிகமாகக் கொள்ளும்படி கோபித்தால் இவன் போய்விடுவான். அப்பால் நீ இவனைத் தேடிச் செல்ல வேண்டியிருக்கும். வலிய இருளில் அவ்வாறு நீ செல்லாதே. அது **பிழை** ஆகும்.

**" சினவல்; நின் உண்கண் சிவப்பு அஞ்சுவாற்குத்**
**துனி நீங்கி ஆடல் தொடங்கு; துனி நனி**
**கன்றிடின் காமம் கெடூஉம்; மகள்! இவன்**
**அல்லா நெஞ்சம் உறப்பூட்டக் காய்ந்தே**
**வல் இருள் நீயல்; அது பிழை ஆகும்" என**

● "சினங் கொள்ளாதே; நின் மையுண்ட கண்ணினது சிவப்பைக் கண்டு அஞ்சுகின்ற தலைவன் பொருட்டு உன் ஊடல் நீங்கி அவனோடு அளவளாவு தலைத் தொடங்கு; ஊடல் நன்ருக மிகுமாணல் காமம் கெட்டுவிடும்; மகளே! இவன் தன் நெஞ்சத்தில் கலக்கத்தை மிகுதியாக ஏற்றுக்கொள்ளும்படி நீ இவனைக் கோபித்து (இவனைப் போகவிட்டு, அப்பால் இவனைத் தேடிக்கொண்டு) வலிய இருளில் நீங்காதே; அது குற்றமாகும்" என்று (வீட்டிலுள்ள முதிய பெண்டிர் சொல்ல என்று சொல்ல வருகிருர்.)

சினவல்-கோபிக்காதே. உண்கண்-மையுண்ட கண். துனி-ஊடல். ஆடல்-அளவளாவி இன்புறுதல்; 'விளையாடல்' **(பரிமேலழகர்.)** நனி-நன்ருக. கன்றிடின்-மிகுதியாணல். மகள்: விளி. 'அதற்குக் காரணமாகிய மகள் இவன் சொல்லிய பேதைப் பருவத்தாள்' என்று, இவள் என்பதற்கு உரை விரிப்பர் **பரிமேலழகர்.** அல்லா-அல்லாப்பு; கலக்கம். நீயல்-நீங்காதே, 'பிழை: நீங்கின இடனறிந்து ஊடி இனிதின் உணரும் ஒழுக்கத்திற்குப் பிழையாம்' **(பரிமேலழகர்.)**

இவ்வாறு முதிய பெண்டிர் இடித்துரைக்கவும், தலைவனிடமிருந்து தூதாகச் சென்று சமாதானம் செய்பவர்கள் அவளுடைய கோபத்தைத் தணிக்கவே அவள் ஊடல் நீங்கித் தலைவனோடு அளவளாவத் தொடங்கினாள். அவளுடன் தலைவன் இன்புற்றிருந்தான். அடுத்த நாள், வையையில் நீர் வந்ததையும், அதில் தலைவன் இற்பரத்தையுடன் விளையாடியதையும், அதை உணர்ந்த காதற்பரத்தை ஊடியதையும், பின்பு ஊடல் தவிர்ந்ததையும், தலைவனும் அவளும் அளவளாவியதையும் தலைவனுடைய மனைவியாகிய தலைவி கேள்வியுற்றாள். இப்பொழுது அவளுக்குத் தலைவனிடத்தே கோபம் உண்டாயிற்று.

அவளுடைய ஊடலைத் தணிவிப்பதற்கு யாரைத் தூதாக அனுப்பலாம் என்று யோசித்தான் தலைவன். பாணனுடைய மனைவியும் ஆடல் பாடலில் வல்லவளுமாகிய விறலியைத் தலைவியின் உள்ளம் குளிரும்படி பேசி அவள் ஊடலை ஆற்றி வரும்படி அனுப்பினான். அவள் தலைவன் நல்லவனென்று சொல்ல, அதுகேட்ட தலைவி தான் கேள்வியுற்ற அத்தனையும் ஒன்றுவிடாமல் சொன்னாள்; வையையில் வெள்ளம் வந்தது முதல் காதற்பரத்தை தன் ஊடல் தவிர்ந்து தலைவனுடன் அளவளாவியது வரைக்கும் சொன்னாள்.

மேலே சொன்னவற்றையெல்லாம் சொல்லிப் பின்னும் சொல்லுகிறாள்; விறலியினிடம் சொல்லுகிறாள்.

**தலைவி:** விறலியே! முன்னே சொன்னபடியெல்லாம் வீட்டில் உள்ள முதிய மகளிர் சொல்லிக் காதற்பரத்தைக்கு அறிவுறுத்தினார்கள். பிறகு தலைவனுக்குத் தூதாகவந்து சமாதானம் செய்ய வல்லவர்களாகிய பாணன் முதலியவர்கள் அவளைக் கெஞ்சியும் பாராட்டியும் பல வகையாகப் பாடுபட்டு அவள் ஊடலைத் தெளிவித்தார்கள்.

அவள் ஊடல் தவிர்ந்தாள். பிறகு அந்த இருவரும் மதுவுண்டு களிப்பார்கள். மகிழ்ச்சி மிக்கு வையையாற்றிலே குளித்து விளையாடுவார்கள். காமம் மேன்மேலும் கொழுந்துவிட்டுப் படரும்படியாக ஒருவருக்கு ஒருவர் இன்பத்தை அளிப்பார்கள். பிறகு ஊடல் கொள்வார்கள். அந்த ஊடல் நீங்கிப் பல பல இடங்களுக்குச் சென்று அங்கங்கே விளையாடுவார்கள்.

" இல்லவர் ஆட இரந்து பரந்து உழந்து
வல்லவர் ஊடல் உணர்த்தர, நல்லாய்!
களிப்பர்; குளிப்பர்; காமம் கொடிவிட
அளிப்ப; துனிப்ப; ஆங்காங்கு ஆடுப.

● விறலியே! (முன்னே சொன்னபடி) வீட்டிலுள்ள முதிய பெண்டிர் சொல்ல, ஊடலைத் தெளிவிப்பதற்கு வல்லவர்களாகிய பாணன் முதலியோர் சேரிப் பரத்தையை இரந்தும், புகழ்ந்தும் பல படியாக வருந்தி அவள் ஊடலைத் தெளிவிக்க, அவளும் தலைவனும் மது உண்டு களிப்பார்கள்; ஆற்றிலே குளிப்பார்கள்; காமம் கொடியோடிப் பரவ ஒருவருக்கு ஒருவர் இன்பத்தை வழங்குவார்கள்; ஊடல் கொள்வார்கள்; அங்கங்கே விளையாடுவார்கள்.

இல்லவர்-வீட்டில் உள்ளார்; முதிய பெண்டிர். ஆட-சொல்ல. இரந்து-கெஞ்சிக் கேட்டு. பரந்து-பரவி; பாராட்டி. உழந்து-வருந்தப்பட்டு. வல்லவர் - ஊடலுணர்த்த வல்லவராகிய தூதுவர். இவரை வாயில்கள் என்று சொல்வார்கள். உணர்த்தர - தெளிவிக்க. நல்லாய்-பெண்ணே; விறலியை விளித்தது. அவள் தலைவியின் ஊடலைத் தணிப்பதற்குத் தலைவனிடமிருந்து தூதாக வந்தவள்.

களித்தல்-மதுவுண்டு மகிழ்தல். கொடி விட-படர. அளிப்ப-வழங்குவர். துனிப்ப-ஊடுவர். "ஊடுதல் காமத்துக்கு இன்பம்" ஆதலின் மீட்டும் ஊடுதலைச் சொன்னார்.

ஆடுப-விளையாடுவார்கள்; இன்புறுவார்கள் என்பதும் பொருந்தும். 'அவ்விருவருங் கூடி மதுவாற் களிப்பார்கள்; களியால் வையைக்கண் குளிப்பார்கள்; குளித்துக் காம மிகுதியால் கலப்பார்கள்; கலந்து அதற்கு இன்பம் உண்டாகப் புலப்பார்கள்; அவ்வவ்விடந்தோறும் விளையாடா நிற்பர்' என்று தொடர்புபடுத்திக் கூறுவர் **பரிமேலழகர்.** ●

இவ்வாறு விறலியை நோக்கிக் கூறிய தலைவி, இத்தனைக்கும் காரணமாக இருப்பது வையையில் வந்த வெள்ளமாதலின் அந்த வையையை வாழ்த்துகிருள்.

**தலைவி:** வையை ஆறே! உன்னிடம் நீராடுவார் நெஞ்சிலே தோன்றி வளர்ந்து அமைந்த காமத்தை நீ விளைவிக்கிறாய். அந்த நிலை நினக்கு என்றும் மாருமல், வாடாமல், இருப்பதாகுக!

**105. ஆடுவார் நெஞ்சத்து அலர்ந்து அமைந்த காமம்**
**வாடற்க வையை நினக்கு.**

● வையையே! நின்பால் நீராடுவாருடைய நெஞ்சத்தில் பரவிப் பொருந்திய காமத்தை உண்டாக்கும் தன்மை எக்காலத்திலும் நினக்கு வாடாமல் இருப்பதாகுக!

ஆடுவார்-நீராடுவார். அலர்ந்து-பரவி. அமைந்த-பொருந்திய. காமம்-காமத்தை உண்டாக்கும் தன்மை; ஆகுபெயர். வாடற்க-வாடாமல் இருக்கட்டும். ●

இவ்வாறு வையையை வாழ்த்துவாளைப் போல, 'தலைவனும் அவனுடைய பரத்தையரும் இப்படியே இன்புற்றிருக்கட்டும்; இங்கே அவனுக்கு வேலை இல்லை' என்று குறிப்பித்தாள்; தூதாக வந்த விறலியின் வேண்டுகோளை மறைமுகமாக மறுத்துவிட்டாள். இதை **வாயில் மறுத்தல்** என்று சொல்லுவார்கள்.

*இதன் துறை வருமாறு:* 'என்பது, வையை நீர் விழவணியில் காதற் பரத்தை, இற்பரத்தையுடன் நீராடினான் தலைமகன் எனக் கேட்டுப் புலந்தாளைப் புலவி நீக்கிப் புணர்ந்தான் எனக் கேட்ட தலைமகள், வாயிலாகப் புக்க விறலிக்கு அவ்வையை நீர் விழவணியும் ஆங்குப் பட்ட செய்தியும் கூறி வாயில் மறுத்தது'

● *நீர்விழவணி-நீர்விளையாட்டுக் கேற்ற அலங்காரம். புலந்தாள்-ஊடினவள். புலவி-ஊடல். பட்ட-உண்டான. செய்தி-நிகழ்ச்சி.* ●

ஆசிரியன் நல்லந்துவனார் பாட்டு.

மருத்துவன் நல்லச்சுதனார் இசை.

பண்ணுப் பாலையாழ்.

★

## வையை

### மழை

நிறைகடல் முகந்துஉராய்
நிறைந்துநீர் துளும்புந்தம்
பொறைதவிர்பு அசைவிடப்
பொழிந்தன்று வானம்.

### வெள்ளம்

நிலம்மறை வதுபோல் மலிர்புனல் தலைத்தலைஇ
மலைய இனம்கலங்க மலைய மயில்அகவ
மலைமாசு கழியக் கதழும் அருவி இழியும்
மலிநீர் அதர்பல கெழுவு தாழ்வரை.
மாசில் பனுவற் புலவர் புகழ்புல
நாவிற் புனைந்த நன்கவிதை மாறாமை
மேவிப் பரந்து விரைந்து வினைநந்தத்
தாயிற்றே தண்ணம் புனல்.

### வையை

புனைபூ, அவிஆ ராதனை அழல்பல ஏந்தி
நகைஅமர் காதலரை நாள்அணிக் கூட்டும்
வகைசாலும் வையை வரவு.

### உவர் ஒலித்தல்

தொடிதோள் செறிப்பத் தோள்வளை இயங்கக்
கொடிசோ ரத்திருக் கோவை காழ்கொளத்
தொகுகதிர் முத்துத் தொடைகலிழ்பு மழுக
உகிரும் கொடிறும் உண்டசெம் பஞ்சியும்

அடி, 15. 'கொடிசே ராத்திரு' என்பதும் பாடம்.

நகில்அணி அளறும் நனிவண்டல் மண்ட
இலையும் மயிரும் ஈர்ஞ்சாந்து நிழத்த
முலையும் மார்பும் முயங்குஅணி மயங்க
விருப்புஒன்று பட்டவர் உளம்நிறை உடைத்தென
வரைச்சிறை உடைத்ததை வையை; வையைத்
திரைச்சிறை உடைத்தன்று
கரைச்சிறை: அறைகெனும்
உரைச்சிறைப் பறைஎழ ஊர்ஒலித் தன்று.

### *நீராடப் போவோர்*

அன்று, போர்அணி அணியிற்
புகழ்முகம் சிறந்தென
நீர்அணி அணியின் நிரைநிரை பிடிசெல
ஏர்அணி அணியின் இளையரும் இனியரும்
ஈர்அணி அணியின் இகல்மிக நவின்று
தணிபுனல் ஆடும் தகைமிகு போர்க்கண்
துணிபுன லாகத் துறைவேண்டும் மைந்தின்,
அணிஅணி யாகிய தாரர், கருவியர்,
அடுபுன லதுசெல அவற்றை இழிவர்,
கைம்மான் எருத்தர், கலிமட மாவினர்,
நெய்ம்மாண் சிவிறியர், நீர்மணக் கோட்டினர்,
வெண்கிடை மிதவையர், நன்கிடைத் தேரினர்,
சாரிகை மறுத்துத் தண்டா உண்டிகை
ஓர்இயவு உறுத்தர ஊர்புஊர்பு இடம்திரீஇச்
சேரி இளையர், செலவுஅரு நிலையர்,
வலியர் அல்லோர் துறைதுறை அயர,
மெலியர் அல்லோர் விருந்துபுனல் அயர,
சாறும் சேறும் நெய்யும் மலரும்
நாறுபு நிகழும் யாறுவர லாறு.

*அந்தணர் மருளுதல்*

நாறுபு நிகழும் யாறுகண்டு அழிந்து
வேறுபடு புனல்என விரைமண்ணுக் கலிழைப்
புலம்புரி அந்தணர் கலங்கினர் மருண்டு.

*பிறர் மருளுதல்*

மாறும்மென் மலரும் தாரும் கோதையும்
வேரும் தூரும் காயும் கிழங்கும்
பூரிய மாக்கள் உண்பதும் மண்டி
நார்அரி நறவம் உகுப்ப நலன்அழிந்து
வேறு கின்றுஇவ் விரிபுனல் வரவுஎனச்
சேறுடு புனலது செலவு.

*வையைப் புனல்*

வரைஅழி வால்அருவிக் கால்தா லாட்டக்
கரைஅழி வால்அருவிக் கால்பா ராட்ட,
இரவில் புணர்ந்தோர் இடைமுலை அல்கல்
புரைவது பூந்தாரான் குன்றுஎனக் கூடார்க்கு
உரையோடு இழிந்துஉராய் ஊரிடை ஓடிச்
சலப்படை யான்இரவில் தாக்கியது எல்லாம்
புலப்படப் புன்னம் புலரியில் நிலப்படத்
தான்மலர்ந் தன்றே
தமிழ்வையைத் தண்ணம் புனல்

*காதற்பரத்தை கூற்று*

விளியா விருந்து விழுவார்க்குக் கொய்தோய்;

---

அடி., 52. பாடபேதம்: 'வரையழி வாலருவி வாதாலாட்ட'

*தலைவன் கூற்று*

தளிர்அறிந்தாய் தாம்இவை.

*காதற்பரத்தை கூற்று*

பணிபுஒசி பண்ப! பண்டுஎல்லாம் நனிஉருவத்து
என்றோ துவள்? கண்ட.
எய்தும் களவுஇனி நின்மார்பில் தார்வாடக்
கொய்ததும் வாயாளோ?
கொய்தழை கைபற்றிச்
செய்ததும் வாயாளோ? செப்பு

புனைபுனை ஏறத் தாழ்த்ததை: தளிர்இவை
நீரில் துவண்ட; சேஎய்குன்றம்—காமர்
பெருக்கன்றோ வையை வரவு?

*காதற்பரத்தை கூற்று*

ஆம்ஆம்; அதுஒக்கும்; காதலங் காமம்
ஒருக்க ஒருதன்மை நிற்குமோ? ஒல்லைச்
சுருக்கமும் ஆக்கமும்; சூளுறல்; வையைப்
பெருக்குஅன்றோ? பெற்றாய் பிழை
அருகு பதியாக அம்பியின் தாழ்ப்பிக்கும்,
குருகுஇரை தேரக் கிடக்கும், பொழில்காரில்
இன்னிள வேனில்;
இதுஅன்றோ வையை? நின் [காமம்]
வையை வயமாக வை
செல்யாற்றுத் தீம்புனலில் செல்மரம் போல

---

அடி' 77. 'இதுவன்றோ வையைநின்' என்பதற்கு மேல் சொல் கிடைக்கவில்லை.

வவ்வுவல் லார்புணை ஆகிய மார்பினை;
என்னும் பனியாய், இரவெல்லாம் வைகினை;
வையை உடைந்த மடைஅடைத்தக் கண்ணும்
பின்னும் மலிரும் பிசிர்போல இன்னும்
அனற்றினை துன்புஅவிய
நீஅடைந்தக் கண்ணும்
பனித்துப் பனிவாரும் கண்ணவர் நெஞ்சம்
கனற்றுபு காத்தி வரவு.

*தலைவன் கூற்று*

நல்லாள் கரைநிற்ப நான்குளித்த பைந்தடத்து
நில்லாள், திரைமூழ்கி நீங்கி எழுந்துஎன்மேல்
அல்லா விழுந்தாளை எய்திஎழுந்து ஏற்றியான்
கொள்ளா அளவை எழுந்துஏற்றாள்;
கோதையின்
உன் அழுத்தி யான்எவளோ? தோய்ந்தது
யாதுஎனத்

*காதற்பரத்தை கூற்று*

தேறித் தெரிய உணர்நீ; பிறிதும்ஓர்
யாறுஉண்டோ? இவ்வையை யாறு.

*தலைவன் கூற்று*

இவ்வையை யாறுஎன்ற மாறுஎன்னை? கையால்
தலைதொட்டேன் தண்பரங் குன்று.

*இல்லவர் கூற்று*

சினவல் நின் உண்கண் சிவப்புஅஞ்சு வாற்குத்
துனிநீங்கி ஆடல் தொடங்கு; துனிநனி

கன்றிடிற் காமம் கெடுஉம்;மகள்! இவன்
அல்லா நெஞ்சம் உறப்பூட்டக் காய்ந்தே
வல்இருள் நீயல்; அதுபிழை ஆகும், என,

*தலைவி கூற்று*

இல்லவர் ஆட இரந்து பரந்துஉழந்து
வல்லவர் ஊடல் உணர்த்தர நல்லாய்!
களிப்பர்; குளிப்பர்; காமம் கொடிவிட
அளிப்ப; துனிப்ப; ஆங்காங்கு ஆடுப;

*வாழ்த்து*

ஆடுவார் நெஞ்சத்து அலர்ந்துஅமைந்த காமம்
வாடற்க வையை நினக்கு.